663

# காவேரி



விய - பங்குனி

-/8

# எவ்விதமான வேலைக்கும் ஈடுகொடுக்கக் கூடியவை



கட்டிட வேலையிலோ, சுரங்கத்திலே ரயில் பாதைகளைச் செப்பனிடலே எவ்வித வேலைக்கும் சுளகுப் பாரை ஈ கொடுக்கவேண்டும்.

பிரத்தியேகமான முறையில் உயர் இரும்பிலிருந்து உண்டு பண்ணப்பட்ட எங்க சுளகுப் பாரைகள் எத்தகைய கடுமையா வேலையிலும் நன்கு உழைக்கக்கூடியவை.

## டாடா அக்ரிகே

கருவிகளையே வாங்குங்கள்

வெஸ்டுகோஸ்டு, நார்த்தர்ன் சர்க்கார நீங்கலாக சென்னை மாகாணத்திற்கு வினியோகஸ்தர்கள்:-

**மெஸர்ஸ் V. கனகய்ய செட்டி & கோ.**
105, நைனியப்பநாயக்கன் தெரு,
ஜி. டி. மதராஸ்.

**மெஸர்ஸ் D. B. மதன் & கோ.**
39, ஸின்ட்ஃலன் பீச்சு,
ஜி. டி. மதராஸ்.

**தி டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAR 1947
MADRAS



19808

**தற்காப்பு**

## ஆறு வெடிகள்கொண்ட தானுக இயல்கிற கைத்துப்பாக்கி

லைசென்ஸ் வேண்டாம்

திருப்தியில்லையேல் துகை திருப்பி அளிக்கப்படும்.




நாடகம்—சினிமா இவைகளில் உபயோகிப்பதற்கும், ஆபத்தில் திருடர்களை பயமுறுத்துவதற்கும் மிகவும்உபயோகப் படக்கூடியது. உண்மையான ரிவால்வரைப் போல் உபயோகித்தவுடன் ஜ்வாலை, புகை வெளியாகும். 7½" x 4"க்கு 15 அவுன்ஸ் இடையுள்ள ஒருடஜன் வெடிகளுடன் விலை ரூ. 6—0—0. ஸ்பெஷல் செம்பு oxidized No. 666 விலை ரூ. 8—8—0. பெல்ட் உள்பட பெட்டி விலை ரூ. 2—8—0. தபால் முதலிய செலவு ரூ. 1—2—0. தனி ரிவால்வார் எண்ணை இருமாக பிரதி ஆர்டருடன் அனுப்பப்படும்

**IMPERIAL CHAMBER OF SCIENCE**

(C. K.) P.O. Ichhra, LAHORE




### உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியை பாதுகாருங்கள்.

## மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

**CALCUTTA CHEMICAL**

2 1 MAR 1947
MADRAS

அடுத்த விளையாட்டுப்
பந்தயத்தில்



அம்ருதா
ரத்த சுத்தி
திராவகம்..



கலக்கம், ஆயாச
மில்லாமல் நன்கு
விளையாடி வெற்றி
பெறச் செய்கின்
றது.

நரம்புகளை
முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம்,
ஆந்திர ஜில்லாக்கள், தமிழ்
— நாட்டுக்கு —

ஏஜண்டுகள்:-
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பேர்ஹாம்பூர், சேகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.




நாஷனல்
இன்ஷ்யூரன்ஸ கம்பெனி லிமிடெட்
7, கவுன்ஸில் ஹவுஸ் ஸ்டிரீட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனபஜார் ரோட்

★

ஸப் ஆபீஸ்:-
பெங்களூர் & மதுரை

## 1947-ஆம் ஆண்டு

## உங்களுக்கு வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றையதினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்ட்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப் போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப் போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேருவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாக பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும். தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

**Shree Swami Yogiraj Jyotish Asram,**

**C. K. PHAGWARA.** (Kapurthala State)

## மார்க்கெட்டுகளில் பிரசித்திபெற்றது




குணம், மணம், ருசி இவைகளில் இணையற்றது

## வி. எச். ஆர். பெருங்காயம்தான்

**வர்ஜீவன்தாஸ் ஹிர்ஜி & Co.,**

**194, கோவிந்தப்பநாயகன் தெரு, — ஜி. டி. மதராஸ்.**

பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்குரிய
மிகச் சிறந்த சாதனம்

# நாஷனல்
# ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களில் 15 ரூபாய் ஆகிறது

**வருஷ மொன்றுக்கு $3\frac{1}{2}$ சத வீதம் கூட்டு வட்டி**

அதாவது

**வருஷ மொன்றுக்கு $4\frac{1}{6}$ சத வீதம் தனி வட்டி**

இன்கம் டாக்ஸ் கிடையாது

**தொகுதிகள்:** ரூ. 5, ரூ. 10, ரூ. 50, ரூ. 100,
ரூ. 500, ரூ. 1,000, ரூ. 5,000

ரூ. 5. ஸெர்டிபிகேட்டுகளை 18 மாதங்களுக்குப் பிறகும், மற்றவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு எப்போதாகிலும் இந்தியா, பர்மா, ஸிலோன் நாடுகளிலுள்ள எந்த தபாலாபீஸிலும் பணமாக மாற்றிக்கொள்ளலாம்

இவைகளை

தபாலாபீஸுகளிலும்

அல்லது

சிறு சேமிப்புத் திட்டத்தைச் சேர்ந்த அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமிருந்தும் ஸேவிங்ஸ் பீரோக்களிலும் பெறலாம்.

P.N.S.O. Madras








EASTERNS 379.

# BMB மிஷீன் கலப்பைகளின் வெளிப்படையான உண்மைகள்

1. ஒரு நாளைக்கு சுமார் 2 ஏக்கரா பூமியை ஏர் உழும் 10 ஏக்கராவை பரம்படிக்கும்.
2. களைவெட்டுதல், பயிரிடுதல் விதை விதைத்தல், உரமிடுதல் முதலிய வேலைகளைச் செய்யவும்.
3. சுமை இழுக்கவும், பெல்டினுல் ஓட்டப்படும் யந்திரங்களை உபயோகிக்கவும் உதவும்
4. மிகக் குறைந்தசெலவிலும், அதிக கவனிப்பில்லாமலும், எல்லாவித கால நிலைகளிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் உழைக்கும்



1. குதிரை ஓட்டம் (H.P)
3. குதிரை ஓட்டம் (H.P.)
6. குதிரை ஓட்டம் (H.P.)

முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

## ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்.

மவுண்ட்ரோட். மதராஸ்.

கிளைகள்: பங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn).

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

●

சிறந்த சேவை செய்து வருகிறது

**நெருப்பு, மோட்டார், விபத்து**

முதலிய

**சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.**

**மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000**

●

கிளைகள் : { பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, ராவல்பிண்டி.

●

பிரதம ஏஜண்டுகள் :

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்**

மதுரை ETC.

FAS-344

இன்றியமையாதது




வர்ணம் குழைக்கும் அச்சிறு தட்டு, வர்ணம் தீட்டுபவருக்கு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவுக்கு **மலபார் லிம்டா சோப்,** தங்கள் மேனியின் சௌந்தரியத்தைப் பாதுகாக்க இன்றியமையாதது என்று நாகரீக நங்கையர்களுக்குத் தெரியும்.






மலபார்

# லிம்டா சோப்

வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்

கள்ளிக்கோட்டை

புரோப்ரைடர்ஸ்: சேட். N.P.&Co. கள்ளிக்கோட்டை..பம்பாய்..சென்னை...




## ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வர்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு பாதுகாக்கிறது.



# WOODWARD'S GRIPE WATER

*keeps baby well*

J-WW 111-111 W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.

12A Lingha Chetty Street — G. T. MADRAS.




சிறந்த டாக்டர்கள் இதை வைத்திய சாஸ்திரத்திற்கே ஒரு கண் கோடை போலப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்பி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிரைகல் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

**லிவர்க்யூர்** பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.


# பொருளடக்கம்


விய மலர் 6 — பங்குனி இதழ் 8



சுய நிர்ணய உரிமை ... 12

புரட்சிக்கனல் அருணா ... 14
யோகி சுத்தானந்த பாரதியார்

பெட்டி ... 17
ரா. ஸ்ரீ. தேசிகன்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் ... 21
ராமய்யா

"க்ளுக் பத்து" ... 27
டாக்டர் வே. ராகவன்

வைத்திய சங்கடம் ... 33
எம். எஸ். கமலா

அலாவுத்தீன் பூதம் ... 44
நா. கி. நாகராஜன்

சித்ரா ... 49
கே. சுந்தரம்மாள்

பாசமும் மோசமும் ... 60
சுவை

"தனியொருவனுக்- குணவிலையெனில்" ... 66
வே. சாரநாதன்

திலோத்தமையின் சமூகசேவை ... 69
ரா. வேங்கடாசலம்

போத சத்துவம் ... 73
கௌரீ


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# காவேரி

| விய<br>மலர் 6 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | பங்குனி<br>இதழ் 8 |
|---|---|---|


## சுய நிர்ணய உரிமை

வெள்ளையன் வெளியேறும் தேதியைக் குறிப்பிட்டு விட்டான். 1948 ஜூன் மாதத்திற்கு அப்புறம் இந்நாட்டை ஆளும் பொறுப்பை இனி பிரிட்டிஷார் ஏற்க முடியாது; அப்படியே அதைச் செய்ய விரும்பினாலும் அதற்குப் போதிய பிரிட்டிஷ் துருப்புக்களோ அல்லது பிரிட்டிஷ் அதிகாரத்துக்கு கீழ்ப் படிந்து நடக்கும் இந்திய உத்யோகஸ்தர்களோ கிடையாது என்று பஹிரங்கமாகக் காமன்ஸ்சபை விவாதத்தில் தெளிவாக்கி விட்டார்கள் பிரிட்டிஷ் கவர்மெண்டார்.

இம்முடிவு பிரிட்டிஷ் கட்சிகளைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது என்பது உண்மை. ஆனால் விஷயம் விளங்கிய பின், அவர்களுக்கு வேறு வழியில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதாய்விட்டது.

இந்திய மக்கள் இவ்வுண்மையை அறியாமலில்லை. ஆனால் பிரிட்டிஷ் மக்கள் இதை அவ்வளவு சுலபமாக ஒப்புக் கொண்டு வெளியேறச் சித்தமாவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

அதிகாரத்தை யாரிடம் ஒப்படைத்து வெளியேறுவது என்பதுதான் பிரச்னை. காபினட் தூது கோஷ்டியார் குறிப்பிட்டபடி எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அரசியல் நிர்ணயசபை மூலம் புதிய அரசியல் திட்டத்தை வகுத்துக் கொண்டால், அதனிடம் அதிகாரத்தை மாற்றத் தயார் என்று கூறியுள்ளார்கள், பிரிட்டிஷ் கவர்மெண்டார். அப்படி ஏகோபித்த அரசியல் திட்டம் வகுக்க இயலவில்லை என்றால், தற்காலீக மத்திய தேசிய அரசாங்கம் ஒன்று ஏற்படுத்திக் கொள்வதிலாவது எல்லாக் கட்சிகளும் முன்வந்தால் அதிகாரம் அதனிடம் ஒப்புவிக்கப்படும். அப்படி இதுவும் சாத்தியமில்லாமற் போனால் அப்பொழுது இருக்கும் நிலைமைக்கு ஏற்றவாறு ஏதாவது ஒரு மாதிரியான மத்திய அரசாங்கத்திடமோ, அல்லது சில குறிப்பிட்ட பாகங்களில் மாகாண கவர்மெண்டுகளிடமோ அல்லது எதைச் செய்தால் நியாயமாகவும், இந்திய மக்களின் நலனுக்குகந்த தாயு மிருக்குமோ அப்படிச் செய்யப்படும். இவைதான் ஆட்லிபிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவை.

இந்தப் பிரிட்டிஷ் கவர்மெண்டாரின் தீர்மானத்தைப்பற்றிக் காங்கிரஸ் காரியக் கமிட்டி தன் அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளது. அறிக்கையை வரவேற்று, அதிகாரத்தைப் பிரிட்டிஷாரிடமிருந்து பெறும் விஷயத்தில் முஸ்லிம் லீக்கின் ஒத்துழைப்பைக் கோரியிருக்கிறது. ஜின்னா கோஷ்டியின் விதண்டாவாதம் எப்படியிருக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அநேகமாக அவர்கள் ஒத்துழைக்கமாட்டார்கள் என்றே தோன்றுகிறது.

தன் அபிப்பிராயத்தை வெளியிடுவதில், சில குறிப்பிடத் தக்க அபிப்பிராயங்களை காங்கிரஸ் காரியக் கமிட்டி வற்புறுத்தியிருக்கிறது. அவை பின்வருமாறு :—

"இந்திய அரசியலே வகுக்கும் விஷயத்தில் பலாத்காரம் இருக்கமுடியாது. அரசியல் நிர்ணய சபை வகுக்கும் அரசியல் திட்டத்தை, எந்தப் பிரதேசங்கள் சுயேச்சையாக அங்கீகரிக்கின்றனவோ, அவைகளேத்தான் அது கட்டுப்படுத்தும். அதோடு எந்த மாகாணமோ, அல்லது மாகாணத்தின் பாகங்களோ, இந்த அரசியல் திட்டத்தை ஒப்புக்கொண்டு, யூனியன் அரசாங்கத்தில் பங்கு எடுத்துக்கொள்ள விரும்புகின்றனவோ, அவைகளே தடுக்க யாருக்குமுரிமையில்லே. எனவே பலாத்காரம் என்பதே இவ்விஷயத்தில் எப்பாதையிலும் இருக்கமுடியாது. பொது மக்கள்தான் தங்களுடைய வருங்கால அமைப்பை நிர்ணயித்துக்கொள்ள அதிகாரம் பெற்றவர்கள்."

இத் தீர்மானங்களிலிருந்து, பல சிக்கலான பிரச்னைகள் தீர வழியிருக்கின்றன. அஸ்ஸாம் மாகாணம் யூனியனுடன் சேர விரும்பினுல், அதைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லே என்று ஏற்படுகிறது. அதே போல் எல்லேப்புற மாகாணம் பாகிஸ்தான் எல்லேக்குள் இருப்பினும் யூனியன் கவர்மெண்டுடன் சேரலாம். பஞ்சாபிலுள்ள பல பாகங்கள் யூனியன் கவர்மெண்டுடன் சேர விரும்பலாமல்லவா? இதை எப்படி அப்பிரதேச மக்கள் தெரிவித்துக் கொள்ள முடியும்? பஞ்சாபை இரண்டு பாகங்களாகப் பிரித்து விடுவதால் தான் அங்கே சமாதானம் நிலவச் செய்யலாம் என்று காங்கிரஸ் காரியக்கமிட்டி கூறுகிறது. இந்தப் பிரிவினேத் திட்டம் அங்குள்ள சிக்கலான பிரச்னேயைத் தீர்த்துவைக்க மிகவும் உகந்தது என்று கூறியுள்ளது. இம்முடிவின்படி பஞ்சாப் மாகாணம் பிரிக்கப்பட்டால், வடகிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் 73.3 சதவிகிதம் முஸல்மான்களும், 26.6 சதம் முஸல்மான் அல்லாதவர்களும் இருப்பார்கள். தென் கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் 32.6 சதவிகிதம் முஸல்மான்களும், 67.4 சதவிகிதம் முஸல்மான் அல்லாத ஜாதியினரும் இருப்பார்கள். இப்பிரிவினேத் திட்டத்தை ஒப்புக்கொள்வதைத்தவிர வேறு வழியில்லே. இல்லேயேல் பாகிஸ்தானத்திற்குள் ஏராளமான ஹிந்துக்களும் சிக்கியர்களும் அவதிப்பட நேரிடும். இவ்வகையிலேயே வங்காளத்தையும், கிழக்கு வங்காளம், மேற்கு வங்காளம் என்று பிரிப்பது தான்முறை. கிழக்கு வங்காளத்தில் பெருவாரியாக முஸல்மான்கள், மேற்கு வங்காளத்தில் பெருவாரியாக ஹிந்துக்கள் இருப்பார்கள். நாட்டில் அமைதி நிலவி, சாவதானமாக நாம் அதிகாரத்தைப் பிரிட்டிஷாரிடமிருந்து பெறவேண்டுமானுல், இப்பிரிவினேகள் அவசியம். அப்பொழுதுதான் ஜின்னு கோஷ்டியினர் தங்கள் சுயநிர்ணய உரிமைப்படி நடந்துகொள்ள வசதி ஏற்படும்.

இப் பிரிவினேத் திட்டங்களே முஸ்லிம் லீக் ஏற்குமா என்பதுதான் பிரச்னே. ஏற்காது என்பதில் ஐயமில்லே. அதற்காக நாம் பஞ்சாபிலுள்ள இந்துக்களேயும், சீக்கியர்களேயும் பாகிஸ்தானத்திற்குள் அவர்கள் சம்மதமின்றித் திணிக்க ஒருகாலும் ஒப்பமுடியாது. இன்று பஞ்சாபில் நடப்பதென்ன? எல்லேப்புற மாகாணத்திலும் இந்தக் கலவரங்கள் தலேதூக்கிவிட்டன. இனி எவ்வகையிலாவது அம் மாகாணங்களேப் பிரிப்பதுதான் நலம் என்று தோன்றுகிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டி இதைச் சாதிப்பதில் முனேந்து தீவிர முயற்சி எடுத்துக்கொண்டால்தான் நாட்டில் அமைதி நிலவ ஹேதுவாகும். ஜின்னு கோஷ்டியினரும் சுயநிர்ணய உரிமைப்படி பாகிஸ்தான் அடைய இப்பிரிவினேகளுக்கு ஒத்துக்கொள்வதே நேர்மையான வழி. அப்படி ஒத்துக்கொண்டால் பாகிஸ்தான் கிட்டுவது சித்தம். இல்லேயேல் வீண் கர்ஜனேதான், அது மாத்திரமா? ரத்தக்களரி, உள்நாட்டுக் கலகம்.

முஸ்லிம் லீக் இவ்விஷயங்களில் நேர்மையான முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்க இடமில்லே. ஆனுல் இப்பிரிவினேத் திட்டங்களேக் கண்டு கலவரமடைந்து அரசியல் நிர்ணய சபையில் தாங்களே பங்கு எடுத்துக் கொள்ள முன் வந்தாலும் ஆச்சரியமில்லே. முஸ்லிம்களே இப்பிரிவினேத் திட்டங்கள் ஒரு கலக்குக் கலக்கும் என்பதில் ஐயமில்லே. இதைக் கைவிடச் செய்யக் காங்கிரஸுடன் ஒத்துழைப்பதாக ஜின்னு நடித்தாலும் நடிக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது. என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

# புரட்சிக்கனல் அருணா



யோகி சுத்தானந்த பாரதியார்

அஞ்சா நெஞ்சு; ஆண்களுக்குரிய ஆண்மை; பெண்மைகளுக்குரிய வசீகரமான அடக்கம்; எப்போதும் தேசமே நினைப்பு; கட்டென்பதை வெட்டித் தள்ளும் கூரிய நாவன்மை; சுதேசம் அன்னியருக்கு அடிமையா யிருப்பதைச் சிறிதும் பொறுக்காத பரபரப்பு; அடிமைச் சங்கிலியைத் தகர்த்தெறியும் சம்மட்டிப்போடு — இவையே அருணா. 1942ஆம் ஆண்டுகளுக்குமுன் அருணாவை ஆஸஃபாலியின் மனைவி என்று குறித்தனர்; 1942-க்குப் பிறகு அஸஃபாலியை அருணாவின் கணவர் என்று குறிக்கிறார்கள். அஸஃபாலி நேர்மையான முஸல்மான்; உருதுக் கவி; மின்னல் வேகத்தில் எழுதித் தள்ளும் பேனாப் புலி; நல்ல வாக்குத் திறனும், சட்டத் திறனுமுள்ள வக்கீல்; சிறந்த படிப்பாளி; அவர் பேச்செல்லாம் சுண்டிப்பார்த்த செடிப் பவுன்; அவர் ஐரோப்பா அமெரிக்கா நாடுகளில் சுற்றி அனுபவம் பெற்றவர்; உலகை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறிபவர்; அவர் வாஷிங்டனில் இந்தியத் தூதராயிருப்பது நமது நாட்டுக்கே பெருமை. அவர் சமீபத்தில் லண்டன் விருந்தில் செய்த ஆணித் தரமான பிரசங்கத்தை வியக்காதவரில்லை. பிரிவற்ற ஐக்கிய இந்தியாவின் அறிவுள்ள மந்திரி அவர். அவரைப் பார்த்தாவது பிரிவினை பேசும் முட்டுக்கட்டைப் பேர்வழிகளுக்குப் புத்திவரக் கூடாதா?

வாஷிங்டன் சென்றதும் அஸஃபாலி உலக ஒற்றுமைக்கும் ஐக்கிய முன்னேற்றத்திற்கும் இந்தியா சுதந்தரம் பெறுகிறது என்பதை அமெரிக்கா உணரும்படி செய்தார். அஸஃபாலி இராணுவ விஷயங்களிலும் தேர்ச்சி பெற்றவர்.

அத்தகைய வீரப்புலவர் அஸஃபாலிக்கு, ஓர் இந்து மனைவி (பிராமண யுவதி) வாய்த்தது ஒரு புதுமைதான்,

காதலுக்குச் சாதியில்லை, கட்டில்லை, மதமில்லை. கலப்பு மணத்தால் உலகில்

பிரிவினை ஒழிந்து ஒற்றுமை உண்டாகும் என்பதற்கு அருணா—அஸஃபாலிகளின் மணவாழ்க்கை சிறந்த உதாரணமாகும்.

அருணா கங்குலி பெரிய செல்வக்குடும்பத்தில் பிறந்தவள்; அக்குடும்பத்திற்கும் டாகுர் குடும்பத்திற்கும் சம்பந்தம் உண்டு. சிறுவயதிலேயே மகா துணிச்சல்; பயம் என்பதே கிடையாது; மாமூல் பழக்கங்களை மீறி நடப்பதில் அவளுக்குத் தனி மகிழ்ச்சி.

தகப்பனார் அவளை லாகூர் Sacred Heart of Christ (கிறிஸ்துவின் திவ்ய ஹ்ருதயம்) என்ற கான்வெண்டில் படிக்க வைத்தார். அருணா ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றாள். கான்வெட்டின் தலைவி பெரியக்கா (Sister Superior) கல்வியும் ஒழுக்கமும், அன்பும், பண்பும் நிறைந்த புனிதை. அவள் அருணாவுக்குப் பைபிள் போதித்து, கிறிஸ்து தர்மதத்தின் மேன்மையுடன், கிறிஸ்துவத் தியாகிகளின் கதைகளையும் சொல்லி வந்தாள். அருணா தானும் ஒரு நித்தியக் கன்னியாக கான்வெண்டில் தொண்டு செய்து கொண்டிருக்க முனைந்தாள். தெரேஸ்—முனிவர் போலத் தானும் ஏசு நாதர் பால் அன்பு செய்தாள். வந்தது மோசம் என்று திகைத்து, பெற்றோர் அவளைக் கத்தோலிக்கப் பள்ளிக் கூடத்திலிருந்து விலக்கி, நைநிடாலில் ஒரு புரோதஸ்தாஸ்தியப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தனர். அருணா அப்போதே தன் புரட்சிக் கனலைக் காட்டி விட்டாள்.

பெற்றோர், "நீ இந்து மதம் என்பது நினைவிருக்கட்டும்" என்றனர்.

அருணா, "எனக்கு இந்து மதமும் இல்லை; எந்த மதமும் இல்லை; என்மதம் சம்மதம்; எனக்குக் கீதை போலவே பைபிளும் வேண்டும்...குரானும் வேண்டும்." என்றாள். தன்னுடன் அதே பள்ளிக்கூடத்தில்படித்த தங்கை பூர்ணிமாவுக்குத் தன் கொள்கைகளைப் புகட்டினாள். அப்போது அவளுக்கு வயது பன்னிரண்டு தான்.

அருணா பெரியவளாகி பதினாறு வயது நிரம்பி அழகின் பதுமையாக விளங்கினாள். நல்ல எடுப்பான உடம்பு; வசீகரமான முகம்; மலர்நகை; கூரிய வாள் விழிகள்; உற்சாகமான பேச்சு; சுறுசுறுப்பான நடை; நல்லபடிப்பாளி. நவநாகரிக முறைப்படி விதவித வர்ண உடைகளால் அலங்காரம் செய்து கொண்டு எப்போதும் வசந்தகால வண்ணத்திப்பூச்சிபோல் விளங்கினாள் அருணா. இந்த அழகியை வைத்தகண் எடுக்காமல் பார்த்துக் காதலித்த செல்வவாலிபர் பலர். எனக்கு உனக்கு என்று பெண் கேட்க வந்தவர் பலர். ஒரு நல்ல செல்வக் குடும்பத்தில் மாப்பிள்ளை பார்த்துப் பெற்றோர் அருணாவுக்கு மணம் முடிக்கக் கருதினர். அருணா, "நான் யாரையும் மணிம்புரியமாட்டேன்; எவர் கட்டாயத்திற்காகவும் இணங்க மாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். "என்னடி, பெண்ணானநீ மணம் புரிந்து ஒருவனுடன் வாழாவிட்டால் உனக்கு யாரடிகதி; நீ எப்படிப் பிழைப்பாய்" என்று பெற்றோர் கண்டித்தனர். "எனக்குக் கதி நானே; என் கையே எனக்குதவி; எவர் சார்பும் இல்லாமல் நான் பிழைப்பேன்; எனக்கு வேண்டியது சுதந்தரமே" என்றாள் அருணா. "சுதந்தரமா! பார்ப்போம் உன் சுதந்தரம்" என்று பெற்றோர் கடுமையாகப் பேசினர். அருணா அன்றிரவே சுதந்தரமாகக் கிளம்பிவிட்டாள். நேரே கல்கத்தாவுக்குச் சென்றாள்; அங்கே கோகலே பெண் பாடசாலைத் தலைவியைப் பார்த்தாள்; வேலை கிடைத்தது. பெண் கல்வியில் கருத்தூன்றினாள். சிக்கனமாக வாழ்ந்துகொண்டு, மாதச்சம்பளத்தில் பாதிக்குமேல் பாங்கில் போட்டுவந்தாள். எதற்கு? இங்கிலாந்து சென்று படிக்க. அடுத்தவருஷம் அவசியம் கேம்பிரிட்ஜில் படித்துப் பட்டம் பெறலாம் என்றிருந்தாள் அருணா.

அந்த ஆசையினூடு மன்மதபாணம் புகுந்து விட்டது.

அல்லாஹபாதில் அருணாவின் தங்கை பூர்ணிமா பனர்ஜி வசித்தாள். அவள் கணவன் வக்கீல்; தக்க செல்வர்; நட்பிற்கு இனியவர். அருணா ஓய்வுநாளில் தன் தங்கையுடன் வசித்தாள், அப்போது அங்கே ஒரு கனவான் வந்தார். அவர் கல்கத்தாவில் நடந்த முஸ்லிம் லீக் கூட்டத்திற்குச் சென்று வந்தார். அக்காலம் முஸ்லிம் லீக் ஜின்னா லீகில்லை;

அது காங்கிரஸிற்கு அனுசரணையாகவே யிருந்தது. அவர் சதா உருதுக் கவிஎழுதுவதும், படிப்பதுமாயிருந்தார்; வயது 41-என்றாலும் முப்பதுதான் மதிக்கலாம்—கட்டுமஸ்தான ஆள். அவருக்கு அருணா தேஹீர் தரச் சென்றாள். இருவர் கண்களும் சந்தித்தன; இருவர் புன்னகையிலும் காதல் மின்சாரம் தெறித்தது; இருவர் உள்ளங்களும் இரண்டு மின்சாரக்கம்பிகள்போல ஒன்று சேர்ந்துவிட்டன. அருணா யாரையும் கேட்கவில்லை; அஸஃபாலியை உயிர்த் துணைவனாகக் கொண்டாள். பெற்றோர் தடுத்தனர்; உறவினர் வெகுண்டனர்; உலகம் நகைத்தது; இந்துக்கள் பகைத்தனர்; அருணா யாருக்கும் அஞ்சவில்லை. அஸஃபாலியுடன் இணைபிரியாமல் வாழ்ந்தாள். அவளுக்கு அப்போது வயது பதினெட்டே. அஸஃபாலி 23 வயது மூத்தவர்; என்றாலும் இருவரும் அன்பும் ஆதரவுமாகவே வாழ்ந்தனர். இருவரும் தீவிரமான தேசபக்தர்; அஸஃபாலி காந்திபக்தர். அருணா புரட்சிக்கனல். என்றாலும் குடும்ப வாழ்வில் இருவரும் மிகவும் ஒற்றுமையுடனே தான் இருக்கிறார்கள்.

மஹாத்மா காந்தி இந்த இந்து—முஸ்லிம் விவாகத்தை வாழ்த்தினார் என்றால் வேறு யாரைக் கேட்கவேண்டும்?

அஸஃபாலி காங்கிரஸ் முஸ்லிம். அன்ஸாரி, அபுல்கலாம், முகம்மதலி ஆகிய மூவருக்கும் இனிய நண்பர். மஹாத்மாவிடம் பரம விசுவாச முடையவர்; காந்தி வழியே சாந்தி வழி என்பவர். அவர் முதல் ஒத்துழையாமையின்போது சிறை சென்றார். அன்ஸாரிக்கு அடுத்தபடி அஸஃபாலியே அக்காலம் புகழ்பெற்ற தேசிய முஸ்லிம். அஸஃபாலி உருது—பார்ஸிப் புலவர். அருணாமேல் அவர் அற்புதமான காதற்கவிகள் எழுதித் தள்ளினார். அருணாவுக்கு உருது தெரியாது. அன்ஸாரி ஒருநாள், "அம்மா! உன் கணவனோ உன்மேல் உருதுவில் பாட்டெழுதித் தள்ளுகிறார்; அவரால் மைப் பஞ்சம் வரும் போலிருக்கிறதே! நீ எப்போது உருது கற்றுக்கொண்டு அவர் கவிதையை ரசிக்கப்போகிறாய்?' என்றார். அருணா ஒருநாள் இரவில் அலிஃப் பே தே படிக்கத் தொடங்கி ஓராண்டில் உருது நன்றாகக் கற்றுக்கொண்டாள். அவளுக்கு உருது ஆசிரியை அஸஃபாலி தாயே—மாமியாரிடம் அவ்வளவு பணிவாகக் கற்ற நாட்டுப் பெண்ணும் அரிதே. அருணாவின் அன்பும் அடக்கமும் அறிவும் அஸஃபாலி குடும்பத்தையே கவர்ந்தன. உருது கற்ற அருணா பம்பாய் வங்காளத்திலிருந்துவரும் முஸல்மான்களைக் கிண்டல் செய்வது வழக்கம். ஏனெனில் அவர்களுக்குச் சரியாக உருது வராது.

உதாரணமாக ஜின்னா சாகிப் குஜராதிதான் பேசுவார். வங்க முஸ்லிம்கள் வங்கமே பேசுவார்கள். அருணா தன் கணவர் கவிதைகளை அள்ளிப் பருகினாள். இக்பால் கவிகளைப் படித்தாள். கணவருடன் அடிக்கடி தேசிய விஷயமாய்ப் பேசினாள். காங்கிரஸ் கூட்டங்களுக்குப் போனாள். அவளுக்கும் தேசபக்தி பற்றி விட்டது. அருணா தேசியக் கூட்டங்களில் கணவனுடன் சென்று பேசினாள். தேசத் தொண்டில் முன்னின்றாள்.

அக்காலம் மஹாத்மாவின் குரல் அடங்கி யிருந்தது; சுயராஜ்யக் கட்சியின் சட்டசபைக் கூச்சல் பலமாயிருந்தது; மஹாத்மா கதர், ஹரிஜன் சேவைகளுடன் நின்றார். அருணா தன் வருணச்சேலைகளையும் துலிமணிகளையும் அப்புறம் வைத்துவிட்டுக், கதர் ஆடையே அணிந்து, பெண்களுக்கிடையே தேசபக்தி புகட்டி வந்தாள். வீட்டில் சாப்பாட்டுக்கடை ஓய்ந்ததும் பெண்கள் வம்பளப்பது வழக்கம்; அருணா அவர்களுக்குத் தேச நிலைமையும், சுதந்திரவழியும், மஹாத்மாவின் பெருமையும்பற்றி உருக்கமாகச் சொல்லி வந்தாள்; பெண்களுக்குக் கல்வி புகட்டினாள். அவள் உள்ளம் தீவிரமான இயக்கம் ஒன்றை எதிர்பார்த்தது.

டில்லியில் வசித்த அருணாவுக்கு அரசியல் அரங்கம் வழி திறந்து அழைத்தது. எத்தனையோ தேர்தல் கூட்டத்தில் அவள் பேசி யிருக்கலாம்; ஆனால் அவள் சட்டசபைக் கட்சியை ஆதரிக்கவில்லை. வெள்ளையர் தயவை எதிர்நோக்கி விடுதலை பெறும் எந்தக் கட்சியையும் அவள் ஆதரிக்க மாட்டாள்—பிறகு?

[அருணாவின் தேசியப் புரட்சியை அடுத்த இதழில் படியுங்கள்.]

(தொடரும்)




ரா. ஸ்ரீ. தேசிகன்

நிலவு எல்லோருக்கும் பொதுவாகத்தான் வீசுகிறது. ஆனால் அதை நோக்குகிற ஒவ்வொர் உள்ளத்திலும் தனித் தனியான உணர்ச்சிதான் எழுகிறது. அமுதம் போலப் பொழியும் நிலவைப் பருகிக் காதலர்கள் மெய்ம்மறந்து இன்ப உலகத்தில் திரிகின்றனர். அதே நிலவு மற்றொருவர் சிந்தையில் ஒரு சோக நாடகத்தை எழுப்பி விடும்.

"அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே"

என்று பாரி மகளிர் உள்ளங் கசிந்து பாடிய பாட்டு எத்தனையோ ஆண்டமைதியின் மீது மிதந்து வந்து நம்மனத்தில் ஒலிக்கிறது. இடிந்த கோயிலையோ, அழிந்த அரண்மனையையோ, மண்ணில் மறைந்த மா நகரையோ உற்று நோக்குகிற சரித்திர ஆசிரியரின் கற்பனைக் கண்முன் அநேக வாழ்க்கைச் சித்திரங்கள் தோன்றி மறையுமல்லவா? தன் தேசத்திலிருந்து விலக்கப்பட்டு அயல் நாட்டில் புழுங்குகின்ற ஒரு தேசபக்தனுக்குத் தன் ஊரிலிருந்து வந்த ஒரு மலர் எத்தனையோ விதமான இன்பங் கலந்த உணர்ச்சிகளைத் தூண்டும் என்பதில் சந்தேகமில்லை.

இதோ என் முன் இருக்கிற பெட்டி என் மனத்தில் பல உணர்ச்சி அலைகளை எழுப்புகின்றது. இப் பெட்டியை நோக்குகிற பொழுது பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்களுக்கு என் மனம் ஓடுகின்றது. வாழ்க்கைப் பாலத்தின் கீழ் எத்தனையோ வெள்ளங்கள் ஓடி மறைந்து விட்டன. எத்தனையோ சோக நாடகங்கள், நகைச்சுவைச் சித்திரங்கள் காலத் திரையில் தோன்றி மாயமாய்ப் போய் விட்டன. இந்தப் பெட்டி நான் போகிற இடங்களுக் கெல்லாம் வரும். கொட்டுகிற மழை, முழங்குகிற இடி, அடிக்கிற மின்னல்—இவைகளையெல்லாம் அப்பெட்டி அனுபவித்திருக்கும். பன்னிரண்டு வருஷங்களுக்குள் எத்தனையோ வீடுகள் மாற்றிவிட்டேன். என் சுகதுக்கங்களை நுகர்கிற என் உயிர் நண்பன் போல இந்தப் பெட்டி என்னைத் தொடர்ந்துவிடும்.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் இப் பெட்டியை என்னிடத்தில் வைத்துப்போன என் நண்பர் உருவம் அடிக்கடி என் முன் உலாவும். பெட்டியை வைத்துவிட்டு உடனே இரண்டு நாளில் வருகிறேன் என்று சொல்லிப் போனவர் திரும்பி வரவில்லை. மூன்று நாள் பொறுமையுடன் காத்திருந்தேன்; நான்காம் நாள் பொறுமையை இழந்துவிட்டேன். ஒரு புகலரும் சோகந்தான் என்னைச் சூழ்ந்தது. நாட்கள் வாரங்களாகின: வாரங்கள் மாதங்களில் மறைந்தன; மாதங்கள் வருஷங்களில் கரைந்தன. போனவர் திரும்பவில்லை. இவர் சாமான்கள் வைத்திருந்த வீட்டுக்காரருக்கு வாடகை போய்ச் சேரவில்லை. அவர் ரிஜிஸ்டர் நோட்டீஸ் கொடுத்தார்; அதற்கும் பதில் கிடைக்கவில்லை. அவர் சாமான்களை விற்றுவிட்டார். எனக்கும் ஒரு கடிதமும் இல்லை. போகிற பொழுது கைச் செலவுக்குப் பணம் தந்தேன். பணத்தைத் தரவேண்டாம் என்றும் சொல்லி அனுப்பினேன். திரும்பித் தரவேண்டுமென்ற கவலைச்சுமை அவரை அழுத்த வேண்டாம் என்ற நோக்கத்துடன் நான் அப்படிச் சொல்லி அனுப்பினேன்.

என் நண்பர் சாப்பாட்டிற்கு இல்லாமல் சில நாட்கள் துன்புறுவர்; தலைமயிர் எண்ணெய் சிப்புக் கண்டு பல நாட்களாயிருக்கும். உடுக்கின்ற உடை முழங்காலுக்கு மேலேதான் நிற்கும்; அதில் அழுக்குக்குப் பஞ்சமில்லை. உலகத்தில் நிலையற்ற காற்றைப்போலச் சஞ்சரிப்பார். ஆனால் அவர் கண்களிலிருந்து தூய்மையான ஒளி பாய்ந்து கொண்டிருக்கும்; அவ்வொளியில் யாதொரு மாறுதலுமில்லை. அவருக்கு ஆங்கிலத்தில் ஆழமான ஞானம், சரித்திரத்தில் விரிந்த அறிவு; தமிழ்ப் பாஷையின் எல்லையைத் தேர்ந்தவர்: தத்துவ ஆராய்ச்சியில் நுணுக்கமான பயிற்சி—இத்தனை இருந்தும் ஓரிடத்தில் நிலையான வேலையில்லை. ஒரு வேலையும் தம்மைத் தடைசெய்யக் கூடாது என்று கருதினாரா?—ஒன்றும் தெரியவில்லை. சிலசமயத்தில் சிரிப்பார்—எதற்காகச் சிரிக்கிறார், அது நமக்கு விளங்காது. வெளித்தோற்றம் வறுமைக் கோலத்தைப் புலப்படுத்தினாலும், அகத்தில் ஆநந்தம் தாண்டவம் ஆடுவதை முகங்காட்டும். என் வீட்டிற்கு வந்தால் மாடியில் வெட்டவெளியில் தான் தூங்குவார். இருண்டநாட்களில் ஆகாயத்தில் மலரும் கணக்கிலா நக்ஷத்திரங்களின் அழகை மாந்திக் கிடப்பார். தலையணை கிடையாது. கைகள்தாம் தலையணை. தரைதான் பாய். பால் போல் பாய்கின்ற வெண்ணிலாவில் தோய்ந்து கிடப்பார். சிலசமயங்களில் தேவாரப் பதிகங்கள், திருவாய்மொழிப் பாசுரங்கள்—இவைகளைப்பண் கூட்டி இசைப்பேன்; அவைகளின் நயங்களைச் சுவைப்பார்.

இத்தகைய குணங்களைப் படைத்த என் நண்பரைத் தரிசனம் செய்யப் பன்னிரண்டு வருஷங்களாகப் பாக்கியங் கிடைக்கவில்லையே என்று மனம் நைந்து சாம்பினதுண்டு.

கடிதம் போடுகிறேன் என்று சொன்னவர் ஏன் போடவில்லை? இத்தனை வருஷங்களாக எங்கே திரிகின்றார்? மாண்டு விட்டாரா? அல்லது எல்லாவற்றையுந் துறந்து இமயமலைச்சாரலில் தவம் புரிகின்றாரா? ஒன்றும் விளங்க வில்லை, அவருக்கும் எனக்கும் இடையே ஒரு பெரும் மௌனம் நிலவிற்று. அந்த மௌனக் கடலில் ஒரு விதமான சலனமும் ஏற்பட வில்லை. பெட்டியைப் பார்க்குந்தோறும் அவ


திலக் மார்க் மிஸ்கி பெருங்காயத்தையே உபயோகியுங்கள்

ஹெட் ஆபீஸ் பம்பாய்




பிராஞ்சு: மதுரை

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

கோபால்ஜி சாம்ஷி & கோ., 30, கோவிந்தப்பநாயக்கன் தெரு, மதராஸ்

ருடைய உருவம் என் முன் நிற்கும். பழைய ஞாபக மடை என் அகத்திலே திறக்கும். அவருடைய சிரிப்பு, அவருடைய கண்ணின் தெய்விக ஒளி, ஒரு விதமான ஆடம்பரமுமில்லாமல் தன்னந்தனியாய் ஒரு பைத்தியம் போலத் திரிகின்ற அவருடைய தோற்றம் எல்லாம் என் முன்னே பாய்ந்தோடும். பெட்டியின் மீது காலத்துரு ஏறிவிட்டது. கீல்கள் கழன்றுவிட்டன. பெட்டியின் மேற்பாகம் வெளியே வந்துவிட்டது. திறந்து பார்த்தேன். ஒரு தங்கக் கடிகாரம் அதில் மின்னிற்று. மஞ்சள்பூத்த சில காகிதங்கள் மக்கிக் கிடந்தன. அவைகளை எறிந்துவிட்டுப் பெட்டியையும், கடிகாரத்தையும் சீர்செய்தேன். கடிகாரத்தை அவரிடத்தில் சேர்க்கவேண்டுமே என்ற கவலை என்னை அரித்துத் தின்றுகொண்டிருந்தது. ஒரு பெரிய பாரம்போல என் மனத்தின் மீது அது உட்கார்ந்து என்னை அழுத்திக்கொண்டிருந்தது: எத்தனையோ காரியங்களுக்கிடையே அது மனத்தைத் துன்புறுத்தும். நாட்கள் தேய்ந்தன.

அமாவாசை. நீராடி மடி உடுத்திக்கொண்டு தர்ப்பணஞ் செய்யப் புரோகிதருக்காக நான் காத்திருந்தேன்.

'அண்ணா' என்ற ஓர் இன்பக்குரல் கேட்டது. என்னை ஒருவர் இருகரங்களால் அணைப்பதை உணர்ந்தேன். மயிர்க் கால் தோறும் ஒரு தனி உவகை பொங்கி எட்டிப் பார்த்தது. என் முன் என் நண்பர் நின்றார். அதே அழுக்குடைதான், அதே சிக்குப் பிடித்த தலைதான், மயிர் காடாய் மண்டிக் கிடக்கிற முகந்தான், அதே அமானுஷ்யமான கண்ணின் பார்வைதான்.

"மன்னி, சௌக்கியமா?" என்றார்.

"ஆம்" என்றேன் அவரைத் தழுவியபடியே.

சற்று வெளியிலே சென்று வருகிறேன் என்று அவர் போய்விட்டார்.

எதிர்பாராத ஓர் ஆப்தநண்பர் உள்ளே நுழைகிற பொழுது இன்பத்தால் பொங்கி எழுகின்ற உள்ளத்தைச் சொல்லிற் சிறை செய்ய முடியுமா? சட்டென மலரும் பூவின் மணத்தைத் சொற் கிழியில் சித்திரிக்க முடியுமோ? சொற்கள் தாம் ஏழையாய்ப் போய்விடும்.

என் நண்பர் வெளியே சென்றதும், "வெகுநாளாய்ப் பார்க்க வேண்டுமென்று பூத்துப்போன கண்களுக்குத் தம்பியின் சேவை கிடைத்திருக்கிறதே. இதைவிட பாக்கியம் என்ன வேண்டும் என்று விஷமச் சிரிப்பு உதடுகளில் மிளிரப் பேசினாள் என் மனைவி. அமாவாசைத் தர்ப்பணம் கடையேறிவிடும், தம்பியைக் கட்டிக்கொண்டாய் விட்டதே, மறுபடியும் முழுகித் தொலையுங்கள்" என்றாள்.

"முழுக வா—? நீர் புற அழுக்கை நீக்கும்; அன்பு அக அழுக்கை அகற்றும், அன்பு தழீஇப் பவித்திரம்" என்று என்னுள்ளே முணுமுணுத்தேன்.

மறுபடியும் "முழுக மாட்டீர்களா?" என்றாள் என் மனைவி.

"முழுகவா?, முழுகவா?" என்று சொல்லிக் கொண்டே இருந்தேன். இதற்குள் புரோகிதரும் வந்து விட்டார்.

மறுபடியும் நீராடாமல் தர்ப்பணஞ் செய்தேன். மனதில் ஒரு புதிய உணர்ச்சி வெள்ளம் பாய்ந்தது. ஏதோ என் உடலில் ஒரு புதிய தூய்மை உணர்ச்சி ஓடக்கண்டேன். என்னை 'அண்ணா' என்றழைத்தாரே, என் மனைவியை 'மன்னி' என்று அன்புடன் விளித்தாரே, இந்த இரண்டு சொற்கள் போதும். எத்தனையோ கயப்பு வாழ்க்கைச் சந்தடிக் குள்ளே சச்சரவுக்குள்ளே சழக்குக்குள்ளே அந்தச் சொற்களின் யாழொத்த இன்பம் எனக்குத் தைரியத்தை அளிக்கும், எத்தனையோ அபஸ்வரம் பேசுகிற வாழ்க்கை யாழில் ஒரு தந்தி சரியாய்ப்பேசினால் மற்றத் தந்திகளும் சரியான நிலைக்கு வந்துவிடும் என்ற நம்பிக்கை நம்மனதில் எழுகிறதில்லையா என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

என் நண்பர் திரும்பிவந்தார். வழக்கம்போல நிலாத்துயில்கின்ற மாடத்தில் படுக்கைதான், இயற்கையழகைப் பருகிக் கிடந்தார். கடிகாரத்தை அவரிடம் காண்பித்தேன். அதைவாங்கிக் கொண்டார். இரண்டுநாள் கடிகாரம் கையில் மின்னிற்று, மூன்றாம் நாள் கடிகாரம் தோன்றவில்லை. கடிகாரத்தை என்ன செய்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. பிறருடைய உத்யோகம், சம்பளம், குழந்தைகளின் தொகை—எண்ணிக்கை இவைகளைப் பற்றிக் கேட்பதைவிட அநாகரிகமான காரியம் வேறில்லை. பிறரிடத்தில் நம் துயர்களை அவிழ்த்து இளகின அவர் மனத்தைத் துன்புறுத்துவது நாகரிகமன்று பெரும் பாதகம் என்ற கொள்கையை அனுஷ்டிக்கின்றேன். ஆதலால் என் க்ஷேமங்களையும்

அவரிடத்தில் சொல்லவில்லை; அவருடைய க்ஷேமங்களையும் நான் கேட்கவிரும்பவில்லை.

ஒரு வாரம் தங்கிவிட்டு அவர் அகன்று விட்டார். பெட்டியை எடுத்துக் கொண்டு போகவில்லை. பெட்டியைப்பற்றிக் கவலை இல்லை, கடிகாரம் போய்ச் சேர்ந்ததே என்ற விஷயத்தில் என் உள்ளம் உபசாந்தி அடைந்தது.

போய்க் கடிதம் போடுகிறேன் என்று சொன்னவர் ஒரு கடிதமும் எழுதவில்லை. இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகப்போகின்றன. அந்த ஆத்மா எங்கே திரிகின்றதோ? எத்தனை சிந்தனைக் கடல்களின் மீது அது உலாவுகின்றதோ—யாருக்குத் தெரியும்?

அந்தப் பெட்டியைப் பார்க்கும் போது எனக்கு அது ஒரு பெட்டியாகக் காட்சி அளிக்கிறதில்லை. அபூர்வமான படிப்பு, ஆராய்ச்சி, ஆத்ம குணங்கள் இவைகள் ஒருவருக்கும் பயன்படாமல் மண்ணோடு மண்ணாய்ப்போகிற ஒரு சோகக் காட்சி தான் எழுகிறது. இவரைப்போல அறிவாளிகளை அனுபவிக்கத் தெரியாமல் உலகம் நிற்கிற நிலையை நோக்குகிற எனக்கு ஓர் ஏக்கந்தான் வருகிறது. பெட்டியில் பூட்டிவைக்கப்பட்ட யாழ் என்ன பயனைத்தரும். அப்படியே கிடைத்தாலும், அதன் நயங்களை அறியாத கையில் அது சிக்கினால் என்ன லாபம்? ஒவ்வொரு மனிதனும் ஒரு யாழே. அதன் ஸ்வரஸ்தானங்களைக் கண்டு, அதை வாசித்தால் ஆண்டவன் அருட்கானம் கேட்கும். என் நண்பர் ஆயிரம் தந்திகொண்ட ஓர் யாழ்—இல்லை—இல்லை—அறிவற்ற மாந்தர்கள் கையிலே சிக்கிய ஒரு வேத மொழியே. அதைப் பயன் படுத்திக் கொள்ளக் காலம் வருமோ?

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L. நெ 61, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாயச உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதராஸ்.

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

*ராமய்யா*

இந்தக் கடிதம் ஆந்திரதேசத்தில் ஒரு பட்டணத்திலிருந்து எழுதுகிறேன் என்று முதலிலேயே தெரிவிக்கிறேன். சென்ற மாதத்தில் எழுதுவதற்கே தோன்றவில்லை — மாதம் தோறும்தான் எழுதிக் கொண்டிருக்கிறோமே, ஒரு மாதந்தான் அசரப் போடுவோமே என்று தோன்றி விட்டது. ஆதலால் சும்மா இருந்து விட்டேன். மூன்று தினங்களுக்கு முன் ஒரு நாள் காலையில் உட்கார்ந்து "இன்று காவேரிக்கு எழுதிவிட வேண்டும்" என்ற பிரதிக்கினையுடன் காகிதத்தையெடுத்து எழுத ஆரம்பித்தேன்; உடனே ஒரு சகுனத்தடை யேற்பட்டது. அப்போதே நினைத்தேன், இன்று இந்தக் காரியம் கைகூடப் போவதில்லை என்று. என்ன நடந்தது என்று சொல்லட்டுமா, கேளுங்கள்:

சுமார் ஐந்தே முக்காலடி உயரம், நாகப்பழ மேனி, ஆமணக் கெண்ணெய் போட்டு தலையை வாரிக்கொண்டவர் ஒருவர், ஜவ்வாது பொட்டு, இரண்டு கைகளில் நான்கு மோதிரம், வாயில் வெற்றிலைபாக்கு, கழுத்தில் மயில்கண் வேஷ்டி, மூலகச்சம், கதர் ஜிப்பா இவற்றுடன் என்முன்வந்து நின்று, "நமஸ்காரம்" என்றார். நான் சாதாரணமாக, தெரியாதவர் ஒருவர் நமஸ்காரம் பண்ணினால் திரும்பவும் நமஸ்காரமும் செய்வதில்லை, ஆசீர்வாதமும் செய்வதில்லை. இரண்டும் வீண் வம்புக்கு ஏது என்பது என் கொள்கை. ஆகவே "யாரு என்ன வேண்டும்" என வெடுக்கென்று கேட்டேன். அவ்வளவுதான், நண்பர்களே, ஆரம்பித்தாரே பாருங்கள் —"நான் பெங்களூர்; சங்கீத வித்வான்; சங்கீத பூஷணம் என்று பட்டம் வாங்கி இருக்கிறேன்; ரேடியோவில்பாடியிருக்கிறேன்; ஆகாய வாணியில் சதா என்னைக் கூப்பிடுவார்கள்; நான் ஜாஸ்தி போவதில்லை. பெங்களூர், மைசூர் அந்தப் பக்கத்தில் கச்சேரி யில்லாத நாட்களே எனக்குக் கிடையாது. ரொம்பவும் வெறுத்துப் போய் விட்டது; இந்தப் பக்கங்களில் வந்து சில கச்சேரிகள் செய்து புகழ் பெற வேண்டும் என்கிற ஆசை யேற்பட்டது. ஆகவே இங்கு வந்தேன். நீங்கள் ஒரு பெரிய சங்கீத அபிமானி யென்றும், மனது வைத்தால் உங்களால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லையென்றும் கேள்விப்பட்டேன். ஆகவே நீங்கள் கட்டாயம் எனக்குச் சகாயம் செய்ய வேண்டும்; ஒரு கச்சேரி யேற்பாடு செய்வீராயின் அதைக் கேட்டுவிட்டு எல்லோரும் என்னை கௌரவப்படுத்துவார்கள் என்பதில் சந்தேகப்பட வேண்டாம்" என்று சற்று நிறுத்தினார்.

அப்பொழுது எனக்கு ஒரு சிறிய சம்பவம் கவனத்துக்கு வந்தது. பல வருஷங்களுக்குமுன் டிஸ்ட்ரிக்ட் முனிசீப்புகளை தேர்ந்தெடுப்பது எப்படியென்றால் பல ஜில்லாக்களிலிருந்து ஐந்து பத்து வருஷ அனுபவமுள்ள வக்கீல்களை முன்வரச் சொல்லி, சென்னையில் ஹை கோர்ட்டு ஜட்ஜ் ஒருவர் அவர்களைச் சம்பாஷணையால் பரிசோதித்து, பிறகு சமர்த்தர்களை எடுத்துக் கொள்வதாம். அம்மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் சுமார் முப்பது வயதுள்ள தெலுங்கு வக்கீல் ஒருவர் காலஞ்சென்ற ஜட்ஜ் ஸர் குமாரசாமி சாஸ்திரியார் முன் நின்று பின் வருமாறு விடை கொடுத்தாராம்:

"உமக்கென்ன வயது?"

"முப்பது"

"எத்தனை வருஷங்கள் வக்கீல் அனுபவமுண்டு?"

"ஏழு வருஷம்."

"சிவில் வாதங்களா, கிரிமினல் வாதங்களா?"

"முக்கியமாக, சிவில் வாதங்களே,"

"மாதத்துக்கு என்ன வரும்படி வருகிறது?"

"ரூபாய் அறுநூற்றுக்குக் குறையாமல் வருகிறது. சில மாதங்களில் ஆயிரம் ரூபாய்கள்கூட சம்பாதித்திருக்கிறேன்.

உடனே ஸர் குமாரசாமி சாஸ்திரியார்: பந்துலுகாரு, நீர் இவ்வளவு சிறிய வயதில் இவ்வளவு ஏராளமாகச் சம்பாதிக்கத் தொடங்கியிருக்கிறீர். இந்த அல்பமான முன்சீப் வேலை உமக்கு எதற்கு? இன்னும் இருபது வருஷகாலம நீர் உத்தியோகம்

செய்தால் ஆயிரம் ரூபாய்கள் சம்பளம் கிடைப்பது கஷ்டம். ஆகவே ஊருக்குத் திரும்பிப்போய் உம்முடைய போர்டை நன்ருகத் துடைத்து மாட்டிக்கொண்டு கக்ஷிக்காரரைக் கவனியுங்கள், என்ருராம். இதில் மர்மம் என்ன வென்ருல், சிறிய பந்துலு பெரிய சுரபுருடைக்காரர் என்று சாஸ்திரியாருக்குத் தெரிந்து விட்டது. அவர் வக்கீல் தொழில் செய்து வந்த ஜில்லாவின் ஜட்ஜ், தம்முடைய ரிபோர்டில் பந்துலுவுக்கு மாதம் தோறும் சுமார் இரண்டு நூறு ரூபாய் வரும்படி யிருக்கலாம் என்று எழுதியிருக்க, பந்துலு வின் வாயில் அறுநூறு, ஆயிரம் என்று உளறுபடி வெளிவந்தால் சாஸ்திரியார் சும்மா விடுவாரா?

அதுபோலவே பெங்களூர் சங்கீத பூஷணம் ஆகாசவாணியிலும், பெங்களூர், மைசூர் சபைகளிலும் தமக்கு ஏராளமான செல்வாக்கு உண்டு, ஆயினும் தெலுங்கு ஜில்லாக்களில் அசுவமேதயாகம் செய்ய வேண்டும் என்ற ஆசையினுல் தாம் வந்ததாகத் தெரிவித்தவுடன் எனக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்தது. ஆகவே, அவரைப்பார்த்து "உழவுக்கு உதவும் மாடு உள்ளூரிலே விலே போகும். வந்த வழியே பார்த்துக்கொண்டு ஊரைப் பார்த்துப்போம்" என்று சொல்லிவிட்டு, எதிரில் இருந்த காகிதத்தைக் கிழித்து விட்டு உள்ளே போய்விட்டேன். அம்மாஞ்சி பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வாயில் புகையிலே வெற்றிலையை அடக்கிக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து ஏதோ சொல்ல வாயைத்திறந்தார் சங்கீத பூஷணம். அதற்கு அம்மாஞ்சி முகவாய்க் கட்டையை முன்னே திணித்து, அரைக்கால் வாயைத்திறந்து. "நா, வாயியே, புயயை வொட்டிமுக்கே, பேய முழியாமு, போம்" என்ருன். அதாவது "நான் வாயிலே புகையிலே போட்டுக் கொண்டிருக்கேன், பேச முடியாது போம்" என்பதாக—பூஷணமும் வெளியேறினுர்.

* * *

இந்த அபசகுனத்துக்கு அப்புறம் யோசிப்பது எங்கே, எழுதுவது எங்கே? சிறிது நேரத்துக்கெல்லாம், அம்மாஞ்சியும் நானும் பேப்பர் படிக்க உட்கார்ந்தோம். திடீரென்று அம்மாஞ்சி "ராமய்யா, உனக்கு என்னெல்லாம் வியாதி உடம்பிலுண்டு" என்று கேட்டான். அதற்கு நான் "உனக்கு எனக்கு இருவருக்கும் ஒரேவியாதி, அதாவது மண்டை கொழுத்த கர்வம், இதைத்தவிர வேறு ஒன்றும் இருப்பதாக ஒருவர் சொல்லியும் நான் கேள்விப் பட வில்லேயே" என்றேன்.

அம்மாஞ்சி: அதுபோகட்டும், இன்று டாக்டர் இடம்போய் நீர்வியாதி Diabetes உனக்கு இருப்பதாக ஒரு சர்டிபிகேட் வாங்கிக் கொண்டுவாயேன்.

நான்: எதற்காக.

அம்: அது கிடைத்தால் தான் கோதுமை இனி கொடுப்பார்களாம்; இதோபார் பேப்பரில் போட்டிருக்கிறது.

பேப்பரைப் பார்த்தால் அவன் சொல்லியபடியே இருந்தது. அடகஷ்டகாலமே! கோதுமை சாப்பிடு, கோதுமையைச்சாதமாகச்சமை, சப்பாத்தியாகச் சாப்பிடு, கஞ்சியாகக்குடி, அடையாகத்தட்டு, தோசைவார்த்து அடுக்கு, என்றெல்லாம் அரையிலிருந்த துணியைத்தலையில் சுற்றிக் கொண்டு குதித்தார்களே கவர்ன்மெண்டு உணவு இலாகா அதிகாரிகள்—இப்பொழுது இந்தக் கதிக்கு வந்ததா? முதல் முதல் ரேஷன் கார்டுகள் கொடுத்தபோதே ஒவ்வொரு பேர்வழியும் அரிசி உண்பவரா, கோதுமைபுசிப்பவரா, என்று எழுத்து மூலம் தெரிந்துகொண்டிருந்தால் இப்பொழுது கோதுமைக்கு இழுப்புவந்தவுடன், வழக்கமாகக் கோதுமை சாப்பிடும் பேர் வழிகள் யாவர் என்று ஏற்பட்டிருக்குமல்லவா? இந்தச் சமயத்தில் டாக்டர்களிடம் போய் நீர்வியாதி சில வியாதி யென்றெல்லாம் சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வரும்படியான கர்மானுசாரம் ஏற்படாமலிருக்குமே! அம்மாஞ்சியும் நானும் பதினைந்து வருஷங்களாகக் கோதுமையே கையாடி வருகிறோம் (செந்தமிழில் 'வயருடி வருகிறோம்' என்று சொல்ல வேண்டுமோ?)—அரிசி சாதம் சாப்பிட்டால் மண்டைக் கொழுப்பு இருப்பதுடன் வயிற்றுக் கொழுப்பும் ஏற்பட்டு விடும் எங்களுக்கு. ஆனுல் எங்களிருவருக்கும் நீர், நிலம், காற்று, ஆகாயம் எனப்படும் வியாதியோ கிடையாது. ஆதலால் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். வட இந்தியாவுக்குப் போய்விடுவோமா என்று யேசித்தால், ஏக அடிதடியாக இருக்கிறதே, என்ற பயம் ஒருபக்கம்; நம்மபக்கத்துப் பேச்சு, சங்கீதம், காய்கறி, வத்தக்குழம்பு, சுண்டைக்காய், மணத்தக்களிக்காய், தூதுவிளாங்காய், இவற்றையெல்லாம் விட்டுவிட்டு எத்தனைநாள் இருப்பது என்கிற ஏக்கம் ஒரு பக்கம்! சொந்த ஊரைவிட்டு வேறு ஊருக்குப் போவதென்ருல் இலகுவான காரியமா?

தமாஷாக ஜின்னாசாஹிப் சொல்லி விடுகிறார். அதைக் கேட்டுக்கொண்டு எல்லோரும் தத்தளிக்கிறதோம் என்கிறார்கள்! மதுரை ஜில்லாக்காரரைக் கேளுங்கள். வெளியேறிப் போகிறீர்களாவென்று? மலைப்பூண்டு, மலை மாவடு, பச்சைசுண்டக்காய், நவரந்தார் பழம் இதையெல்லாம் காணாமல் எத்தனை நாட்கள் இருக்கமுடியும் என்பார்களே! நாக்குச் செத்துப்போய், உடம்பும் செத்துப் போய், ஜாதிக்காய் பலகை மாதிரியிருக்கும் ஆட்களுக்கு என்னமோ எல்லாவூரும் ஒரே மாதிரியிருக்கலாம்; சுரணையுள்ள ஆட்களுக்கு அப்படியிருக்க முடியுமா?

* * *

இப்போது நாங்களிருக்கிறோமே, இந்தத் தெலுங்கு ஊரில் "We Two" என்ற தமிழ் பேசும்படம் ஆடிக்கொண்டிருக்கிறது. அம்மாஞ்சியும் நானும் ஒருநாள் போய்ப் பார்த்தோம்! படம் உயர்ந்ததோ தாழ்ந்ததோ சொல்லத் தயாரயில்லை; —ஆனால் வெகு தமாஷாக மாத்திரம் இருந்தது என்று அங்கீகரிக்கவேண்டும். பேச்சில் நல்ல விறுவிறுப்பு. "ஏண்டீ—நீ எனக்கு பொண்டாட்டியா, நான் உனக்கு பொண்டாட்டியா"—"மூஞ்சியும் மோரகட்டையும் பார்ரா. அடுவைஸ் பண்ணவந்துட்டானும், அடுவைஸ்"—என்னமோ, வயசான காலத்திலே ஒரு குட்டியைக் கலியாணம் பண்ணிண்டு ஜாலியா யிருப்போம்னா, இந்தப்பயகள் வந்து கட்டைபோட்றான்"—என்கிற இடங்களிலெல்லாம் நல்ல கொழுத்த தஞ்சாவூர் ஜில்லா ஜொலித்தது. படத்தில் சுமார் பாதிவரையில் நன்றாயிராத இடங்களை வெட்டியெறிந்து விட்டு, பாக்கியைக் காண்பித்தால், பேஷான படம் என்றே எடுத்துக்கொள்ளலாம். படத்தில் அமைத்துள்ள பாட்டுகளெல்லாம் கர்ன கடூரமானவை. அது காலத்தின் கோலம்!

* * *

இந்தப் படத்தைப் பார்த்து விட்டு வந்த தினத்துக்கு அடுத்தநாள் நானும் அம்மாஞ்சியும், சில ஆந்திர நண்பர்கள் மத்தியில் படத்தின் சில விசேஷங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம். அதைக்கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் தமிழ் ஜில்லாக்களில் பல வருஷங்கள் பெரிய கவர்மெண்டு பதவி பெற்று, பென்ஷன் வாங்கிக்கொண்டு, தமது சொந்தவூரில் ஸ்தாபனமாயிருக்கும் ஆந்திரப் பிரமுகர் ஆவர்—வெகுகாலம் தமிழ் நாட்டில் உத்தியோகம் செய்தவரானாலும் அவருக்குத் தமிழ் சுட்டுப்போட்டாலும் ஒரு அக்ஷரம் வராது. "சோடா எனக்குக் கொடுக்காதே, அவருக்குக் கொடு, ஜின்ஜர்பியர் எனக்குக் கொடு" என்று சொல்ல யத்தனித்தவர், என்னவென்பார், கேளுங்கள் "சோடாவை என்னைக் கொடுக்காதேடா, அவரைக் கொடுடா, அவரைக் கொண்டுபோய் ஜின்ஜர்பியருக்குக் கொடுடா," என்று திணறுவார். அந்த மஹானுபாவருக்கு மாத்திரம் தமிழ் பாஷையென்றால் மகா கேவலம். மேற்கூறியபடி பேசும்படத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்குங்கால், அவர் குறுக்கே நுழைந்து, தமது பாஷையில் "இந்தத் தமிழ் பாஷையெப்படி ஆரம்பமாயிற்று தெரியுமா? வசிஷ்டரும் விசுவாமித்திரரும் ஒருநாள் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார்களாம். அப்பொழுது வசிஷ்டர் ஒரு மண்ணெண்ணெய் டின்னுக்குள் பத்து கூழாங்கற்களைப் போட்டு கடகடவென்று ஆட்டினாராம். அந்தச் சப்தத்தைப் பார்த்து உடனே விசுவாமித்திரர் அந்த டின்னைத் தூக்கிக்கொண்டு, "இது ஒரு புது பாஷை, இதிலிருந்து நான் "தமிழ்" என்ற பாஷையை உற்பத்தி செய்யப்போகிறேன்" என்று ஒரே ஓட்டமாக ஓடி விட்டாராம்", என்று சொல்லி விட்டு, எங்களிருவரையும் பார்த்து கே, கே, கே, கே, என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தார். எனக்கு வந்த கோபத்தில் அந்த மனுஷனுடைய வேஷ்டியைப் பிடித்து இழுத்துவிட்டு ஓடிவிடலாமா என்று தோன்றிற்று. பத்துப்பேர் நடுவில் அவமானப் படுத்துவதற்கு சுலபமான வழி அது ஒன்றல்லவா? அதற்குள் அம்மாஞ்சி என்னைப் பார்த்து "அவரைப்பார்த்துக் கோபம் கொள்ளுவதில் உபயோகமில்லையப்பா! ஸ்ரீ காமராஜநாடார் மீதிலுள்ள கோபத்தை நம்மிடம்காண்பித்துத் தீர்த்துக் கொள்ளுகிறார் அவர். இந்தச் சின்ன விஷயம் தெரியவில்லையே உனக்கு" என்றான்.

* * *

முடிவாக, ஒரு சிறியகதை சொல்லுகிறேன்: பீடர் என்கிற ஒரு கிறிஸ்தவ நீக்ரோ வாலிபன் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குச் சிறிய வயதிலேயே சென்று, பத்து வருஷங்கள் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் படித்துவிட்டு, தனது சுயநாட்டுக்குத் திரும்பினான். வந்த சிலதினங்களுக்குள் ஒரு நாள் மாலையில் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தைக் கடந்து செல்லுங்கால், அதினுள் 'சர்விஸ்' நடப்பதையறிந்து உள்ளே செல்ல முயன்றான். வாயிலண்டையில் நின்றுகொண்டிருந்த பாதிரி ஒருவர் பீடரைத்தடுத்து, "நீர் நீக்ரோ

வானபடியாலும், இந்தத் தேவாலயம் வெள்ளையருக்குரியதாகையாலும் இதினுள் வரலாகாது'' என்றார். பீடருக்கும் பாதிரிக்கும் வாக்குவாதம் நடந்தது—தேவாலயத்தில் கிறிஸ்தவர் அனைவருக்கும் சுதந்திரம் உண்டென்றும் கருமேனி, செம்மேனி என்கிற வேற்றுமை கிடையாதென்றும் பீடர் சொல்ல, பாதிரியானவர் ''இதைக்குறித்து நாம் வாதாடிப் பயனில்லை. நீர் கடவுளைக் குறித்துத் தியானஞ் செய்துவிட்டு, உறங்கும்; நித்திரையில் கடவுள் உமக்குத் தோற்றம் கொடுப்பார்; அப்பொழுது அவரைக்கேளும்; அவர் உமக்குச் சமாதானம் சொல்லுவார்'' என்றுவிட்டார். பீடர் சரியென்று சொல்லி வெளியேறினான். சில நாட்கழித்து, பீடரும் பாதிரியும் சந்தித்தனர். அப்பொழுது பீடர் மற்றவரைப்பார்த்து, ''பாதிரி, நீர் சொல்லியபடியே கடவுளைத்தியானித்து, அமர்ந்து, சொப்பனங்கண்டேன். கடவுள் எனக்கு அழகான சமாதானம் சொன்னார். நான் இனி உமது தேவாலாயத்தினுள் புகுதற்கு முயலவே மாட்டேன்'' என்றான். பாதிரி வெகு சந்தோஷத்துடன் ''பேஷ், பேஷ், நான் எண்ணியபடியாயிற்று. கடவுள், என்ன சமாதானம் சொன்னார்'' எனவே, பீடர் ''கடவுள் சொன்னார்—அடே, பீடர் பயலே, அந்தத் தேவாலயம் கட்டுண்டு 25-வருஷங்கள் ஆயின, இந்த 25-வருஷங்களாக அந்தத் தேவாலயத்தினுள் புக நான் முயலுகிறேன்; எனக்கே அவர்கள் இடங்கொடுக்கவில்லை; நீ யெதற்காகக் கஷ்டப்படுகிறாய்'' என்று சொல்லி, பாதிரியைப் பார்த்துக் குலுங்கக் குலுங்கச் சிரித்தான்.

இதனுடைய நீதி யென்ன? நமது கோவில்களில் சிலவற்றிற்குள் ஹரிஜனங்கள் உட்செல்லக்கூடாது என்று சொல்லுவதைக் குறித்துப் பெரியோர் சிலர் வருந்துகிறார்களே, அவர்கள் தெரிந்து கொள்ளட்டும்!





மிஸ்டர் கே. எஸ். பி. மேனன் இந்தியாவின் தூதராகச் சைனுவுக்கு விமான மூலம் புறப்படுகையில் அளிக்கப்பட்ட பிரிவு உபசாரம்.



நவீன நாகரிக உடையில் காட்சி அளிக்கிருர் ராஜாஜி. டெல்லியில் அரசியல் நிர்ணய சபைக்கு வெளியில் நின்றுகொண்டு. அவருடன் காணப்படுபவர் பி. சிவராவ், சர்தார் படேல், ஸத்யநாராயண ஸின்ஹா.



இ. தே ரா. திருமணம்—ஜான்ஸி ரெஜிமெண்டைச் சேர்ந்த கலோனல் லக்ஷ்மி (ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதனின் புதல்வி) மார்ச்சு 8வ லாகூரில் கலோனல் பிரேம் குமார் ஷேகாலை மணந்தார். ஷேகால் லாகூர் ஹைகோர்ட் ஜட்ஜ் அச்ருராம் அவர்களின் புதல்வர்.



இந்திய வியாபாரிகள் சங்கத்தின் வருடாந்தர டெல்லி கூட்டத்தில் பண்டிதநேரு சொற்பொழிவு ஆற்றுகிறார்.

# “க்ரூக் பத்து”

## (Crook Paddu)

டாக்டர் வே. ராகவன்

“என்ன பலஹாரம் இன்னைக்கு?” என்று கேட்டார், தலைவரவர்களை முக்ய அங்கத்தினர்.

“‘பலஹாரம்’ என்று சொல்லிவிட்டு, திடீரெனத் தலைவர், அங்கத்தினர் என்கிறாரே, ஏதோ ஆகாரம் செய்து கொள்வதற்கான சபை ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்று வாசகர்கள் ஐயமுறவேண்டாம். இது வெறும் நண்பர், மூன்று நான்கு பேர்களுடைய வம்பு வாது ஸபையே. எந்த ப்ரமுகர் மாளிகையில் கூடுகின்றனரோ, அவரே தலைவரென இங்கு வழங்கப் படுகிறார். இரவு சுமார் 9-30-க்குக் கூடி, அன்றன்று பார்த்த, படித்த, கேட்ட நிகழ்ச்சிகளை யெல்லாம் அலசி, ஊரில் ஒருவரைப் பாக்கி வைக்காமல் தராசில் தூக்கி, சிலரை ஏத்தி, பலரை இறக்கி, இறக்கினவரையே ஏத்தி, ஏத்தினவரையே இறக்கி, ஆள் அகப்படாதபோது தம்மையே ஒருவரை யொருவர் தாக்கி, சுமார் 10—30 மணிக்குக் கலைந்துவிடுவார்கள். இச்சபை கூடிய பிறகே தலைவரும் தம் இரவு உணவுக்கு உட்காருவார்; பேச்சுடன் நாலு பிடி சாப்பாடோ, பலகாரத்தில் நாலைந்தோ, அதிகப்படியாய் உள்ளே செல்லும்.

“என்ன பலஹாரம் இன்னிக்கின்னேன்?” என்றார் மறுபடியும் முக்ய அங்கத்தினர்.

“அப்படினா? எதற்காக இன்னிக்குப் பலஹாரம் என்கிறேளா? இல்லை பலஹாரத்துக்கு என்ன ஸாமான் தயாராயிருக்கு இன்னிக்கு என்கிறேளா?’ என்றார் தலைவர்.

ஊரார்மேல் புரண்டோடும் வெள்ளம் அடிக்கடி தலைவர்மேல் குறுக்கே பாயப் பார்க்கும்; அப்போதெல்லாம் நிதானமாய்ப் பதில் கேள்விகள் போட்டு, அதைத் திருப்பிவிட முயலுவார் தலைவர்.

“ஓமக்கு பலஹாரத்துக் காரணத்தை வேற கேக்கணுமா என்னா? கிருத்திகையும், சனிக்கிழமையும் வராமலிருந்தாலுமிருக்கும், பலஹாரம் இங்கே அரண்மனைலே நடக்காம இருக்காது. இட்லி, தோசையாலேயே ஒருவன் முக்தியடைலாம்னா அது நீர்தான்” என்றார் முக்ய அங்கத்தினர்.

இந்த அங்கத்தினர் போடெல்லாம் பட்டைக் கத்தியால் கசாப்புக்கடைபோடாய்த் தான் இருக்கும்.

‘ஸரி, அதான் நீங்களே சொல்லி விட்டேளே? இன்னிக்கி இட்லி.”

“இட்லியா? உளுந்து எங்க ஸம்பாதிச்சேள்.”

“ஆம், நான் ஸம்பாதிச்சாப்பலத்தான்; நம்ப அஸாமி எங்கிருந்தோ தட்டிண்டு வந்தான்”

“அது யாரய்யா ஓங்க அஸாமி? அபார சூரன்போல இருக்கே?”

“சூரனா! புலிப் பால் கேளுமே?”

“யாருன்னு சொல்லுங்கோ, நான் ஒண்ணும் கொண்டுவான்னு கேட்கல்லே, பயந்துக்காதேயும்”

தலைவர் தம் பிரத்யேகக் கலையான பேச்சு மாற்றத்தைச் செய்தார்.

“அது இருக்கட்டும், எங்கே, நம்ப........ இவரைக் காணும் சரியா வந்துடற வழக்கமாச்சே?” என்று பத்து மணியாயும் ஸபைக்கு வராத அங்கத்தினர் ஒருவரைப் பற்றி விசாரித்தார் தலைவர்.

“எதையோ நெனச்சுக்கோ, உடனே வந்து நிக்கும்பாளே! அது போலனா வந்துட்டார்” என்று அவரே சொல்லும்படி, அந்த க்ஷணமே ‘லேட்’ (late) அங்கத்தினரும் வந்து விட்டார்.

''ஏனே பெரியவா, இவ்வளவு நேரம்?'' என்று ஏகோபித்துக் கேட்டனர்.

தாமதமாய் வந்தவர் தயக்கத்திற்குக் காரணமான கதையைச் சொன்னர்.

"ரொம்ப நாளாச்சுன்னு, ஒரு ஸ்னேகிதனைப் பார்க்கப்போனேன்; அவனை ஒருவன் ஏமாத்தின கதை ஒண்ணைச் சொல்லிண்டுருந்தான், நாழியாயிடுத்து''

"யாரை, யார் ஏமாத்தி விட்டாளாம்?'' என்று கேட்டார் தலைவர்.

''யாரு? எல்லாம் ஒங்க அஸாமிகள்ளே ஒத்தன்தான். நாலஞ்சு நாளா வந்து, ஒரு மணி நேரம் உக்காந்துண்டு, தனக்கு அவனைத் தெரியும், இவனைத் தெரியும்னு அளந்துவிட்டு, கொஞ்ச நாழி பாட்டையும் பாடிவிட்டு, கடைசியா 50 ரூபாய் பணத்தை வாங்கிண்டு போனவன்தானும், இன்னும் கண்ணுலேயே படவில்லயாம்''

''யாரு, பேரைச்சொல்லாம போயிண்டே இருக்கயே'' என்ருர் தலைவர்.

''பேரு எனக்கு நினைவு வரல்லே, ஸார்; முன்னெல்லாம் இங்கே வந்து வாசல்லே உங்களோடு பேசிண்டுருப்பான்; வெத்தலே, விசிறி மடிப்பு இதெல்லாம் போட்டுண்டு, நம்ப......ருக்குக்கூட உறவு ஸார்''

''ஓ அவனு, சேஷய்யர் மருமான்: 'பத்து' ங்கரது; பத்மநாபன்னு பேரு'' என்ருர் தலைவர்.

உடனே அங்கத்தினரில் மற்ெருருவர், அதுவரைக்கும் பேசாமல் இருந்தவர், குபீர் என்று ''அவன்தான் ஸார், ஏதாவது உத்யோகம் பாத்துக்குடுன்னு எங்கிட்ட அனுப்பிச்சேளே, நான்கூட கிராமபோன் கம்பனிலே வச்சேன், அங்கே மாஸச் சம்பளத்தை கைலே கொடுத்து ஒரு வாரத்துக்கெல்லாம் போகச்சொல்லி விட்டான்; மானேஜர் மணி போன்லே சொன்னுன்: ''நல்ல க்ரூக் (crook)-ஐ அனுப்பிச்சேடான்னு. ஸமாசாரம் என்னன்னு அப்பறம் ஒரு நாளைக்கு ஸாவகாசமாய் டிப்பன் சாப்படற போது கேட்டேன்; இந்தப்பயல் அந்தப் பாடகனைத்தெரியும், இந்தப் பாடகியைத்


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 7,75,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பேரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சினுப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிதம்பரம் | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விழுப்புரம் |
| ஈரோடு | சீயாழி | நாகப்பட்டணம் | விருதுநகர் |
| கடலூர் N. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேலூர் |
| காஞ்சிவரம் | திலாறு R. S. | பார்வதிபுரம் | வேதாரண்யம் |
| காரைக்குடி | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}\%$ விதம்
இரண்டு ,, ,, ... ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 5000/வரை வட்டி $2\frac{1}{2}\%$ ,,
கரண்ட் கணக்கு .. .. .. .. $\frac{1}{4}\%$ ,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

தெரியும், நான் ரிகார்டிங்குக்கு ஏற்பாடு செய்றேன்னு, காரைப்போட்டுண்டு, ஆபீஸ் பணத்தை ஒரு வாரத்திலே வேட்டு விட்டதைப்பார்த்தா கம்பெனியே திவாலாப் போயிடும் போல இருந்துதுன்னு சொன்னுன் மணி."

அதற்குள் காலதாமதமாய் வந்த அங்கத்தினர் தாம் துவக்கிய கதையை முடித்து விடுகிறேன் என்று ஆரம்பித்தார்:

"மூணு நாள் ஸ்நேகம் ஆயி, ஏதோ பெரிய வியாபகன் போல இருக்கு இவன்னு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டானும். நாலாம் நாள் என் ஸ்நேகிதர் தம் தம்பியிடம் "ஏண்டா, - எங்கெங்கேயெல்லாமோ அலயறே, ஒருவாரமாச்சு, மில்வேஷ்டி ஒரு ஜோடி எங்கேயாவது பாத்து வாங்கிண்டு வாடான்னு சொன்னேன்" என்று குறைகூறிக் கொண்டிருந்தார். ஓங்க பத்து என்ன பண்ணினுன் தெரியுமா: "ஸார் தம்பியை விரட்டி என்ன லாபம்? மில் வேஷ்டி எங்கேயிருந்து அவர் கொண்டுவர முடியும்? நாளைக்கு இந்த வேளைக்கு ஓங்களுக்கு ஒரு ஜோடியில்லே, நாலு ஜோடி கொண்டுவறேன்" என்றுனும்.

"எங்கே இருந்து" என்று என் நண்பர் கேட்க, "ஓங்களுக்கு அந்தக் கவலை எதுக்கு? துட்டுக்கொடும், கட்டிக்க நாளைக்கு வேஷ்டி தறேன்' என்றுனும். உடனே நாலு ஜோடிக்கும் பணம் கொடுத்தாராம்; அவ்வளவுதான், ஓங்க பத்து இன்னும் வரான்."

இத்த மில்வேஷ்டிக் கதை முடியும் ஸமயம், டெலிபோன் மணி அடித்தது; "இதாரடா, அகாலத்துலே, போன்" என்று சோம்பல் பட்டுக்கொண்டு தலைவர் சென்றுர்.........

"ஹல்லோ"

"ஹல்லோ, என்ன ஸுப்ரமண்யமா? என்ன நடுநிசிலே போன்?"

"இல்லேப்பா, யாரோ ஒரு பையன், ரொம்ப பெரிய மனுஷா பெயரையெல்லாம் சொல்லிண்டு நேத்தி ஆபீஸுக்கு வந்தான். "நீங்க வீடு இல்லாம திண்டாடறேளாமே. ஒரு வீடு இருக்கு; ரூ 100 வாடகை; கொடக்கூலி அட்வான்ஸ் ரண்டுமாஸம்; கைக்கூலி ஒருமாஸவாடகை; மொதல் தேதிகாலியாறது"னு சொன்னுன். 'நீ யாரு' 'எப்படி எனக்கு வீடு வேணும்னு தெரியும்'னு கேட்டேன். ஒன் பேரைச் சொன்னுன், 'ஆபீஸ் காஷ் (Office Cash) லே ரூ 300 சொளையா தட்டிண்டு போயிட்டான் அப்பா. ஸாயங்காலத்துக்குள்ளே போன்பண்ணி ஏற்பாடு ஆயிடுத்துங்கற தகவல் சொல்றேன்னு சொன்னுன்........."

தலைவர் இந்தக்கதையையும் வந்து ஸபையில் தெரிவித்து, "மடையன், ரூ 300 ஐக் கொடுத்தானும்; எம்பேரைச் சொன்னுனும்? ஏன் ஒரு போன் அடிச்சு, என்னை ஒரு வார்த்தைகேக்கப் படாதோ, இதோ எனக்கு கொஞ்சம் உளுந்து கொண்டுவந்து கொடுத்தான்; இன்னம் என்னென்னமோ கொண்டுவறேன்னுன்; கொண்டுவா அப்பறம் கணக்குபாத்து பணம் கொடுக்கறேன்னு சொல்லியிருக்கேன்........." என்றுர்.

முக்ய அங்கத்தினர் என்று முதன் முதலில் குறிப்பிட்ட நண்பருக்கு வந்தது ஆத்திரம்.

"கள்ளனுக்கும் கோல் சாத்த ஒரு இடமும், கும்பிட ஒரு தெய்வமும் வேணுமோல்யோ? எல்லாரும் ஓங்களப்போல அவன் விஷயம் தெரிஞ்சுண்டு இருக்க முடியுமா என்ன?" என்றுர்.

"இல்லே. ஸார்; நீங்க இப்படி இந்த மில்வேஷ்டிக்காரரையும், வீட்டுக்காரரையும் போல மோசம் போவேளோ, கேக்கறேன். பணம் கொடுக்கறதுன்னு, கொஞ்சம் யோஜனை பண்ண மாட்டேளா?"

"யோஜனை, பொடலங்கா, ஒத்தொத்தன் அந்த ஸாமான், இந்த ஸாமான்னு கஷ்டப்படறபோது, யோஜனை தான் வரும்."

"ஏது, ஓங்களுக்கு வர கோபத்தைப் பாத்தா, ஏதோ ஓங்க மடியிலேயும் பத்து கையைப் போட்டுட்டான் போல இருக்கே?"

"நன்னுப்போட்டான்; வெக்கம், வெளியிலே சொல்லிக்காம இருக்கேன்; ஸரியா மூணு மாஸமாச்சு; ரூ 250 ரொக்கமா காலியாகி."

"என்ன? நீங்க கூடவா"

"நான்கூடவா என்ன? அவன்பாட்டுக்கு ஸூட்டைப் போட்டுண்டு, கதவை விரலால் டக், டக்னு தட்டி, உள்ளே வந்தான். ரொம்ப தெரிஞ்ச மோட்டார் கம்பெனிக்காரர் ஒத்தருடைய பேரைச் சொல்லிண்டு வந்தான். "மோட்டார்காருக்கு" டைர் "(Tyre) வேணும்னு சொன்னேளாமே, போடுங்கோ, செவ்வாக்கிழமை ராத்திரி

இந்த இடத்துலேயே 'டெலிவரி (delivery) ன்னுன்......"

இப்படி நேரானமார்க்கத்தில் உத்யோகம் கிடைத்துப் பிழைக்க முடியாத பத்மநாபன், குறுக்குப் பாதைகளில் இறங்கி, ப்ளாக்மார்கட், (Black market), கள்ள வியவஹாரம், கொள்ளை வியாபாரம்— இவற்றின்மூலம், தன் அடா புடி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான். வெத்திலே, விசிறிமடிப்பு விடுவதில்லை; பத்து தப்படிப் போவதானாலும் ரிக்ஷாவிலே தான், கால்மேல் கால் போட்டுச் செல்வது. தெரிந்த பெரியோருக்கும் அதுவேண்டும் இதுவேண்டும் என்ற ஆதுரத்தால் ஏற்படும் புத்தித்தளர்ச்சியை நன்குஅறிந்துகொண்டு, தனக்கு இயற்கையாயுள்ள அறிவையும் ஸாமார்த்தியமாய் உபயோகித்து, பலரின் தலையைத்தடவி, தன் வயிற்றைக்கழுவி வந்தான் பத்து. அவரவர் அந்தஸ்தில் உள்ளவர்கள், தாம் கள்ளமார்கட் வழிகளில் இறங்கினோம் என்று அதிகாரிகளுக்குத் தெரியலாகாதெனப் பத்துவைப் பற்றிப் போலீசுக்குப் புகார் செய்ய மாட்டார்கள் என்பதும் பத்துவுக்கு நன்ருய்த் தெரியும்.

தம் பெயரை உபயோகப்படுத்திவிட்டான் என்றதும், ஒன்றையுமே பெரிதாய்க் கருதாத தலைவர் ஒரு வகை ரோஷம் வந்து எழுந்தார். முக்ய அங்கத்தினர் "கிளம்பும். அவன் வீடு ஒங்களுக்குத் தெரியுமா? அடி ஒதவுவது போல் வேறொன்றும் ஒதவாது" என்ருர். உடனே நான்கு பேரும் காரில் ஏறி, ஒரு சந்துக்குள் மெள்ள ஹாரன் கொடுக்காமல் சென்றனர். காரைக் கொஞ்சதூரத்தில் நிறுத்திவிட்டு, தலைவர் மட்டும் மெள்ள, பத்துவின் வீட்டிற்கு வந்து, பிரியமாய் அவனைக்கூவி அரைத் தூக்கத்திலிருக்கும் அவனை ஏதோ பேச்சுக்கொடுத்து, மெள்ள நண்பர்கள் காரோடு இருக்கும் இடத்துக்குக் கொண்டு வந்தார். உடனே மற்ற மூன்று நண்பரும் வெளியே வந்து பத்துவை வெறித்துப் பார்த்தனர். இருட்டில் தெரியாதுபோலப் பாவிக்கப் போகிருன் என்று தலைவர் பெயரைச் சொல்லி, ஒருவரொருவராய், 'தெரியுமோ இல்லையோ' என்று பத்துவைக் கேட்டார்.

"தெரியுமான்னு கேளுங்கோ? ரூபாய் 250 டைர்னு சொல்லுங்கோ" என்ருர் ஒருவர்.

"மில்வேஷ்டி"

"வீட்டுவாடகை"

"கிராமபோன் கம்பெனி"

உடனே, "சீ, பேமானி, ஒதச்சாபாரு... பட, பட வென மெஷின் கன் (machine-gun) போல வசவு மாறி, பத்துமேல் விழுந்தது. கிராமபோன் கம்பனியில் வேலைபார்த்துக் கொடுத்தவர், கையையும் கொஞ்சம் தூக்கினுர்.

என்ன செய்தால் என்ன? நிதானமாய் பத்து, "நீங்க சொல்றது ஆச்சரியமாயிருக்கே? நேத்திக்கிக்கூட, மில்வேஷ்டி அவருக்குக் கொண்டுபோனேன், 9 க்யூ பிட்ஸாயிருக்கு வேண்டாம்னு சொன்னுர் அவர்" என்று சரடுவிட ஆரம்பித்தான்.

தலைவர் "ஸரி பத்து,இதெல்லாம் ரொம்ப தைரியமா பண்ணிண்டுருக்கே நீ; எப்படியாவது இவா ஒன்னை போலீசுக்கு இழுத்துப் புடறதுன்னு கங்கணம் கட்டிண்டுருக்கா, ஒரு வாரம் ஒனக்கு 'டைம்'கொடுக்கறேன், இந்த மில்வேஷ்டி, வாடகை, டைர் தொகைகளைக் கொண்டுவந்து கொடுத்துடு. கொடுக்காட்டா பாத்துக்கோ" என்று பயமுறுத்தினுர்,

கூடவந்த நண்பரில் ஒருவர் எங்கேருந்து அவன் கொடுக்கறது? இதுமாதிரி இன்னம் நாலுபேரை, தலையைத்தடவி, ஏமாத்தினுத்தான் உண்டு; போடா, ஸ்காம்ப் (scamp), போய் படுத்துண்டு, நாளைக்கு வேணுங்கற யோஜனைகளைப் போடு, போ" என ஒரு கல்தா கொடுத்தார்,

* * *

இது நடந்து ஒருமாதம் ஆயிற்று. தை பிறந்தது; பல கன்னிகளுக்கு வழிபிறந்தது மல்லாமல், பத்துவுக்கும் வழி பிறந்த நற்காலம். சமயல்காரனுக்கும், பாடகனுக்கும் எவ்வளவு கிராக்கியோ அவ்வளவு கிராக்கி பத்துவுக்கும் ஏற்படும் காலம்.

'மில்வேஷ்டி' கதையைச் சொன்ன நண்பர் தம் வீட்டிலேயே தம் மைத்துனிக்குக் கல்யாணம் நடத்த வேண்டியதாயிருந்தது. 'கோடி கன்யகாதான பலன்' என்று புகழ்வது வழக்கம்; இந்த நெருக்கடியான காலத்தில் ஒரு சிறு கல்யாணத்தை நடத்தி வைத்தாலே அந்தக் கோடி கல்யாண பலனும் ஒருவருக்குக் கிட்டும் என்பதில் ஸந்தேகமில்லை.

கல்யாணப் பெண்ணின் தந்தை நான்கு நாள் முன்னதாகச் சனிக்கிழமையில் ஸமாராதனைக்காக ஸ்ரீ வேங்கடாசலபதி பூஜையைச் செய்துகொண்டிருந்தார். கல்யாண ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கும்

மாப்பிள்ளை தம் அறையில் தம் ஏற்பாட்டு ஆலோசனைகளில் ஆழ்ந்திருந்தார்; முக்யமாய் அரிசியே வேண்டிய அளவிற்குச் சேகரம் ஆகவில்லை; நான்கு நாட்கள்தான் இருந்தன. உள்ளே பூஜை நடந்து கொண்டிருந்தது.

"வஸ்த்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி......உபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி......ஆபரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி........."

தம் அறையிலிருத மாப்பிள்ளை "சாஸ்திரிகளே, மாமனாரை ஒன்றொன்றாய் அக்ஷதையைப் போடச் சொல்லும், இல்லாவிட்டால், கல்யாணத்தில் 'அக்ஷதார்த்த, மே வேறொன்றை 'ஸமர்ப்பயாமி' என்று சொல்லும்படியாகிவிடும் போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே பூஜை நடக்குமிடம் வந்து சேர்ந்தார்.

"அது இருக்கட்டும். அரிசி அகப்பட்டாலும், அதை எவ்வளவு பேருக்கு சாப்பாடு போட்டு என்று ஆள் வைத்து சோதனை போடறாளாமே கவர்மெண்டுலே" என்று கேட்டார் சாஸ்திரிகள்.

"அதுக்கு நான் ஒரு புது யோஜனை செஞ்சுருக்கேன். கல்யாணப் பத்திரிகைலே 'உங்கள் ரேஷனை முன்னதாகவே அனுப்பவும்' என்று எல்லாரும் போடறா; இந்த கல்யாணத்தோடே சின்ன மச்சுனனுக்குப் பூணலையும் போட்டுடறதுன்னு தீர்மானிச்சுருக்கேன். அரிசி ஏதுடான்னு கேள்விவந்தால், பிக்ஷை அரிசி எல்லாரும் கொண்டுவந்து போட்டாளெ என்று சொல்லிவிடலாம்" என்றார் மாப்பிள்ளை.

"என்ன, மாமனார் ஸார், மாப்பிளை லேசுபட்டவரா, எப்படி யோஜனை பாத்தேளா?" என்றார் சாஸ்திரிகள்.

இதற்குள் சில பெரும்சமையல் ஸாமான்களைச் சேகரிக்கச் சென்றிருந்த மனைவி வந்தாள். அவளுடன் அரிசிக்காகத்தோன்றிய பூணூல் கல்யாணத்தையும், பிக்ஷையரிசி யோஜனையையும் எல்லோருமாய்க் கலந்துகொள்ள ஆரம்பித்ததும்,

"அதெல்லாம் வேண்டாம்னு, அரிசிக்குத்தான் ஏற்பாடு ஆயிடுத்தே!" என்றாள்.

"என்ன ஏற்பாடு ஆயிடுத்து?" என்று மாப்பிள்ளை கேட்டார்.

"அதான், நீங்கள் ஒத்தரை நேத்திராத்திரி அனுப்பியிருந்தேளே, ஓங்கபேரும், இந்த ஆத்து அட்ரஸும் எழுதியிருந்த சீட்டு ஒண்ணைக் காண்பித்தார். ரண்டு மூட்டை அரிசி கல்யாணத்துக்காக நம்பாத்துக்கு வேணும்னு ஓங்க ஸ்நேகிதர்.........சொன்னாராம். அப்படியே ஸ்வீடுக்காக (sweet) கொஞ்சம் கடலப்பருப்பு ஆப்பட்டாலும் பாருங்கோன்னு எல்லாத்துக்குமா ஒரு 100 ரூபாய் நோட்டாக் கொடுத்தேன்...."

அப்படியே எல்லோரும் உட்கார்ந்து போய்விட்டனர்............

திரும்பி ப்ரக்ஞை வந்ததும், வெத்திலை, விசிறிமடிப்பு, ரிக்ஷா என்ற லக்ஷணங்கள் சிலவற்றைத் தம் மனைவி கொடுத்தாள் "ஸரி, நம்ப பத்து! நம்மையே ஒரு கை பாத்துடறதுன்னு கங்கணம் கட்டிண்டு செஞ்சுருக்கான்."

"ஸரிதான்! அரிசியாவது. மூட்டையாவது.........எல்லாம் ஒரே மூட்டை! பிக்ஷை அரிசி தான் கதி.........அட, பத்து!" என்றார் மாப்பிள்ளை.

இப்படி நண்பருக்கெல்லாம் 'பத்து' ஏற, பத்துவுக்கு வரவு நடந்து கொண்டிருக்கிறது.

## அட்டைப் படம்

பிரிட்டிஷ் மன்னரின் புதல்வி இளவரசி எலிஸபெத்—பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு வாரிஸ். கிரீஸ் இளவரசனுக்கும் இவளுக்கும் திருமணம் நிகழலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

சர்ச்சில் சமீபத்தில் காமன்ஸ் சபையில் பேசுகையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கலகலத்துக் கொண்டிருக்கிறதைக் கண்டு கண்ணீர் வடித்தார். எனவே இளவரசி அரியணை ஏறும்பொழுது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்ற பதமே அர்த்தமற்றதாகவும் ஆய்விடலாம் என்று தீர்க்கதரிசிகள் குறிப்பிடுகிறார்கள்.






காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை வினோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச் சோப்பின் மிருதுவான செழிப்பாயுண்டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய்கிறது—மேலும் அதன் நறுமணம் உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழகை அதிகப்படுத்த இச் சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. வினோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.

# வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

YWR. 19-23 TM VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

# வைத்திய சங்கடம்

எம். எஸ். கமலா

மாலை நேரம். மங்கிய இருள்திரை வான வெளியிலிருந்து நிதானமாய் ஆடி ஆடி, தொங்கத் தொடங்கியது. வீடுகளிலெல்லாம் விளக்கேற்றி விட்டனர். கடைகளுக்குள்ளும் பாதரஸ பல்புகள் நிலவைப்போல் வெளிச்சத்தை வீசிக் கொண்டிருந்தன. கடைத்தெருக்களில் போக்கு வரத்து வண்டிகளும், உலாவச் செல்வோரும், அதிகமாகி, கலகலப்புடன் ஒருவர் பேசுவது மற்றொருவர் காதில் விழாமல் கஷ்டத்திலாழ்த்தியது.

ஹாக் பஜாரிலிருந்து டிராமில் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தான் நந்ததுபால்பாபு. பிடென்ஸ்டிரிட்டை விட்டதும், டிராம் நிதானமாய்ப் போய்க்கொண்டிருந்தது. எதிரில் ஒரு ஒற்றைமாட்டுவண்டி நின்றிருந்தது. இன்னும் கொஞ்சம் முன் சென்றால் நந்ததுபாலின் வீட்டிற்குச் செல்லும் சிறியதெரு வந்துவிடும். தான் இறங்கவேண்டிய இடத்தை உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டிருந்தபோது, எதிரில் ஒரு கடையிலிருந்து நந்ததுபாலின் நண்பன் 'பங்கூ' வருவதைப்பார்த்து,

"அடேய்! பங்கூ!! நில்லுடா.........!!! நானும் வறேன்" என்று டிராமிலிருந்த வாறே உரத்துக் கூவினான் நந்ததுபால். நந்ததுபால் இரண்டு கைகளுக்கிடையேயும் மூட்டைகளை இடுக்கிக்கொண்டு அவசர அவசரமாய் இறங்கப்போய், காலில் வேஷ்டி தடுக்கியதால் கீழே விழுந்தான்.

டிராமில் இருந்தவர்களனைவரும் ஒரே முகமாய், 'கொல்'லென்று கூவி விட்டனர். டிராம் சட்டென்று நின்று விட்டது. வெகு பிரயாணிகள் பரபரப்புடன் இறங்கி நந்ததுபாலை எடுத்து நிற்க வைத்தனர். டிராமுக்குள் இருந்தவர்கள் ஜன்னல் வழியாய்த் தலையை நீட்டி, தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

"அடடாடாடா! ரொம்ப பட்டு விட்டதா என்ன? கொஞ்சம் சுடச்சுட பாலைக்கொடுங்கள். இரண்டு கால்களிலும் அடிபட்டு விட்டதா என்ன?"

ஒருவர். "மூர்ச்சையாகி விழுந்து விட்டாரோ?" என்றார். மற்றொருவர், "தலை சுற்றி விழுந்திருப்பான்," வேறொருவர், "குடிகாரனோ! என்னவோ?", ஒரு நாட்டுப் புறத்தான் "வலிப்போ?", ஒரு கிழவி, "ஏதாகிலும் காற்று தோஷமாயிருக்கும்; எழவு காற்று சங்கையானால் இப்படித் தான்" என்றார்கள்.

உண்மையில் நந்ததுபாலுக்கு எங்கும் அடிபடவில்லை. ஆனால் அவன் சொல்வதை அங்கே கேட்பவர்கள் யார்?

"எங்கும் படவில்லை என்கிறீரே சுவாமி! நன்றாய்ப்பட்டிருக்கிறது. உள்வலி. இரண்டு மாதம் கட்டிலில் சேவை செய்யவேண்டி வரும். வீட்டிற்குப் போனபிறகுதான் தெரியும்" என்றார்கள் சிலர்.

தனக்கெங்கும் அடிபடவில்லை யென்று நந்தபாபு எல்லோரையும் நன்றியறிதலுடன் பார்த்துச் சொல்லிக்கொண்டான்.

"பார்த்தீர்களா! நல்லவனுக்குக் காலம் இல்லை இது. நாமெல்லாம் கண்ணாரக் கண்டோம். ஆனாலும் இல்லை யென்று எவ்வளவு அழகாய்ச் சாதிக்கிறான்பேர்வழி" என்றார் ஒரு கிழவர்.

இந்தப் பேச்சு அலைகளுக்கு அணைபோடுவது போல் பங்கூவும் அங்கு வந்தான். நந்தபாபு ஜனங்களின் அனுதாபக் குரல்களுக்கிடையே யிருந்து தப்பித்துக் கொண்டுவெளியில்வந்தான். பரிதாபமாய்ப் பார்க்கும் ஜனங்களின் பார்வைகளையும், பற்பலவிதமாய்ப் பேசும் பிரயாணிகளையும் சுமந்து கொண்டு டிராம் சென்றது.

"பங்கூ........." என்றான் நந்ததுபால்.

"நந்தா! எனக்குக்கூட கண்கள் சுழன்று விட்டன. நீ விட்டுமட்டும் நடக்கவேண்டாம்" என்று, "ஏய் ரிக்ஷா" என்று அங்கே சென்று கொண்டிருந்த ரிக்ஷாகாரனை அழைத்து, நந்தபாபுவை ரிக்ஷாவிலேற்றி பங்கூ ரிக்ஷாவைத் தொடர்ந்து சென்றான்.

* * *

நந்தலாலுக்கு நாற்பது வயது. கறுத்த நிறம். உருண்டையான முகம். அவன்

தந்தை யு. பி. கம்ஸரியெட்டில் வேலை பார்த்து வேண்டிய மட்டும் பணம் திரட்டி வைத்திருந்தார். மேலுலகத்திற்கு வரும்படி சம்மன் வந்ததும் தம் ஒரே மைந்தனை நந்தலாலுக்கு, கல்கத்தாவில் பெரிய வீடு ஒன்றும், வண்டி வண்டியாய் நிரப்பக் கூடிய சாமான்களும் பெரிய ப்ராமிஸரி நோட்டுகள் நிறைந்த கத்தை இரண்டும் விட்டு வைத்துச் சென்றார். நந்தலாலுக்குச் சிறிய வயதிலேயே விவாகமாகி விட்டது. அவ்வருடம்தான் அவன் மனைவி இறந்து போனாள். மறு மணம் செய்து கொள்ளவில்லை. வீட்டில் அவன் அத்தை ஒரு கிழவி இருக்கிறாள். அம்மாது எப்பொழுதும் பூஜை புனஸ்காரங்கள் செய்த வண்ணமிருப்பாள். வீட்டில் எல்லா வேலைகளுக்கும் ஆட்களிருந்தனர்.

நந்தலாலுக்கு மறு மணம் செய்து கொள்ளக் கூடாதென்ற எண்ணமில்லை. ஆனால் இதுவரை அதற்கு ஒருவித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு முக்கிய காரணம் விடிந்தால் தியேட்டர், சினிமா, புட்பால் மேச், ரேஸ், நண்பர்களுடன் சீட்டாடுவது, ஊரைச் சுற்றுவது இப்படியே இருந்தான். இதற்கே பொழுது சரியாயிருக்கும்போது விவாகத்தைப் பற்றி நினைக்கத்தான் போது ஏது? ஆதலால் அதைத் தவிர்க்க வேண்டியதுதான்.

நந்தலால் ஒன்று மறியா அமாயகப் பேர்வழி. சோம்பேறி. உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையமாட்டான்.

மாலை நேரம். நந்தபாபுவின் வீட்டு மாடியில் நண்பர்கள் சேர்ந்தனர். நந்தபாபுக்கு அன்று உடம்பு சரியாயில்லை. ஷாலை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தான். நண்பர்கள் காபி, உப்புமாவைக் காலி செய்தனர். வெற்றிலையும், சிகிரெட்டும் த்வம்ஸமாகவேண்டியது பாக்கி.

கோபிபாபு சொன்னான்: "நந்து! சரீரத்தை இவ்வளவு நிர்லக்ஷியமாய் விட்டு வைக்கக் கூடாதடா! இந்தக் குளிர்காலத்தில் தலை சுற்றுவதும், கண்கள் சுழல்வதும் நல்லதல்லடா"

"கண்ணும் சுழலவில்லை, தலையும் சுற்றவில்லை; கால்களில் வேஷ்டி தடுக்கியது" என்றான் நந்து.

"அடே! அதல்லடா!! கண்கள்தான் இருண்டு வந்திருக்கும்டா!!! உன் உடல் கூட சோர்வடைந்திருக்கிறது; அருகில் தானே இருக்கிறார் டாக்டர் தபாதார். நல்ல 'பிஸிஷியன்'. அவரை மிஞ்சும் கெட்டிக்காரர்கள் யாரும்இல்லை இவ்வூரில் நாளையே போய் அவரைப்பார்த்து வருவோம். என்ன சொல்கிறாரோ?" என்றான் கோபி.

"ஏ, நந்து! என் சொற்படி கேட்பதாயிருந்தால் அங்குமிங்கும் அலையாமல் ஒரே தரமாய் நேபால் பாபுவுக்குக் காட்டு. அவரைப் போன்ற அனுபவசாலி 'ஓமியோபதியில் வேறுயாருமில்லை. கொஞ்சம் முன்கோபி. ஆனாலும் கிழவன். முதல் தரமான டாக்டர்" என்றான் பங்கூ.

ஒருமூலையில் இறுகப் போர்த்திக் கொண்டு அமர்ந்திருந்த ஷஷ்டிபாபு, தலையில் பனிக்குல்லாய், அது தாடைகளிரண்டையும் இழுத்துப்பிடித்து முகவாய்க்கட்டையை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. அதற்குமேல் மப்ளரை கட்டிக்கொண்டு இருந்தவர், "இந்தக் குளிரில் யாராகிலும் டிராமில் செல்லலாமா? குளிர் நடுக்கும் போது விழமாட்டார்களா? நந்தபாபு எப்பொழுதும் சரீரத்திற்கு உஷ்ணத்தையளித்துக்கொண்டேயிருக்கவேண்டும்..." என்றார் நொண நொண வென்று.

"நந்தபாபு! நீ இந்த முரட்டு வாழ்க்கையை விட்டுத்தொலை. மாந்தாதா காலத்து கட்டில், தசரதர்காலத்து தலையணைகள், அதன் நாயகர்களான விரிப்பு. குதிரையோ இறகுஇல்லாத பஞ்சகல்யாணி, தேவலோகத்துப் புரவிதான். அடேய், இப்பேர்ப்பட்டவைகளில் எங்காவது உடல் சுகத்தைக் காணுமடா! உனக்கென்ன குறைச்சல், பணம்தூங்கி, துருவேறிக்கொண்டிருக்கிறது. கொஞ்சம் செலவு செய்து சுகமாயிருக்கக் கற்றுக்கொள் அப்பனே!" என்றான் நிதிராம்.

இப்படி ஒவ்வொருவர் ஒவ்வொருமாதிரி வம்புசெய்து வயிற்றெரிச்சல் கொட்டவே மறுநாள் நந்தபாபு டாக்டர் தபாதார் வீட்டிற்குச் செல்வதாக ஒப்புக்கொண்டான்.

* * *

'டாக்டர் தபாதார். எம். டி. எம்., ஆர். ஏ. எஸ், ஸின் வீடு 'க்ரேஸ்டீரீட்டில்' இருக்கிறது. பெரிய மாளிகை. இரண்டு கார்களிருக்கின்றன. வெகுசீக்கிரம் தொழிலில் முன்னேறினார். நல்ல ப்ராக்டீஸ். நோயாளிகள் டாக்டரைத் தங்கள்வீட்டிற்கு வரவழைக்க விரும்பினால் அவருக்கு வரப்போது இருக்காது. எந்நேரமும் அவர் வீட்டுவாயிலில் தேர்கூட்டம், திருநாள்கூட்-

டமாயிருக்கும். ஒன்றரைமணிநேரம் பக்கத்து அறையில் உட்கார்ந்து வெறுப்புக் கொண்டபின் நந்தபாபுக்கு அழைப்பு வந்தது. நந்தபாபு பரபரவென்று டாக்டரிருந்த அறைக்குள் நுழைந்தான். அப்பொழுதும் அங்கொரு மார்வாடி சொக்காயைக் கழற்றிவிட்டு நின்றிருந்தான். டாக்டர் அவன்வயிற்றில் விரலால் குத்திக்காட்டியபடியே 'இஞ்ச்டேப்பால்' அவன்வயிற்றை அளந்து, "ஒன்றேகால் அங்குலம் வளர்ந்திருக்கிறது" என்றார்.

நோயாளி ஆனந்தத்துடன் "நாடி எப்படியிருக்கிறது பாருங்கள்" என்றான்.

டாக்டர், நாடியருகில் மோட்டார் ஸ்பார்இங்க் ப்ளக் வைத்துப் பார்த்து, "ரொம்ப நன்றாய் அடிக்கிறது" என்றார். "நாக்கைப் பாருங்கள்" என்று நாக்கை நீட்டினான் நோயாளி. ஓபைரா கண்ணாடியால் பார்த்து, "கொஞ்சம் பழுப்பேறிப் பூத்திருக்கிறது. நாளைக்குவா!" என்றார். மார்வாடி சென்றபின், டாக்டர் தபாதார் நந்தலால் பக்கம் பார்த்து, "வெல்" என்றார்.

"டாக்டர்! ரொம்ப அபாயத்திலிருக்கிறேன். தங்களிடம் வந்திருக்கிறேன். நேற்று எதிர்பாராமல் திடீரென்று டிராமிலிருந்து........" என்று சொல்லிக் கொண்டே இருக்கிறான்.

"காம்பௌண்ட் ப்ராக்சர் — எலும்பு முறிந்து விட்டதா?" என்றார் தபாதார்.

நந்தபாபு முதலிலிருந்து கடைசிவரை தன் விஷயத்தை முழுவதும் சொன்னான். "வலியில்லை, ஜ்வரம் வருகிறதில்லை, இருமல் இல்லை, தலைவலியில்லை. ஆனால் பசி அவ்வளவாக இல்லை. இரவில் பாழாய்ப்போன சொப்பனங்கள் வருகின்றன. மனதில் 'திக், திக்' கென்கிறது"

தபாதார் நந்தலாலின் தோள், வயிறு, தலை, கை, கால் முதலியவைகளைப் பார்த்தபடியே "நாக்கை நீட்டும்" என்றார்.

நந்தலால் நாக்கை நீட்டினான்.

டாக்டர் முகத்தைச் சிடுத்துக்கொண்டே பேனாவை எடுத்து, பிரிஸ்க்ரிப்ஷன் எழுதியபின் நந்தபாபுவைப் பார்த்துச் சொன்னார்: "நாக்கை நீட்டியது போதும். இந்த மருந்தை ஒரு நாளைக்கு மூன்று முறை குடியுங்கள்.


# நான்கோ பிரிண்ட் இங்கி

•

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

•

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

## S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

"என் உடல் நிலை எப்படி யிருக்கிறது?" என்று கேட்டான் நந்து.

"வெரி பாட்" என்றார் தபாதார்.

நந்தலால் பயத்துடன் குமுறியபடியே, "என்ன வியாதி?" என்று கேட்டான்.

"இன்னும் சிலநாள் சரியாய்ப்பார்க்காமல் ஒன்றும் சரியாய்ச் சொல்வதற்கில்லை; ஆனால்'Cerebral tumour with strangulated ganglia' என்று சந்தேகமாயிருக்கிறது; 'டிரிபாயின்' செய்து (தலையில் துளை செய்து) ஆபரேஷன் செய்ய வேண்டி வரும்; பின்புறக் கழுத்தில் ஆபரேஷன் செய்து பிணைத்துக் கொண்டிருக்கும் நரம்புகளைத் தளர்த்திவிட வேண்டும். ஷார்ட் ஸர்கியூட்டாயிருக்கு"

"பிராணபயமில்லையே?" என்றான் நடுங் கியபடி நந்து.

"பயப்படாதீர்கள். பயப்பட்டால் நான் குணப்படுத்த மாட்டேன். ஒருவாரத் திற்குப்பின் மறுபடியும் வாருங்கள். என் 'ப்ரெண்ட் மேஜர் கோஸாயி' யுடன் கன்ஸல்ட் செய்து நிச்சயமாய் என்ன வியாதி யென்பதைச் சொல்லி விடுகிறேன்; பருப்புச் சாதம் சாப்பிடவேண்டாம். எக்ஸிப், போஸ்மேரோஸா¬ப், சிகெஸ்ஸ்டு முதலியவைகளை உட்கொள்ளுங்கள்; ஐஸ் வாட்டர் நிறையக் குடியுங்கள்......ம்...... முப்பத்திரண்டு ரூபாய்கள்......தேங்க்யூ"

நந்தலால்பாபு கால்களை இழுத்து வைத்தபடி சென்றான்.

* * *

மாலை பங்கூ வந்து சொன்னான்: "ஏண் டாப்பா! நான் அப்பவே சொல்ல வில்லையா? அவன் கிட்டப் போகாதே! அவன் மார்வாடிகளின் வயிற்றைக் கரைத்துப் பணத்தைச் சம்பாதிக்கிறான்... ஊம்......தலை மேலே ஆபரேஷன் செய் கிறானும்.........

"நம் பேட்டையிலிருக்கும் தாரிணீ கவிராஜனுக்கு (ஆயுர்வேதடாக்டர்) ஏன் காண்பிக்கமாட்டாய்."

"வேண்டாம், நான் சொல்வதைக்கேள் நந்து; உண்மையில் உனக்குத் தலை சுற்ற லாயிருந்தால் அந்த டாக்டரால் ஒண்ணும் குணப்படுத்த முடியாது 'ஹோமியோபதி' வைத்தியம்தான் நல்லது" என்று குறுக் கிட்டான் கோபிபாபு.

அச்சமயம் உள்ளே நுழைந்த நிதிராம் "நான் சொல்வது யார்காதிலாகிலும் ஏறு கிறதா? டாக்டர் வைத்தியம் பிடிக்காவிட் டால் நட்டாமுட்டி வைத்தியம் செய்யுங் களேன். வேலைக்காரனைப் புளிக்காய்ச்சலை எடுத்துவரச் சொல்லட்டுமா? அத்துடன் கொஞ்சம் காவிமண்ணையும், காசுகட்டி யையும் கலந்து பத்துபோட்டுக்கொள்."

அப்படியும் இப்படியும் பேச்சுவளர்ந்து மறுநாள் ஹோமியோபதி வைத்தியம் பார்க்கிறதென்ற முடிவுக்கு வந்தனர்.

* * *

இரண்டாம்நாள்காலை நந்தபாபு நேபால் டாக்டர் வீட்டுக்குச் சென்றான். நோயா ளிகள் அதிகம் வரத்தொடங்காததால் சீக்கிரமே நந்தபாபு உள்ளே அழைக்கப் பட்டான். பெரிய அறை. ஜமக்காளம் விரித்திருக்கிறது. புஸ்தகங்கள் குவியல் குவியலாய்க் கிடக்கின்றன. புஸ்தகச்சுவ ரிற்கிடையில் பஞ்சதந்திர கதையில் வரும் நரியைப்போல் கிழநேபால் பாபு அமர்ந் திருந்தார். வாயில்ஹுக்கா. அறைநிறையப் புகைசூழ்ந்திருந்தது. நந்தபாபு டாக்டரை வணங்கி நின்றான். நேபால்பாபு அவனை உற்றுப் பார்த்தபடியே "உட்கார இடமிருக் கிறதே!" என்றார்.

நந்தபாபு அடக்கமாய் உட்கார்ந்ததும் "மூச்சுத் திணறுகிறதா?" என்று கேட்டார் நேபால்பாபு.

நந்து பயத்துடன் "அ...ய்...யா!" என்று குமுறினான்.

"நான் எதற்காகக் கேட்கிறேனென்றால் சாதரணமாய் நோயாளியைத் தூக்கித் தெருவில் போடும்போதுதான் என்னை அழைப்பார்கள்."

நந்தபாபு வெகு அமைதியாய் "நான் தான் நோயாளி" என்றான்.

"வழிப்பறி கொள்ளையடிப்பவர்களிட மிருந்து வெகுசீக்கிரம் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டாயே! நல்லது உனக்கென்ன செய்கிறது சொல்" என்றதும் நந்தபாபு தன் கதை முழுவதையும் சொன்னான்.

"தபாதார் என்ன சொன்னான்?"

"என் தலையில் 'ட்யூமர்' இருக்கிற தென்றார்"

"தபாதார் தலையில் என்ன இருக்கிற தென்று உனக்குத் தெரியுமா? கோபர்

(சாணி), குள்ளாயிக்குள் கொம்புகள், பூட்ஸுக்குள் குளம்புகள், குட்டுக்குள் வால்......உம்...சரி...பசியெடுக்கிறதா?"

"இரண்டு நாட்களாய்ப் பசியென்னும் பெயரே கிடையாது"

"தூங்குகிருயா?"

"இல்லை"

"தலை வலிக்கிறதா?"

"நேற்றுச் சாயந்திரம் இருந்தது."

"இடதுபுறமா?"

"ஆமாம்"

' அல்லது வலதுபுறமா?"

"ஊம்"

"நிதானமாய் யோசித்துச்சொல். எந்தப் பக்கம்?" என்று சற்று உரத்துக் கேட்டார்.

"இரண்டு பக்கமுமில்லை, நடுமத்தியில்"

"வயிற்றைப் புரட்டுகிறதா?"

"அன்று 'நிதி' காபூல் பட்டாணி கொண்டு வந்தான். அது தின்றதினுல்........."

"சரியாய்ச்சொல்லு. வயிற்றில் வலியா? புரட்டலா?"

நந்தபாபு பயந்துபோய் "குடு, குடு என்கிறது" என்ருன்.

டாக்டர் நேபால் பெரிய பெரிய புஸ்தகங்களை எடுத்துப் பார்த்தார். சற்றுநேரம் சிந்தனையிலாழ்ந்தார். பிறகு சட்டென்று "உம், ஒரு மருந்து கொடுக்கிறேன், வாங்கிக்கொண்டுபோ! முதலில் உன் உடலிலிருக்கும் 'அலோபதிக்' விஷத்தை விரட்டி அடித்து விடவேண்டும். இந்த அலோபதிக்காரர்கள் என் ஐந்தாவதுவயதில் இரண்டு 'க்ரெயின் க்வினைன்' என் உடலில் ஏற்றினுர்கள். இன்றும் சாயந்திரமானுல் தலைநோய் கிடு கிடு வென்று வந்து விடுகிறது. ஒருவாரம் பொறுத்து வா! அப்பொழுது வைத்தியம் செய்யத் தொடங்குகிறேன்"

"எனக்கு என்னநோய்?"

நேபால் புருவத்தை நெறித்துக்கொண்டு, நோயைப்பற்றியறிந்தால் உனக்கென்ன தெரியப்போகிறது. உன் வயிற்றில் Differential calculus ஆகிவிட்டால் உனக்கென்ன தெரியும்? சாதம்சாப்பிடாதே, இரண்டுவேளையும் ரொட்டிசாப்பிடு, தெளிவாய், சாதம் வடிக்கும் கஞ்சியைக்குடி. குளிக்கவேகூடாது. தாகமாயிருந்தால் சூடான ஜலம் கொஞ்சம் குடிக்கலாம். சுருட்டு குடிக்கக்கூடாது. புகைபட்டால் மருந்தின் பவர்போய்விடும். என்ன யோசனை செய்கிருய்? எங்கள் அலமாரியிலிருக்கும் மருந்தெல்லாம் கெட்டிருக்கிறதென்ருு? இல்லை. எங்கள் புகையிலையில் ஸல்பர்தம்டீ கூடக் கலந்திருக்கும். எனக்கு 'பீஸ்' என்ன? என்று சொல்ல வேண்டுமா? அதோ சுவரில் எழுதியே தொங்குகிறதே. எனக்கு முப்பத்திரண்டு, மருந்திற்கு நாலு, ஆக மொத்தம் முப்பத்தாறு ரூபாய்கள் சேரவேண்டும்."

நந்தபாபு வாயைமூடிக்கொண்டு பணத்தையெண்ணி வெளியில் நடந்தான்.

* * *

நிதிராம் சொன்ஞன்; "எதற்காக மிஸ்டர் அனுவசியமாய்ப் பணத்தை வாரி இறைப்பது? அதைவிட நான்கு முறை பாக்ஸில் உட்கார்ந்து நாடகம் பார்த்திருந்தால் நன்ருயிருக்கும். அந்த நேபாலா! நரிக்கிழம். நம் நந்து பாயைத் தலையைத் தடவி குல்லா போட்டுவிட்டான். அவன் என்கையில் சிக்குண்டால் தெரியும் சேதி. அவன் எவ்வளவு பெரிய ஹோமியோபதியோ.........ஒரே வாயில் அவன் பீரோவிலிருக்கும் அந்தச்சக்கரை உண்டைகளை விழுங்கிவிடாவிட்டால் என்பேர் நிதிராமல்ல என்று நினைத்துக்கொள்" என்ருன்.

"நந்து! பர்ருபஜாரிலிருந்து ஒரு ஹகீம் வந்திருப்பதாக இன்று ஆபீஸில் சொல்லிக் கொண்டார்கள். பெயர் பெற்ற ஹகீம். ராஜாக்கள், மஹாராஜாக்கள் எல்லாம் இவனிடம்தான் மருந்து சாப்பிடுகிருர்களாம். ஒரு முறை பார்த்தால் நல்லதுடா" என்ருன் கோபிபாபு.

"இந்தக் குளிர் காலத்தில் ஹகீம் வைத்தியமா? அம்மாடியோ! ஷர்பத்தைக் குடிக்க வைத்து உயிரை வாங்கி விடுவார்கள். அதைவிட, தாரிணி கவிராஜன்தான் நல்லதப்பா!" என்ருர் ஷஷ்டி.

ஷஷ்டியின் சொற்களுக்கிணங்கி, தாரிணி வீட்டிற்குப் போகத் தீர்மானம் செய்து கொண்டான் நந்தலால்.

தாரிணி கவிராஜர் வீட்டில் மறுநாள் காலை நந்தலால் ஆஜராகிவிட்டான். கவிராஜருக்கு அறுபது வயதிருக்கலாம். வாலிபனைப்போல் முகம் ஷேவ் செய்து

# இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

| | | |
|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | - ரூ. | 71,10,900 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ | 51,67,608 |
| ரிஸர்வ் நிதி | - - ரூ. | 61,50,000 |

டிபாஸிட் ரூ. 17 கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**
செக்ரெடரி.


கொண்டு உடம்பெல்லாம் எண்ணெயைத் தடவிக்கொண்டு நான்குமுழத் துண்டு ஒன்று உடுத்தி நாற்காலியில் குத்திட்டு உட்கார்ந்திருந்தார். எங்கோ யோசனையைப் பறக்கவிட்டு ஹுக்கா புகையை இழுத்துக்கொண்டிருந்தார். இதே மாதிரி நிலையில்தான் அவர் நோயாளிகளைத் தினமும் பரிசீலிக்கிறார். ஒருபெஞ்சு இருக்கிறது. அதன்மேல் எண்ணெய் இருட்டேறிய அழுக்கடைந்தபாய் ஒன்று, தலையணைகளிரண்டும் கிடந்தன. சுவரில் சாய்ந்தவாறு இரண்டு மருந்து பீரோக்களிருந்தன.

நந்தலால் நமஸ்காரம் செய்து அந்தப் பெஞ்சுமேல் அமர்ந்தான்.

''என்ன பாபு! எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் கவிராஜர்.

நந்து தன் பெயரைத் தெரிவித்துத் தான் வந்த விஷயத்தைச் சொன்னான்.

''தலையில் துளை செய்தானா தபாதார்?''

''இல்லை. நேபால்பாபு நீர் சம்பந்த வியாதி யென்றார். அதனால்தான் நான் ஆபரேஷன் செய்துகொள்ளவில்லை.''

''நேபாலா? அவன் யார்? என்ன செய்கிறான்?'' என்று தாரிணீ கண்களை உருட்டினார்.

''தங்களுக்குத் தெரியாதா? சோராபாகனில் இருக்கிறாரே நேபால் சந்த்ரராய் M. B. F. T. S. பெரிய ஹோமியோபதிக் டாக்டர்''

''அடா! அந்த நேபால் சங்கதியையா? அவன் எப்பொழுதிருந்து டாக்டர் ஆனான்? அடா! உங்கள் பேட்டையில் இப்பேர்ப்பட்ட கவிராஜனிருக்கும்போது அந்தச் சிறு பிள்ளையிடம் ஏன் போனாய்?''

''என் நண்பர்கள் டாக்டரை அறிமுகப்படுத்தி, அவர் என்ன சொல்கிறாரென்று கேட்கச் சொன்னார்கள். ஒருவேளை ஆபரேஷன் செய்யவேண்டி வருமோ யென்று...''

''ஜயந்தி பாபுவைத் தெரியுமா? பூல்னாவில் வக்கீல் ஜயந்திபாபு'' என்றார் கவிராஜர். நந்து தலையை ஆட்டினான்.

''அவன் மாமாவுக்குக் காலில் புரையோடிய புண்வந்தது ஸிவில்சர்ஜன் அவன்காலை எடுத்துவிட்டார். மூன்றுநாள் நினைவு இல்லை. நினைவுவந்ததும் 'என்கால் என்ன ஆயிற்று? கூப்பிடுதாரிணி ஸென் கவிராஜனை' என்றான். கொடுத்தேன் ஒருதோலா

சியவன ப்ராசாலேகியம். என்ன நடந்ததோ சொல்லு...?''

"கால் மறுபடியும் வந்துவிட்டதா?''

"அடே ராம்? கழுதை...பாருடா! பூனை பசும் நெய்யையெல்லாம் குடித்துவிட்டுப் போகிறது.'' என்று கூவிக்கொண்டே கவிராஜர் பக்கத்து அறைக்குள் ஓடினார். சற்றுநேரத்தில் திரும்பிவந்து முன்போலவே நாற்காலியிலமர்ந்து, "எங்கே நாடியைப் பார்க்கலாம்...நான் நினைத்தது சரியாயிருக்கிறது...எப்பொழுதாகிலும் படுத்தபடுக்கையாய்ப் படுத்திருந்தாயா?'' என்றார்.

"சிலவருஷங்களுக்கு முன் டைபாயிடில் கிடந்தேன்''

"சரியாய்க் கண்டுபிடித்துவிட்டேன் பார்! ஐந்து வருஷங்களுக்கு முன்தானே?''

"கிட்டத்தட்ட ஏழுவருஷங்களாகின்றன''

"இரண்டும் ஒன்றுதான். ஐந்துமிரண்டும் ஏழு. காலையில் வாந்தி வருகிறதா?''

"இல்லை''

"உனக்குத் தெரியாமலிருக்கலாம். தூக்கம் வருகிறதா?''

"சரியாய்த் தூக்கம் வருவதில்லை''

"எப்படி வரும்? மேலுக்கு வந்துவிட்டது. பற்களில் வலி இருக்கிறதா?''

"இல்லை''

"இருக்கும். உனக்கு அது தெரியாமலிருக்கலாம், நீ பயப்பட வேண்டாம். நன்றாய்க் குணமாய்விடும், நான் ஒரு மருந்து தருகிறேன்'' என்று பீரோவைத்திறந்து அதற்குள்ளிருந்து ஒரு பாட்டிலை எடுத்து அத்துடன் சொல்லத்தொடங்கினார்.

"அடே! குதிக்காதிர்கள். சற்றுப் பொறுங்கள். பொறுங்கள்...எங்கள்மருந்துகளெல்லாம் ஜீவ ஔஷதங்கள். கூப்பிட்டால் வாயைத்திறந்து பேசும். மூன்று நாளைக்குத் தருகிறேன். காலை, மாலை ஒவ்வொருமாத்திரை சாப்பிடு. மூன்று நாள் பொறுத்துவா! தெரிந்ததா?'' என்றார்.

நந்து "அப்படியே!'' என்றான்.

"அனுபானம் சொல்லவில்லையே! எலுமிச்சம் சாற்றைத் தேனில் கலந்துகுடி. அரிசிச்சாதம் சாப்பிடக்கூடாது. உருளைக்கிழங்கு, சேப்பங் கிழங்கு வேகவைத்துத் தின்னவேண்டும். உப்பு சேரக் கூடாது. மீன் குழம்பில் சர்க்கரை சேர்த்துக்கலாம். வெந்நீரை நன்றாய் ஆறவைத்துக்குடி...''

"எனக்கு என்ன வியாதி?''

"வியாதியா.........'உதரீ' என்பார்கள். 'ஊர்த்வ ச்லேஷ்மம்' என்றும் சொல்லலாம். நந்தலால் உடம்பு கிடுகிடுவென்றுடியது. வாய்பேசாமல் கவிராஜருக்குப் பார்த்ததற்கும் மருந்திற்கும் பணத்தைக் கொடுத்துச் சென்றான்.

* * *

நிதிராம் கேட்டான். "என்ன பாபு! ஆயுர்வேதத்தின் மேலிருந்த பிரமை நீங்கியதா? இல்லையா?''

"இந்தக் கவைக்குதவா வைத்தியர்களால் பிரயோசனமில்லை. வாருங்கள், எங்காகிலும் காற்றை மாற்றிக்கொண்டு வரலாம்'' என்றான் கோபி.

"நந்தலால்! நான் சொல்லவில்லை? கலியாணம் செய்துகொண்டு மனைவியை அழைத்து வந்தால் இந்த நோக்காடுகளெல்லாம் ஓடிவிடும். ஒண்டியாயிருப்பதுதான் நோய்களுக்குக் காரணம்'' என்றான் பங்கூ.

நந்தபாபு வெறுப்புடன், "ஊம், கலியாணம்! இன்று இருக்கிறேன். நாளை சமாசாரம் தெரியாது. இந்தவயசில் கலியாணம் செய்துகொண்டு...... ஒரு சிறு பெண்ணை......கிணற்றில் தள்ளி ......விழச் சொல்கிறீர்கள்'' என்றான்.

பிரதர்; என் வார்த்தையைக் கேள். ஒரு மோட்டார் வாங்கு. இரண்டுநாள் காற்றில் மேய்ந்து திரியலாம். உடம்பு குணமாகிறதா இல்லையா பார்க்கலாம். ஸெவன் ஸீட்டர் ஹட்ஜன். கடவுளருளால் நாங்கள் ஐவர் இருக்கிறோம்'' என்றான் நிதிராம்.

ஷஷ்டிபாபு குறுக்கிட்டார். கார் வாங்குவதும், காரிகையைக் கட்டிக்கொண்டு வருவதும் இரண்டும் ஒன்றுதான். இதெல்லாம் வீட்டிற்குள் சுலபமாய் வந்துவிடும். இவைகளுக்கு மேல்செலவு செய்யும்போது பார்த்தால் நம் தாத்தாமார்கள் கீழே இறங்கி வந்துவிடுவார்கள். இன்று டைர் உடைந்தால், நாளை மனைவிக்குச் சூலைநோய் வரும். இன்று பேட்டரி வாங்கினால், நாளைக்குக் குழந்தைக்குக் குளிர்காய்ச்சல் வரும். ஏ நந்து! அவசரப்பட்டு விட்டாயோ

தொலைந்தாய். முழுகிப்போவாய். இந்தக் குளிர்காலத்தில் சிவனே என்று இழுத்துப் போர்த்திச் சுகமாய்ப் படுப்பதற்குப் பதில் இரவெல்லாம் "குய்யோ...முறையோ..."

"லோபி, கணக்கைப் பார்ப்பதைப்பார். சிலவு இல்லாமல் கிராமப்பெண் ஒருவளை, கல் உரல் போன்றவளைக் கட்டிக்க வேணும்போல் தோன்றுகிறதாக்கும். நந்து! சிலவுடன் சிலவு. இன்னும் ஒரு இருபத்தைந்து. நாளைக்கு ஹகிமைப் பார்த்துவிட்டு வந்துவிடு. பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் கோபி.

நந்து பாபம் அதற்கும் தலையசைத்தான்.

* * *

'ஹாஜில் உல்முல்க் பின்லுக்மான் நூருல்லா கஜின் பருல்லா ஆல் ஹகிம் யுனானி 'லோயர் சித்பூர் ரோட்டில்' தங்கியிருக்கிறார். நந்தபாபு மூன்றாவது மாடியை அணுகும்போது, லுங்கி, டர்கி குல்லாய் மெல்லிய துணி ஒன்றை மேலே போட்டுக் கொண்டு ஒரு ஆள் எதிரில் வந்து,

"வாருங்கள் பாபு, நான் ஹகீம் சாஹேபின் மீர்முன்ஷி. உங்கள் நோய் என்னவென்று எழுதிக்கொடுங்கள். நான் ஹஜூருக்குத் தெரியப்படுத்துகிறேன்." என்றான்.

"என்நோய் என்னவென்றறியத்தானே வந்திருக்கிறேன்" என்றான் நந்து.

"ஆனாலும் ஏதோ சொல்லுங்கள், பல ஹீனமா? ஜ்வரமா? தழும்புகளா? அந்திமாலையா? மேகநீரா?"

"அவைகளொன்றும் எனக்குத்தெரியாது. மனதில் சஞ்சலமாயிருக்கிறது"

"அவ்வளவுதான். சொன்னால்தானே தெரியும். மனதைப்பரிசோதிக்க....மொஹராக்கள் கொண்டுவந்தீரா?"

"மொஹராக்களா?"

"ஹகீம் சாஹேப் வெள்ளியைத் தொட மாட்டார். உங்களிடமில்லா விட்டால் நான் தருகிறேன். நாற்பத்தைந்து ரூபாய், இரண்டு ரூபாய் வட்டம். பட்டுக்கைலி இரண்டுரூபாய். தர்பாருக்குள் சென்று ஹஜூருக்கு 'பந்தகிஜனாப்' என்னுங்கள். பிறகு கைக்குட்டையில் இரண்டு மொஹராக்களை வைத்து அவரிடம் சொல்லிக் கொள்ளுங்கள்"



Agent for Tanjore Dt.
K. ராகவேந்திர ராவ்,
சந்திர விலாஸ்,
கும்பகோணம்.

நந்தலாலுக்குப் பாடம்கற்பித்து, தர்பாருக்குள் அழைத்துச் சென்றான் முன்ஷி. பெரிய அறை. முழுவதும் ரத்தின கம்பளம் விரித்திருக்கிறது. சிங்காதனம் போன்ற ஆசனத்தில் சாய்வு தலையணைமேல் சாய்ந்துகொண்டு ஹகீம் ஹுக்கா குடித்துக் கொண்டிருந்தான். ஐம்பது வயதிருக்கலாம். கூந்தல் சுருள் சுருளாய் மோதிரங்கள் போன்றிருக்கின்றன. மீசையை நாசுக்காய்க் குட்டையாய், லேசாகக் கத்திரித்து விட்டிருந்தான். மார்பைத் தொடும்தாடி, முதல்பகுதி வெளுப்பு, நடுப்பகுதி சிவப்பு, கடைசியில் கத்திரிப்பழம் போன்ற பழுப்புநிறம். ஆடைகள். பட்டு பைஜாமா. ஸில்கு ஜிப்பா. சரிகைவேலைப்பாடுடைய வெல்வெட் டோபா. எதிரில் 'தூப்தானி'ல் அகர், அம்பர், சந்தன் எல்லாவற்றையும் ஒருங்கே அக்கினி பகவான் சுவைத்துக் கொண்டிருந்தான். அருகில் 'ஏக்தான். பான்தான். இதரதான்' எல்லாமிருக்கின்றன. ஐந்தாறு நண்பர்கள் ஹகீம் சாஹேப் அருகிலமர்ந்து அவன் சொல்வதற்கெல்லாம் "வஹ்வா" என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டிருந்தனர். அந்த அறையில் ஒரு மூலையில் கிழமஹமதியன் சிதார் வாசித்தப்படி தன் அங்கங்களை எத்தனை அருவருப்பாய் வளைத்துச் சேஷ்டைகள் செய்யலாமோ அத்தனையும் செய்கிறான். நந்து வணக்கமாய்ச் சலாம்செய்து கைக்குட்டையுடன் மொஹராக்களை அளித்தான். ஹகீம் புன்முறுவல் செய்து 'இதரதானி'லிருந்து கொஞ்சம் சாம்பலை எடுத்துக் காதில் வைத்தான்.

"உங்கள் நோய் என்னவோ வங்காளியிலேயே சொல்லுங்கள். நான் ஹுஜூருக்கு விளக்குகிறேன்" என்றான் முன்ஷி.

விஷயம் முழுவதும் அறிந்ததும் ஹகீம் சாஹேப் எருதுக் குரலில் "தலையைக் காண்பி" என்றான்.

நந்தலால் உள்ளம் நடுங்கியது. நெஞ்சு 'பட், பட்' டென்று அடித்துக்கொண்டது.

"ஏன் பயப்படுகிறீர்கள்? ஹுஜூருக்கு உங்கள் தலையைக் கொஞ்சம் காண்பியுங்கள்" என்று முன்ஷி நந்துவின் பயத்தைப் போக்கப் பிரயத்தினம் செய்தான்.

நந்தலால் தலையை இப்படியும் அப்படியுமாய்த்திருப்பி "எலும்பு உளுத்து கல கல வென்றுடுகிறது" என்றான் ஹகீம்.

"தெரிந்ததா? மண்டை கவைக்குதவாமல் மெத்தென்று ஆகிவிட்டதாம்" என்று விளக்கி அர்த்தம் சொன்னான் முன்ஷி.

ஹகீம் தன் மூவர்ண தாடியை உருவியபடியே "ஸுர்மாஸுர்க்" என்றான்.

ஒருவன் சிவப்புச் சூர்ணம் ஒன்றைக் கொண்டுவந்து நந்துவின் கண்களில் தடவினான்.

"இதைப் போட்டுக்கொண்டால் கண்கள் குளிர்ச்சியாயிருக்கும். தூக்கம் நன்றாய் வரும்" என்று முன்ஷி முன்பு குணத்தை வர்ணித்தான்.

"ரோகன் ஜப்பர்" என்றான் ஹகீம்.

"ஏ பரிஹாரி! கத்தி எடுத்துக்கொண்டு வாடா" என்று கூவினான் முன்ஷி.

"ஐயோ! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்" என்று நந்து கேட்டுக்கொண்டிருக்கும்போதே அம்பட்டன் நந்துவின் உச்சந்தலையில் இரண்டங்குல அகலத்திற்குச் சதுரமாகச் சிரைத்து விட்டான். மற்றொருவன் நாற்றமான தைலத்தைக் கொண்டுவந்து, அந்த இடத்தில் வைத்துத் தேய்த்தான். "இது புலியின் தலையிலிருந்து எடுத்த எண்ணெய் அதிக விலையுள்ளது. மூளை கெட்டிப்படும்" என்றான் முன்ஷி.

நந்தபாபு சிறிதுநேரம் தன்னிலை மறந்து உட்கார்ந்திருந்தான். சிறிது நேரத்தில் உணர்வுபெற்று அங்கிருந்து எழுந்து ஓடினான். முன்ஷி, "என் பக்ஷிஸ்" என்று பின்தொடர்ந்தான். ஒரு ரூபாயை அவன் பக்கம் வீசிஎறிந்து, கண்மண் தெரியாமல் தடதட வென்று கீழே இறங்கி, வண்டி ஏறி "ஓட்டு" என்றான்.

அன்று மாலை நண்பர்கள் வரும்பொழுது கதவு இழுத்துத் தாளிடப்பட்டிருந்தது.

"இன்று பாபுவுக்கு உடம்பு சரியாயில்லை. மிகவும் பலஹீனமாயிருக்கிறார். பார்க்கமுடியாது" என்றான் வேலைக்காரன். நண்பர்கள் கவலையுடன் சென்றனர்.

* * *

நந்தலால் இரவு முழுவதும் தூங்காமலேயே கடத்தினான். புரண்டு புரண்டு உடம்பெல்லாம் நோவெடுத்து விட்டது. விடியற்காலை மணி நான்கு. எழுந்தான். "இனி நண்பர்கள் பேச்சைக் கேட்கக்கூடாது. தன் இஷ்டப்பிரகாரம்தான் வைத்தியம் செய்துகொள்ள வேண்டும்" என்று நிச்சயித்துக் கொண்டான்.

காலை எட்டு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டான். டேக்ஸி ஒன்றைப்பேசி, அதிலேறி டேக்ஸியை மெள்ள விடச் சொன்னான். மீட்டர் ஒருரூபாயைக் காட்டவே டேக்ஸியை விட்டிறங்கி அருகிலிருக்கும் வைத்தியரிடம் வைத்தியம் செய்து கொள்ள நினைத்து விட்டான். அவன், யூனானியாகிலும் சரி, அலோபதிக்காரனாலும் சரி, ஹோமியோபதிக்காரனாலும் சரி. ஒன்றுமில்லாத ஒரு பூத வைத்தியனானாலும் சரி. அதைப்பற்றிக் கவலையில்லை.

பௌபஜாருக்கருகில் டேக்ஸியை விட்டிறங்கி அருகிலிருக்கும் தெருவில் நுழைந்தான். அழகிய போர்ட், மிஸ், பி. மல்லிக் என்று தொங்கிக்கொண்டிருந்தது. நந்தபாபு 'மிஸ்' என்றதைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் உள்ளே செல்ல, சந்தேசித்திருப்பான். வாயிலில் தொங்கும் திரையை விலக்கிக்கொண்டு உள்ளே சென்றான்.

"டாக்டர். பிரபுல்லா மல்லிக்" வெளியில் செல்வதற்காகத் தோள்பின்னைச் சரி செய்துகொண்டிருந்தாள். நந்தபாபுவைப் பார்த்ததும் "என்ன?" என்று மதுரமாய்க் கேட்டாள்.

நந்தபாபு முதலில் சந்தேகத்திலாழ்ந்தான். பிறகு "கடவுள்மேல் பாரத்தைப் போட்டு யாரானால் என்ன? லேடி டாக்டர் சகாயத்தையேபெறுகிறதென்று தான்......வெகு கஷ்டப்பட்டு உங்களிடம் வந்தேன்" என்றான்.

"இப்பொழுதுதான் நோவெடுத்ததா?" என்று கேட்டாள் மிஸ். மல்லிக்.

"நோவொன்றும் இதுவரையில்லை" என்றான் நந்து.

"பஸ்ட் கன்பைன்மென்டு?"

"அப்படியென்றால்.........?"

"முதல் பிரசவமா?"

நந்தலால் வெட்கத்துடன் "நான் எனக்கு வைத்தியம் செய்துகொள்ளவே வந்திருக்கிறேன்"என்றான்.

மல்லிக் ஆச்சர்யத்துடன் "உங்களுக்கா? உடம்பிற்கென்ன?" என்றாள்.

நந்தலால் யதாபிரகாரம் தன் ராமாயணம் முழுவதும் சொன்னபிறகு நான் கைந்து கேள்விகள் கேட்டு "உங்கள் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா?" என்றாள்.

"ஸ்ரீ நந்ததுபால் மித்ர"

"வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?"

"மனைவி இறந்துவிட்டாள். அத்தை. அவளை விட்டால் யாருமில்லை"

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"வேலைவெட்டி ஒன்றுமில்லை. ஜமீன் இருக்கிறது"

"மோட்டார் இருக்கிறதா?"

"இல்லை, வாங்க வேண்டுமென்றிருக்கிறேன்"

மிஸ் மல்லிக் அநேக கேள்விகளைக்கேட்டு, உதட்டின்மேல் விரலைப்பதித்துச் சிறிது நேரம் யோசனைசெய்தாள். பிறகு நிதானமாகத் தலையை இப்புறமும் அப்புறமுமாய் ஆட்டினாள்.

நந்தலால் கவலையுடன் "சலாம் டாக்டர்! தயவுசெய்து உண்மையைச் சொல்லிவிடுங்கள். என் வியாதி என்ன? ட்யூமரா? மூத்திர வியாதியா? உதரியாவா? காலஜுரமா? ஹைட்ரோபோபியாவா?" என்றான் பரிதாபமாய்.

மிஸ். மல்லிக் மலர்ந்த நகைப்புடன் "ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களுக்கு இந்த வியாதிகள் எதுவுமில்லை. உங்களை நன்கு கவனித்துப் பார்த்துக் கொள்ள ஒரு ஆள் வேண்டும்" என்று விடையளித்தாள்.

நந்து தயக்கத்துடன் குரல் தழுதழுக்க "ஆனால் நான் பைத்தியக்காரனாகிவிட்டேனா?" என்றான்.

"மல்லிக் வாய்க்குள் கைக்குட்டையைத் திணித்துக்கொண்டு"நோ டியர்! பைத்தியக்காரர் ஏன் ஆகிறீர்கள்? தங்களுக்குச் சுகம் அளிக்க ஒரு ஆள்வேண்டுமென்கிறேன்"

"ஒருவர் ஏன்? எங்க அத்தைதான் இருக்கிறாளே!"

மிஸ். பிரபுல்லா மறுபடியும் சிரித்து "தி ஐடியா! அத்தை...கித்தை இவர்களால் லாபமில்லை. சரி, முதலில் ஒரு மருந்து தருகிறேன். சாப்பிட்டுப்பாருங்கள். இனிப்பாயிருக்கும். ஏலக்காய் வாசனையுடன், ஒரு வாரத்திற்குப்பின் வாருங்கள்" என்றாள்.

நந்தபாபு வாரம் கழிந்ததும் மல்லிக் வீட்டிற்குச் சென்றனன். பிறகு இரண்டு நாட்களுக்கொருமுறை, அதன் பின் பிரதிதினமும் சென்றான்.

சிலநாட்களுக்குப்பின் அத்தையைக் காசிக்கு அனுப்பிவிட்டு, ஒருநாள் கடையி லிருந்து, பால், நெய், சர்க்கரை, மாமிசம், மீன், மாவு, தயிர், ரஸகுல்லா, லட்டு முதலியவைகளை வரவழைத்து, தான் அழகிய பட்டுக்கரை வேஷ்டியுடுத்தி, ஸில்க்ஜுப்பா போட்டு, நண்பர்களுக் கெல்லாம் வெட்கத்துடன் ஆனந்தமாய், திருப்தியாய் விருந்தளித்தான்.

''மிஸஸ். பிரபுல்லாமித்ரா' இப்பொழுது கணவனைத்தவிர்த்து எவருக்கும் வைத்தியம் செய்வதில்லை. நந்தபாபு நன்றாய் ஆரோக் கியமாயிருக்கிறார். காரும் வாங்கிவிட்டார். இப்பொழுது அவரிடம் ஏதாகிலும் குறை யிருக்கிறதோ என்றையுறுபவர்களுக்கு மாலையில் அவரில்லத்தை முற்றுகையிடும் நண்பர்குழாம் இல்லாத குறைவு ஒன்றைத் தவிர எல்லாவற்றிலும் நிறைவு தானிருக் கிறது. அவருக்கு அக்குறைவுகூடத் தெரியாமல் பார்த்துக் கொள்ள மிஸஸ், மல்லிக் மலர்ந்த முகத்துடன் நிற்கிறாள்.

[பரசுராம் என்பவர் தெலுங்கில் எழுதி யிருப்பதைத் தழுவி எழுதப்பட்டது.]



# அலாவுத்தீன் பூதம்

நா. கி. நாகரராசன்

அலாவுத்தின் தன் மந்திரவிளக்கைத் தேய்த்ததும் அவன்முன் பூதம் வந்து தோன்றி அவனிட்ட வேலைகளைச் சடுதியில் செய்து முடித்த கதையை நாம் அனைவரும் படித்திருக்கிறோம். ஆனால் தற்காலத்தில் அறிவியலறிஞனென்னும் அலாவுத்தீன், அஞ்ஞானமென்னும் இருளைப் போக்கும் விஞ்ஞான மென்னும் விளக்கைக் கொண்டு, பெரும் பூதங்கள் பலவற்றை மனித குலத்துக்கே அடிமைப் படுத்த முயன்று வரும் நவீன கதையை அறிந்தவர் சிலரே. இயற்கைச் சத்திகளை மனிதனின் நன்மைக்குப் பயன்படுத்தும் வகையில் ஈடுபடுத்த முயல்வதே விஞ்ஞானத்தின் நோக்கம் எனக்கூறினார் ஒரு பெரியார். ஆகையால் விஞ்ஞான அறிவு வளர்ச்சியினால், ஆதி மனிதனுக்கு அச்சமூட்டி, அடிபணியாது நின்ற மாபெரும் சத்திகள் ஒவ்வொன்றாகக் கட்டுப்படுத்தப்படுவது விந்தையல்ல. மண்ணெண்ணெயையும், மின்சாரத்தையும் பங்கீட்டில் பெற்று வாழும் இந்நாளில், விஞ்ஞானிகளின் முயற்சியால், எளிதிற் கிடைக்கும் சக்தி ஆதாரங்களைக் கொண்டு எந்திரங்களை ஓட்டுவதுடன் வெப்பத்தையும், ஒளியையும் பெறும் காலம் வரலாம் என்பதை நாம் நம்புவது கடினம்.

நமக்கு முற்றிலும் பயன்படாது வீணாகும் சத்திகளில் முதன்மையானது பகலவனின் வெப்பமும், ஒளியுமாகும். ஒரு நாளில் சென்னை நகரம் பெறும் சூரியவொளியின் சத்தி பல லட்ச ரூபாய் பெறுமானமுள்ளது. இதில் பெரும் பகுதி வீணாகிறது. ஆனால் வெகுகாலமாகவே கதிரவன் சத்தியை நன்கு பயன்படுத்தும் முயற்சிகள் நடந்து வந்துள்ளன. இன்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆர்க்கிமிடீஸ் (Archimedes) என்னும் இத்தாலிய அறிஞர் தம் நாட்டை நோக்கி வேற்று நாட்டுக் கப்பல்கள் படையெடுத்து வந்தபோது, பெரும் ஆடிகளின் உதவியால் எதிரிக் கப்பல்களின்மேல் சூரியவொளியைக் குவித்து அவற்றைச் சுட்டு, எதிரிகளை முறியடித்தார் என்னும் கதை வழங்குகிறது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன் பப்பான் (Buffon) என்னும் பிரஞ்சு அறிஞர், 168 சின்னஞ்சிறு கண்ணாடிகளைக் கொண்டு ஓரிடத்தில் கதிரொளி அதிகமாக விழுமாறு செய்து, அதிலிருந்து எழுபத்தைந்து கஜ தூரத்திலிருந்த கட்டையை எரித்தும், முப்பத்துமூன்று கஜ தூரத்திலிருந்த ஈயத்தையும், பதினாறு கஜ தூரத்திலிருந்த வெள்ளியையும் உருக்கியும் காட்டினார். ஆனால் கதிரவனது ஆற்றல் நமக்குத் தேவையான வகைகளில் பயன் படுமாறு செய்யும் முறைகள் சமீபகாலத்தில்தான் கையாளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கதிரொளியைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகளின் முன்னணியில் நிற்பவர் அமெரிக்க வானநூலறிஞரான டாக்டர் ஆப்பட் (Dr. Abbot) என்பவர். மிகத்திறமையுடன் வேலை செய்யும் ஒரு சூரிய அடுப்பை இவர் அமைத்திருக்கிறார். இதில் பல நீண்ட குழல்களில் ஒருவித எண்ணெய் ஓடிக்கொண்டிருக்கும். குழல்களின்மேல் கதிரொளியைக் குவித்து, எண்ணெய் சூடேற்றப்படுகிறது. மிகச் சூடேறிய எண்ணெய் ஒரு அடுப்புப்

போன்ற பாகத்தில் பாய்ந்து, அங்கு பொருள்களைச் சமைக்கத் தேவையான வெப்பத்தை அளிக்கிறது. இவ்வடுப்பு வில்ஸன் மலைமேலுள்ள வானநிலையத்தில் (Observatory) உள்ளது.

ஷுமன் (Schuman) என்னும் பிரஞ்சு விஞ்ஞானியொருவர் செய்துள்ள ஒரு நீராவி எந்திரம் சூரிய வெப்பத்தினால் இயங்குகிறது. இதனுதவியால் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்படுகிறது. இத்தகைய எந்திரங்கள் இப்போது பல இடங்களில் பயன்படுகின்றன. இவற்றுள் ஒரு எந்திரத்தினால் மணிக்கு 3000—4000 காலன் தண்ணீர் இறைக்கலாமெனில் இதன் சக்தி விளங்கும்.

இத்தகைய நீராவி எந்திரங்களை மின்னாக்கிகளுடன் (Dynamos) இணைத்து, மின்சாரத்தைப் பெற்று, அதைப் பல வகைகளில் பயன்படுத்தலாம். இவ்வகையில் மின்சாரத்தைப்பெற அதிக செலவாகிறது எனினும், எந்திரங்களை இன்னும் சீர்திருத்தி அமைத்தால் செலவைக் குறைத்து, இம்முறை பெரிய அளவில் பயன்படுமாறு செய்யலாம். அப்போது மின்சார உற்பத்தி நிலையங்களிலிருந்து வெகு தொலைவிலுள்ள இடங்களில் இத்தகைய எந்திரங்களை அமைத்து மின்சாரத்தைப்பெற வழியுண்டு.

காற்றிலுள்ள காலகத்தையும் (Nitrogen), எரியகத்தையும் (Oxygen) கலந்து, காலக உப்புக்களாக மாற்றி, அவற்றைக் காலகக்காடி (Nitric Acid) செய்யவும், உரங்களாகவும் பயன் படுத்தலாம். இதற்கு அதிகமான வெப்பம் தேவை. இதை இதுவரை மின்சாரத்தினால் பெற்றுவந்தார்கள். ஆனால் சில ஆண்டுகளுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கருவியில் மேற்கூறிய இரசாயன மாறுபாட்டைச் சூரிய வெப்பத்தினாலேயே விளைவிக்கிறார்கள். இக்கருவியில் 2000-3000 பாகைகள் (Degrees) வரை வெப்பம் கிடைக்கிறது. மின்சாரமும் இரசாயனப் பொருள்களும் அதிகமாக இல்லாத நம்நாட்டில், ஏராளமாகவுள்ள சூரிய வெப்பத்தையும், காற்றையுமே கொண்டு நாட்டு நலனுக்கு இன்றியமையாத இரசாயனத் தொழிலைத் தொடங்க இதனால் இயலக் கூடும்.

இவற்றைத் தவிர ஆசிரியர் டூபோ (Prof. Dubos) என்னும் பிரஞ்சு அறிஞர் இன்னொரு வகை சூரியவெப்ப எந்திரத்தையும் கண்டுபிடித்திருக்கிறார். இதைப்பற்றிய சோதனைகள் இப்போது நடைபெற்றுவருகின்றன, இவற்றில் வெற்றிபெற்றால், மனிதன் சூரியவொளி என்னும் பெரும்பூதத்தை அடிபணிய வைத்தவனாவான் என்பதில் ஐயமில்லை. இந்த எந்திரம் எவ்வாறு இயங்கும் என்பதையறிய ஒரு முக்கியமான பூத நூற் கொள்கையை நினைவுக்குக் கொணர வேண்டும். நம்மைச் சூழ்ந்துள்ள காற்றுப் படலத்தின் அமுக்கம் கடல்மட்டத்தில் அதிகமாகவும், உயரங்களில் குறைவாகவுமிருக்கும். இமயமலையின் உச்சியில் காற்றின் அமுக்கம் மிகக் குறைவாகையால் அங்கு மூச்சுவிடுவதுகூடக் கடினமாகவிருக்கும். ஆசிரியர் டூபோவின் முறையில் சுமார் 6500 அடி உயரமுள்ள ஒரு மலையின் அடிவாரத்தில், காற்றைச் சூரிய வெப்பத்தினால் சூடேற்றப்படும். காற்று, சூடேறுவதால் இலோசாய் உயரக் கிளம்பும். இவ்வாறு செல்லும் காற்றை 6500 அடி நீளமுள்ள குழாய்களைக்கொண்டு மலையுச்சிக்குக் கொண்டு செல்லலாம். அங்குள்ள அமுக்கக் குறைவாலும், கீழுள்ள வெப்பத்தாலும், காற்று அதிகவேகமாய் மேலெழுந்து, அங்கே தன் பிரம்மாண்டமான சக்தியினால் எந்திரங்களை இயக்கி வேலைசெய்யக் கூடும். குழாய்களில் செல்லும் காற்றின் வேகம் மணிக்குச் சுமார் 300 மைல். கொடிய புயற்காற்றின் வேகத்தைப் போல் இது மும்மடங்காகும், எனில் இச்செயற்கைச் சூறையின் பெரும் சக்தி விளங்கும்.

கதிரொளிக்கு அடுத்தபடியாகவுள்ள பெரும் இயற்கைச் சக்தி காற்றாகும். ஒருமைல்நீளமும், ஒருமைல் உயரமுமுள்ள ஓர் காற்றுப்படலம் தென்றலில் வேகத்தில் இயங்கினால் அதிலுள்ள ஆற்றல் சுமார் ஆயிரம் ஆகாய விமானங்களின் ஆற்றலுக்குச் சமமாகும்! வெகுகாலத்திற்கு முன்பே நம்நாட்டில் காற்று யந்திரங்கள் பயன் பட்டன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தற்காலத்திலும் தண்ணீர் இறைக்கக் காற்று எந்திரங்கள் பல இடங்களில்

பயன்படுவதை எல்லோரும் பார்த்திருக்கலாம். ஆனால் இத்தகைய எந்திரங்களில் இயங்கும் பகுதிகள் அதிகமாகவும் பெரியனவாகவும் உள்ளன. ஆகையால் இவைகளை இயக்குவதில் காற்றின் சத்தியில் பெரும்பகுதி வீணாகிறது. மேலும் இவற்றில் காற்றில் சுற்றும் விசிறியை வெகு உயரமான கோபுரம் ஒன்றின் மேல் அமைக்க வேண்டும். இத்தகைய காரணங்களினால் இந்த எந்திரங்கள் இலேசான காற்றில் இயங்கா.

ஆனால் சவோனியஸ் (Savonius) என்னும் பின்லாந் தேசத்திய பொறி நூலறிஞர் அமைத்துள்ள புதுவகைக் காற்று எந்திரத்தில் இத்தகைய குறைகள் இல்லை. இதில் ஒரு உருளையை நடுவே இரண்டாக வெட்டி அது பக்கவாட்டில் S-வடிவுள்ளவாறு அமைக்கப்பட்டிருக்கும். அதனால் இது S-சுழலி (S-Motor) எனப்படும். இதைக் காற்றடிக்கும் இடத்தில் சுழலுமாறு அமைத்தால், இலைகளை அசைக்கும் இலேசான காற்றிலுங்கூட இது தொடர்ந்து இயங்குகிறது. இத்துடன் ஒரு மின்னாக்கியை இணைத்து மின்சாரத்தையும் பெறலாம். இது ஐரோப்பாவின் பல பகுதிகளில் தண்ணீர் இறைக்கவும், மின்சாரம் தேவையான பல வேலைகளுக்கும் பயன் படுகிறது. ஒரு கூண்டில் இதை வீட்டின் மேல் அமைத்து விடலாம், ஆகையால் இதை அமைக்கச் செலவாகும் பொருள் மிகக்குறைவு. மற்றக் காற்று எந்திரங்களின் விசிறியை விட இதைப் பெரிதாக அமைத்தாலும் இதன் திறன் குறையாது. ஆண்டு முழுதும் காற்றடிக்கும் பிரதேசங்களில் இதுபோன்ற சுழலிகள் பலவற்றையமைத்து, ஒரு நகரத்திற்குத் தேவையான மின்சாரம் முழுதையும் இவற்றால் பெறலாம்.

இதை மற்றொரு வகையிலும் பயன் படுத்துகிறார்கள், காற்றோட்டமில்லாத பெரிய கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும், இதனுதவியால் உள்ளிருக்கும் அசுத்தக் காற்றை வெளியேற்றப் பயன் படுத்துகிறார்கள். கட்டிடத்தின் மேல் இதை அமைத்து விட்டால் இது காற்றி

பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

னால் இயங்கி, மின்சாரம் முதலிய சத்திகளின் செலவின்றியே தன்வேலையைச் செய்கிறது. காற்றின் சத்தியை வீணாக்காது வேலை செய்யும் எந்திரங்களில் இதுவே சிறந்தது.

காற்றைப் பயன் படுத்தி எந்திரத்தை இயக்கும் முறைகளில் மிக விந்தையான தொன்று சமீபத்தில் வெளியாயிற்று. மோட்டார் வண்டியொன்று பெட்ரோல் முதலியன இன்றிக் காற்றினாலேயே இயங்குகிறது. ஆகையால் இதற்கு, 'காற்றியங்கி' (Windmobile) எனப் பெயரிட்டிருக்கின்றனர். இதில் வண்டியின் முன்னுள்ள ஒரு விசிறி காற்றடிக்கும்போது சுழன்று ஒரு மின்னாக்கியை இயக்குகிறது. இதில் கிடைக்கும் மின்சாரம் வண்டியிலுள்ள பன்னிரண்டு சேமக்கடங்களில் (Accumulators) பாய்ந்து அங்கே சேமித்து வைக்கப்படுகின்றது. இம்மின்சாரத்தைக் கொண்டு வண்டியை மணிக்கு ஐம்பதுமைல் வேகத்தில் ஓட்டலாம். இவ்வண்டி ஒருமைல் செல்லக் காலணாவுக்கும் குறைவாகவே செலவாகிறது. காற்றைமட்டும் உட்கொண்டு உயிர்வாழ்ந்து இயங்கும் மனிதன் உலகிலில்லை. ஆனால் மோட்டார் வண்டியென்னவோ உள்ளது!

விஞ்ஞான அறிவு முற்றிய இந்நாளிலும் மனித உள்ளத்தில் அச்சத்தை விளைவிக்கும் இயற்கை நிகழ்ச்சி எரிமலை இயக்கம். ஆனால் எரிமலையின் உள்ளே அடைபட்டுக் கிடக்கும் பெரும் சக்தியையும் அடக்கி நன்மைபெற மானிடன் முன்வந்து விட்டான். இத்தாலியிலுள்ள வெஸுவியஸ் (Vesuvius) என்னும் எரிமலை இன்னும் உயிருள்ளதாகவே உள்ளது. அதன் வாயினின்றும் சிறிது தூரத்திலுள்ள பள்ளத்தாக்கில் பெரும் சத்தி நிலையம் (Power House) ஒன்று கட்டி, அதை எரிமலையினுதவியாலேயே இயக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. எரிமலையில் நீண்ட தொளைகள் செய்தால் சிறிது ஆழத்திலேயே வெப்பம் மிதமிஞ்சிக் கிடக்கும் பகுதியை அடையலாம். இங்குள்ள கற்குழம்பையும், அமுக்கம் நிறைந்த நீராவியையும் குழல்களால் மேலே கொண்டுவந்து நீரை ஆவியாக்கி, நீராவி பல மின்னாக்கிகளை இயக்குமாறு செய்யலாம். ஆனால் கற்குழம்புடன் கூடவே அதிவேகமாக வெளிவரும் கற்களைத் தடுக்கத் தகுந்த பாதுகாப்பில்லையேல் இவை நிலையத்தையே தகர்த்து விடலாம். இத்தகைய அபாயங்களைத் தவிர்த்து எரிமலையின் பேய்ச்சத்தியைக் கட்டுப்படுத்துவது எளிதல்ல. ஆனால் இம்முறையில் வெற்றிபெற்றால் விஞ்ஞானி இன்னொரு இயற்கைச் சத்தியை அடிபணிய வைத்தவனாவான்.

வெப்பநாடுகளில், மக்களுக்கு இன்னல் விளைவிக்கும் வெய்யிலும், கடற்கரையில் நாசம் விளைவிக்கும் கடலின் ஏற்றவற்றமும் (Tide), பெரும் பகுதிகளைத் தீக்கிரையாக்கும் எரிமலையும், பயனின்றி வீசும் காற்றும், மனிதனின் பணியாட்களாகும் காலம் விரைவிலேயே வரலாம் என நம்ப இடமுள்ளது. நிலவறையில் பூதம் தோன்றக் கண்ட அலாவுத்தீன் முதலில் திகைத்தான். ஆனால் அதையடக்கும் வகை தெரிந்ததும் தனக்குப் பணிசெய்ய அமர்த்திக் கொண்டான். அதேபோல் பூதசத்திகளை யடக்கும் மந்திரத்தையும் விஞ்ஞானி கண்டுபிடித்து விடுவான் என்பது திண்ணம். அக்காலம் வந்தால் மண்ணெண்ணெய்க்காகப் போட்டி போடும் வல்லரசுகளின் தொல்லை நீங்கி, உலகில் அமைதி நிலவுமென எதிர்பார்க்கலாம்.



**ரெக்ஸோனுவினுல்**

**சரும**

**ஆரோக்கியமேற்படுகிறது**

**... சரும**

**ஆரோக்கியமே**

**அழகு**

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோக்கிய முடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனுவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த, ஆன்டிஸெப்டிக்கும், குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரெக்ஸோனுவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்த்து, மலினங்களை அகற்றி சுத்தம்செய்து சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சருமசுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனுவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்ய மேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

**ஆடவருக்கு ரெக்ஸோனு:** ரெக்ஸோனு பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப் பெனக் கருதாதிர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனுவிலிருக்கும் கேடில் ஆன்டிஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினுலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப்பெருமையைக் கொடுக்கும்.

**குழந்தைகளுக்கு ரெக்ஸோனு:** ரெக்ஸோனுவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவையவங்களை எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு, மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனுவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.




RP. 30-23 TM

REXONA PROPRIETARY LIMITED

# சித்ரா

கே. சுந்தரம்மாள்

12

"அவன் பணக்காரரிடம் கொள்ளையடித்து ஏழைகளுக்கு உதவி புரிவான். எவ்வளவு ஏழைப் பிராமணப் பிள்ளைகளுக்கு உபனயனத்திற்குப் பணம் கொடுத்திருப்பான் தெரியுமா? அதைப் போல் நானும் பணக்காரரிடம் பணத்தை வாங்கி ஏழைகளுக்குத் தர்மத்திற்குச் சாப்பாடு, துணி, மருந்து இவைகளை இலவசமாகக் கொடுத்து, வைத்யமும் செய்யப் போகிறேன். சொந்தமாக மருத்துவசாலை வைத்து நடத்துவதால் இவை சாத்யமாகும்; நீயும் மருத்துவ பரீக்ஷை பாஸ் செய்துவிட்டு என்னுடன் கூடவே லேடிடாக்டராக ஒத்துழைக்க வேண்டும். அதற்காகத்தான் நானும் படிக்கிறேன்; உன்னையும் படிக்க வற்புறுத்துகிறேன். ஜீவனத்தைப்பற்றிக் கவலை எடுக்கவேண்டி, விதியினால் ஏவப்பட்டவர்கள்தான் ஹ்ருதயமில்லாமல், சுதந்திர மில்லாமல் கல்வியைத், தொழிலை, உபயோகப் படுத்தவேண்டுவது அவசியம். நம் போன்று லக்ஷக்கணக்கில் பொருளை வைத்திருப்பவர்கள் ஏன் உலகத்தின் நன்மைக்காகப் பணத்தையும், காலத்தையும் செலவழிக்கக்கூடாது?"

"நம் போன்று எனப் பன்மையில் சொல்லுவது சரியாமோ? நான் பிக்ஷாதிகாரி; தாங்கள் லக்ஷாதிகாரி அல்லவா?" என்றுள் புன்சிரிப்புடன் அவனை நோக்கியவாறு.

"என்ன குறும்புப் பேச்சு? வேணுமென்றுதானே சொல்லுகிறுய்? நம் என்று சொல்லுவதில் தடை யென்ன?"

"உங்கள் மனதில் தடையில்லை; அம்மாவின் மனம், விதியின் மனம்; யார்கண்டது?"

"சும்மா திரும்பத் திரும்ப இதையே சொல்லுவதினால் என்ன நன்மை? என் மனதை நோகச் செய்வதும் ஒரு விளையாட்டா? உலகமே புரண்டாலும், சந்திர சூரியர் மாறிப் பிரகாசித்தாலும், என் ஹ்ருதயத்தினின்றும் உன்னைப் பிரிக்க முடியாதென்பது சத்யம்; என்னுடன் ஒத்துழைக்க உன்னால்தான் முடியும்; பணத்தில் மிதக்கும் சுகன்யாவினால் சிந்தனை செய்யக்கூட முடியாது"

"அப்படியல்ல; பணம் காரணமாகாது; உள்ளன்பு ஒன்றுதான் எதையும் செய்ய முடியும், ஏற்க முடியும்; சுகன்யா நிச்சயம் ஒத்துழைக்க முடியும். இச் சிறு தியாகத்தினால் அநேக நன்மை ஏற்பட வழியுண்டு; நான் தொழிலில் பங்காளி; அவள் வாழ்க்கையில் பங்காளி"

"இருபத்தெட்டுப் பங்காளி எனக்கில்லை; சில வருஷங்களில் சித்ரப்பிரபா தம்பதிகளின் செயல்களைப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக வரைந்து தள்ளும்; ஏழையின் இன்முகம் நமது மனச்சாந்தி. அப்பொழுது நமது வாழ்க்கை என்ன இன்பகரமாக இருக்கும் தெரியுமா?"

"ஆஹா! என்ன மனக்கோட்டை?"

"பாரேன் அதையும்! சரி, இன்று ஒரு அற்புதமான இங்கிலீஷ்படம் வந்திருக்கிறதாம், போகலாமா?"

"உம்! உங்கள் இஷ்டத்திற்கு மறுப்பேது!"

சித்ரா கட்டழகி. அதிலும் தன்னை அலங்கரித்துக் கொள்வதில் வெகுசமர்த்தி. நாகரிகமென்று, பௌடர் அப்பி, சிகப்புத் தடவி ஒன்றும் செய்யமாட்டாள். ஸிம்பிளான உடைஉடுத்தி, தலையைப் பின்னல் போட்டு நிதானமாகப் புஷ்பம் வைத்துக் கொள்ளுவாள். அன்று வெளுத்த ரோஜா வர்ணப் புடவையும் ஜாகெட்டும் அணிந்து. அதற்கு மாச் பண்ணுகிறப்போல், ரிப்பன் வளை, ஸில்பர் முதலியவைகளை அணிந்து கொண்டாள். அலங்காரம் முடிந்து நிலைக்

கண்ணாடி முன்னின்று பொட்டுவைத்துக் கொள்ளும் சித்ராவின் பின்பக்கம் வந்து நின்றவன், கண்ணாடியில் அவளது பிம்பத்தைக் கண்டு, "பூலோகரம்பையோ, பூத்த புதுமலரோ" என்று பாடினான்.

"அர்ச்சுன ராஜாவோ? அழகின் அவதாரமோ" என்று திரும்பிக் கன்னத்தில் தட்டினாள்.

தியேட்டரிலுள்ள ஆண்பெண் இருபாலாரும் இவர்கள் ஜோடியைக் கண்டு வியந்தார்கள். படமுழுவதும் ஒரே காதல் ஸீன் மனிதரின் மனதைக் கலக்கமடையச் செய்யும் விதம் இருந்தது. விளக்கணைக்கப் பட்டதும், சித்ரா பிரபாகரன் கையினால் அணைக்கப்பட்டிருந்தாள்.

சினிமா முடிந்து வீட்டிற்குவந்து மனம் தடுமாறின நிலைமையுடனேயே சாப்பாடு முடிந்தது. வழக்கம்போல் தோட்டத்திற்குச் சென்றார்கள். பளிங்கு மேடையில் இருவரும் உட்கார்ந்தார்கள். படத்தைப் பற்றிய விமர்சனம் கொஞ்ச நாழிகை நடந்தது. பிறகு, சித்ராவின் மடிமீது தலையைவைத்துப் படுத்தான். மாசு மறுவின்றித் தாவள்யமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தான் தாமரையின் காதலன். அழகுமிக்க ஜோடியைக் கண்டு கண்சிமிட்டின தாராகணங்கள்.

குழிந்த கன்னங்களுடன் சிரித்துப்பேசும் மோஹனாகார ரூபமும், சுந்தரகாந்தியும், மணங்கமழும் தென்றலும், காதல் காட்சியினால் சலன முற்ற மனதை இன்று லாஹிரி கொள்ளும்படி செய்தன. தன் மார்பின் மீது இருகைகளையும் சேர்த்து வைத்தவண்ணம் அவளையே உற்று நோக்கினான். வாரிவிட்ட கிராப்பைக் கலைப்பதும் கோதுவதுமாகக் கனிந்த கண்களுடன் அவன் பார்வையை ஏற்றுக்கொண்டிருந்தாள்.

"சித்ரா" என்றான் தொண்டைகரகரத்து.

"ஏன்" என்றாள் மெல்லிய குரலில்.

"தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்ததும் குழந்தை அழ ஆரம்பிக்கிறது, எதனால்?"

"பசியினால்"

"இளைஞர்கள், யுவதிகள் ஆகியவர்களின் உள்ளங்கள் ஊமை அழுகை அழுகின்றன, அவைகளை அழச்செய்வது எது?"

"காதல் பசி."

"கிழவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் ஓடுகிறது, எதனால்?"

"பசிதான்"

"வாழ்க்கை என்பது என்ன?"

"இந்த மூன்று பசிகளுக்காக நடந்து வரும் போராட்டம்"

"சுகம் என்பது என்ன?"

"இந்த மூன்று பசிகளின் திரிவேணி சங்கமம்தான் ஆனந்தமயமான வாழ்க்கை என்பது"

"பலே, 'டக் டக்' என்று பதில் சொல்லி விட்டாயே!"

"நீங்கள் படித்த அதே கவியின் புத்தகத்தை நானும் படித்திருக்க மாட்டேனா? பதில் சொல்ல முடியாதா?"

"சித்ரா!"

"ஏன்?"

"நீ எவ்வளவு அற்புதமாகத் தோன்றுகிறாய்?"

"இது என்ன புதிர்?"

"காலம் வீண்போகுதே காதலனே காணேன்" என்ற பாட்டைப் பக்கத்தில் எங்கிருந்தோ ஒரு கிராமபோன் அலறிற்று.

"சித்ரா! கேட்டாயா பாட்டை?"

"எதற்காக?" என்றாள் புன்சிரிப்புடன்.

"நம்மைக் குறிக்கவில்லையா?"

"பிரபூ, எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. சிந்திக்கும் சக்தியே அற்றுவிட்டது. ஒரே இன்ப லாஹிரி" என்றாள் நீண்ட மூச்சுடன்.

எழுந்து உட்கார்ந்து, அவளை அணைத்து முகத்துடன் முகம் சேர்த்து "இன்றைய மனம் கொள்ளும் இன்பலாஹிரி! ஆஹா எப்படிச் சொல்லமுடியும்?" சித்ரா! 'காதலிருவர் கருத்தொருமித்து............' என்ற வாக்கியம் முடிவுறுமுன் தன் கையினால் அவள் வாயை மூடினான். அன்றுவரை மதனனின் மலரம்பின் குறிக்கு ஆளாகாமல் உறுதியுடன் ஜயித்து வந்தார்கள். ஆனால் அன்றைய, சம்பவங்களும் இயற்கையும் சேர்ந்து அவன் அம்பினை ஹிருதயத்தில் ஏற்குமாறு செய்து விட்டன.

காலையில் கண் விழித்ததும் அவனது அறையில் தானிருப்பதை உணர்ந்தாள். துணுக்குற்றது மனம். அவன் கூப்பிடுவதையும் காதில் வாங்காமல் வெளியில் சென்று விட்டாள். வழக்கம்போல்

## தானியம் புடைத்தல்

பாரதநாட்டின் முக்கிய தொழில் வேளாண்மை. அறுவடைக்காலத்தில் நீங்கள் வயல்களில் நடந்து செல்லுகையில் தானியம் புடைக்கும் சர்வ சாதாரணமான காட்சியைக் காணலாம். விவசாய ஜீவிதத்தின் வழக்கமான அம்சம் இது. ஸ்திரீகள் உள்பட குடும்பத்தில் எல்லோரும் இதில் கலந்துகொண்டு உதவி புரிவார்கள்.

பின்னர் நீங்கள் கிராம வீதிகளில் செல்லும்போது, ஆங்காங்குள்ள மளிகைக் கடைகளில் கிராம வாசிகளின் அன்ருடம் முக்கியமாய் வேண்டிய பண்டங்களுடன் ஹமாம் ஸோப்பையுந்தான் காண்பீர்கள்.




# ஹமாம்

பாரதநாட்டு மக்களின்
மனதிற்குப் பிடித்த ஸோப்பு



டாம்கோ விற்பனை இலாகா 19A, வாணியர்தெரு,
தபால் பெட்டி நெ. 31, சென்னை.

A TATA PRODUCT

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்**

யந்திரம் சுற்றுவதுமாதிரி வேலைகளைச் செய்தாள். ஆனால் எட்டு நாட்களாக இருந்த அளவற்ற குதூகலம் மறைந்து புயலடித்து ஓய்ந்தது போன்ற சோர்வுற்ற உணர்ச்சியே தோன்றினது. அடுப்பின் கீழ் வந்து அரட்டையடித்துக் காப்பிசாப் பிடுபவன் வந்த சோடே தெரியாமல் பல்துலக்கி விட்டுச் சென்றுவிட்டான். ஒரு வரை யொருவர் அணுகமுடியாதவாறு ஏதோ ஓர்சக்தி தடுப்பது போலிருந்தது. குற்றம் யார்மீது என்ற ஆராய்ச்சியில் இருவர் மனமும் இறங்கிற்று. பெண்ணுள்ளம் ஆண்மையைத்தாக்கிற்று. ஆண்மை இயற்கையைத் தாக்கிற்று, காப்பியை எடுத்துச் சென்றாள். இந்து பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்ததால் இவள் வரவை அறியாவண்ணம் அது மறைத்துக் கொண்டிருந்தது. 'டம்ளரை' டக் என்று ஓசை எழும்ப வைத்து விட்டுத் திரும்பினாள். பேப்பரை மடக்கிவிட்டுத் திரும்பினான். அவளைக் கூப்பிட நெஞ்சம் நினைத்தது. வாய் மறுத்துவிட்டது. பத்தரை மணிவரை ஏதோ அலுவல்களைக் கவனிப்பதுபோல் அங்குமிங்கும்சென்று, வேலையாட்களுக்குக் கட்டளையிட்ட வண்ணமிருந்தாலும் மனம் பிணக்கைத் தீர்க்கும் வழியை ஆராய்ந்து கொண்டிருந்தது.

கடைசியில் ஸ்னானம் செய்ய வெந்நீர் அறைக்குச் சென்றான். ஸ்னானத்திற்கு வெந்நீர் தயாராக வைத்திருந்தது. 'அவள் வரமாட்டாள். என்ன செய்வது?' என்று ஆராயும் சமயம் சோப்புப்பெட்டி இல்லாதது ஓர் தைரியத்தைக் கொடுத்தது.

"சோப்பு வேண்டும்" என்றான் சற்றே சப்தமாக.

அவன் தந்திரம் பலித்தது. சோப்புப் பெட்டியுடன் சித்ரா வந்தாள். பெட்டியைக் கீழே வைக்கும் சமயம் பெட்டியுடன் அவள் கையைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு,

"சித்ரா! என் மீது கோபமா?"

"உங்கள்மீது கோபமெதற்கு? என்னைப் படைத்தவனை நோகவேண்டும். 'எண்ணைறக்கற்று எழுத்தற வாசித்தாலும், பெண் புத்திபேதைமையே' ஏமாந்தவர்கள் பேதையர்கள். என் கையை விடுங்கள். இப்படித் தான் என்னை............?" மேலே சொற்கள் வெளிவராமல் கண்ணீர் கன்னத்தில் உருண்டோடினது.

"அடபைத்தியமே, ஏன் அழுகிறாய்?"

"பைத்தியமாகி விட்டேனே என்றுதான்"

"ஒன்றுமில்லை; எல்லாம் நன்மைக்காகத் தான். இதற்காகவா காலைமுதல் மௌன விரதத்தை ஏற்றுக்கொண்டாய்?"

"ஜிதேந்திரிய புருஷரே! தங்கள் வாய்க்குக் கொழுக்கட்டை யார் செய்து கொடுத்தார்கள்?"

"உண்மைதான் சித்ரா! ஒத்துக்கொள்ளுகிறேன்; குற்றவாளியின் மனப்பான்மை என்னையறியாமலேயே ஏற்பட்டுவிட்டது. சந்தேகமில்லாமல் நான் ஜிதேந்திரியனே— நினைத்தால் முடியும்."

"இதென்ன பசப்பு வார்த்தை; என்னிடமா துணிந்து சொல்லுகிறீர்கள்? நேற்றுச் சாயங்காலம்வரை நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன்..............."

"பிறகு காமாந்தகாரன் என்று தெரிந்து விட்டது; அப்படித்தானே?"

"அதையேன் நான் சொல்லவேண்டும்?"

"ஆனால் குற்றவாளி நான்மட்டும்தான் என்பது உன் எண்ணமா?"

"இல்லை; நான்தான்" என்றாள் ஆங்காரத்துடன்.

"ஆஹா ஹா! கோபத்தினால் சிவந்த முகத்தோற்றம் எவ்வளவு வசீகரமாக இருக்கிறது; இதுவரை துக்க மிகுதியினால் அழும் தோற்றத்தைத்தான் பார்த்திருக்கிறேன். கோபம் வந்தே பார்த்ததில்லை, சரி; குற்றவாளி நம்மைப் படைத்தவன் தான். நான் சொல்லுவதைக் கேட்டுவிட்டு பிறகு உன் இஷ்டப்படி நட. உன் மனம் தெளிந்த பின்புதான் எனது ஸ்நானம்" என்று ஸ்நானம் செய்யக் கட்டப்பட்டிருந்த சலவைக்கல் மேடையின் மீது உட்கார்ந்தான்.

"சோப்புப்பெட்டி கையைக் குத்துகிறது. தயவு செய்து கையை விடுங்கள்"

கையை விட்டுவிட்டு, "நான் இந்தத் தடவை வந்ததின் நோக்கமென்ன தெரியுமா?"

"அதுதான் தெரிந்து விட்டதே"

"கோபப்படாதே! சற்றுப்பொறுத்துக் கேள்: ஒருமாதமாக, சுகன்யாவைக் கல்யாணம் செய்து கொள்ளும்படியாக எனக்கு இருபக்கங்களிலிருந்தும் கடிதம் வந்து கொண்டிருந்தது, அதிலும் சித்திரையில் நடந்து விடவேண்டுமென்று வற்புறுத்தப்

பட்டிருந்தது. உன்னைத் தனியாக விடுவதற்கு என் மனம் அஞ்சிற்று. பக்கத்திலும் இருக்க முடியாது. கடமையை உத்தேசித்து முன் போல் ஏதாவது ஏற்பாடானால் என்ன செய்வது? உன்னை என் உரிமைப் பொருளாகச் செய்து விட்டால், முன்போல் ஒப்புக்கொள்ள மாட்டாய் என்பது எனது தீர்மானம். அந்த நிலைமையிலேயே உனது தீர்மானத்தை சேகர் இன்னும் போற்றி ஆச்சர்யமடைகிறான். இப்பொழுது மரணம் ஒன்றைத்தவிரவேறு நம்மைப் பிரிக்க முடியாது. ஒற்றுமையுடன் நடைபெறப் பிரயாசைப்படுகிறேன். இல்லையேல் சொல்லாமல் ரிஜிஸ்டர் மாரேஜ். அப்பா ஆக்ஷேபனையே சொல்ல மாட்டார். அம்மா கொஞ்சநாள் கோபமாக இருப்பாள். பிறகு அவள் மனம் இளகிவிடும். தாயன்பு என்பது எவ்வளவு ஆழம் என்பதை மறுக்க முடியுமா? உன் நிலைமைக்காக உன் தாயார் உயிரையே தியாகம் செய்தாளல்லவா? அதனால் தாய்ஒரு நாளும் வெறுத்து ஒதுக்கமாட்டாள். பிறகு நேற்று நான் போட்ட திட்டமெல்லாம் நிறைவேறும். இதுதான் காரணம். நேற்று நான் எவ்வளவு தடுமாறினாலும், தினம் போல் பிரிந்திருக்க முடியும். அந்தச்சமயம் உனது நிலைமை மெழுகின் தன்மை. நான் எந்தவிதம் நடந்தாலும் நீ ஏற்றுக்கொண்டிருப்பாய். நான் ஜிதேந்திரியன் என்று சொன்னதில் தப்பென்ன?''

''இவையெல்லாம் சரி. எதிர்பாராத விதமாக நான் இறந்துவிட்டால் தாங்கள் என்னை மறந்து மற்றொருத்தியுடன் குலாவாமலிருப்பீர்களா?''

''சித்ரா! என் அன்பை நீ இன்னும் உணரவில்லைபோலும்! அப்படி மரணம் உன்னைப் பிரித்தால், நடைப்பிணமாக, கடமைக்காகவே வாழ்க்கை நடத்துவேன். அப்படிக்கன்றி, விதியும், மதியும் சதி செய்து, ஒருத்தியை ஏற்றுத்தான் ஆகவேண்டுமென்று ஏற்பட்டால், எனது உடல் வேண்டுமானால் அவள் ஸ்வாதீனமிருக்கலாம்; என் ஹிருதயத்தில், சொல்லில், நினைவில், எப்பொழுதும் நீயே வாஸம் செய்வாய்; நீறு பூத்த நெருப்பைப்போல் என் உள்ளத்தைத் தஹிக்கும் உன்பிரிவு. அன்று தாம்பிரவர்ணியின் படிக்கட்டில் என்னைக்கல்யாணம் செய்து கொள்ளுவீர்களா என்று கேட்டாயே! அன்று உன்மீது ஏற்பட்ட பாசமானது நாளுக்கு நாள் என்னை இறுகப் பிணைக்கிறது. உன்மீது எனக்கேற்பட்டிருக்கும் அன்பானது சொல்லால் விவரிக்க முடியாதது. நீ என்மீது எத்தகைய அன்பு செலுத்துகிறாயென்பதையும் என்னுள்ளம் அறியும். சித்ரா! முடியுமானால் என் ஹிருதயத்தைப் பிளந்து காட்டுவேன். என் உடலின் இரத்த அணு ஒவ்வொன்றும் ''சித்ரா! சித்ரா'' என்றே துடிக்கின்றது. சித்ரா! நான் சுயநலக்காரனல்லவே, நீ என்னை எவ்வளவு கேவலமாகப் பேசினாலும், என்மனம் உன்னை வெறுக்காது; உன்னை என்னிடமிருந்து பிரிக்க முடியாதவாறுதான்......சித்ரா, என்னை மன்னித்துவிடு'' என்றான் குரலில் ஏக்கம் தொனிக்க. கண்களில்நீர் துளித்தது.

அவன் சொல்லும், கண்களில் நீரும், அவள் மனதை மிக வாட்டின. பெண் உள்ளம் கனிந்துவிட்டது. யாவும் மறைந்தது. உள் அன்பே தலையெடுத்தது. சட்டென அருகில் சென்று, தனது தலைப்பினால் அவன் முகத்தைத் துடைத்துவிட்டு ''என்னை மன்னித்துவிடுங்கள். ஏதோ மனவேகத்தில் சொல்லிவிட்டேன். உங்கள் அன்பைச் சந்தேகித்தால் நான் நன்றி மறந்தவர் அடையும் கதியை அடைவேன்'' என்றாள்.

தன் மடி மீது உட்கார வைத்துக் கொண்டு, ''என்கண்ணு என்னை வெறுக்க மாட்டாளென்று தெரியாதா? சற்றுச் சிந்தனை செய்துபார். தினம்போல் பிரிந்திருக்க முடியாதா?''

''உண்மைதான்; தோட்டப்பக்கம் சென்றதுமே சாகுந்தலத்தில். துஷ்யந்தன் சகுந்தலை, காந்தர்வ கல்யாண சுலோகம் என்னையறியாமல் நினைவில் தோன்றிக் கொண்டே இருந்தன. அவளைப்போல் மெய்மறந்தேன். நீங்கள் சொல்லுவது போல், குற்றவாளி சூழ் நிலையேதான் என்று தோன்றுகிறது''

''சித்ரா கோபம் போய் விட்டதல்லவா? வழக்கம்போல் எல்லாம்........''

''உம், அவனியில் ஆடவர் உள்ளமே வைரமதோ? கனிந்த மனத்தார் கோதையரே'' என்று சொல்லிவிட்டு, அணைப்பிலிருந்து விடுவித்துக்கொண்டு, ''சரி ஸ்நானம் செய்யலாமல்லவா?'' என்றாள்.

பிறகு புயலடித்து ஓய்ந்தவனத்தில், தென்றல் வீசுவதுபோல் அவர்கள் இருவரும் தமாஷாகப் பொழுதைக்கழித்தார்கள். எந்த ஒருவிஷயமும் ஒரு கட்டுப்பாட்டில் இருக்கும் வரை, அச்சமிருப்பது சகஜம். ஒரு இடத்திற்குப் போகவேண்டாம் என்ற உறுதியுடன் கட்டுப்பாடாக இருக்கும் வரை அப்படியே நடந்துவர முடியும். இன்று ஒருநாள் மட்டும்

சென்று வந்து விடுவோம், பிறகு செல்லவே வேண்டாமென்று சென்றால், பிறகு, அன்றைக்குப் போகவில்லையா, அதுபோல் தானே என்ற மனப்பான்மை ஏற்படுவது சகஜம்.

அதுபோல்தான் நடந்தார்கள் சித்ராவும் பிரபாகரனும், ராதாகிருஷ்ணய்யர் வந்த பின்பும். இவர்கள் இரவில் சந்திப்பது நிற்கவில்லை. ஸீதாலக்ஷ்மி வந்தாள். முன்னெச்சரிக்கையாக அவரவர் இடத்தி லிருப்பார்கள், பிறகு வீட்டிலுள்ளவர் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, சித்ராவைப் பளிங்கு மண்டபத்திற்கு அழைத்துச் சென்று விடுவான், ரஜா முடிந்து காலேஜ் சென்றான். மூன்று நாள் லீவு கிடைத்தாலும் தவறாமல் வந்துவிடுவான், இப்படியாக மூன்று மாத காலம் சென்றது. சித்ராவின் பரீக்ஷையும் முடிவடைந்து விட்டது. பிரபாகரனின் வரவை எதிர் நோக்கிக்கொண்டிருந்தாள்.

எட்டு நாள் ரஜாவில் பிரபாகரன் வந்து சேர்ந்தான். வழக்கம்போல் சித்ரா கலகலப்பாகப் பேசவில்லை. யாவர் முன்னிலையிலும் சந்தோஷமாகக் காணப்பட்டாலும் தனிமையில் பார்க்கும்பொழுது முகம்வாட்டமுற்றுக் காணப்பட்டது. அதைப்பற்றிக் கேட்கச்சந்தர்ப்பம்கிடைக்க வில்லை. வழக்கம்போல் பன்னிரண்டு மணி சுமாருக்கு அவள் அறை ஜன்னலுக்குநேர் வந்து நின்றான். அவன் வரவையே எதிர் நோக்கி விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவள் சத்தப்படாமல் கதவைச்சாத்திக்கொண்டு. அவனுடன் சென்றாள்.

பளிங்கு மேடைமீது இருவரும் உட்கார்ந்ததும், "சித்ரா! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்றான்.

பதில் பேசாமல் அவன் மடியில் முகத்தைப் புதைத்து, தேம்பித் தேம்பி அழலானாள்.

"சித்ரா! இது என்ன? எதற்காக அழுகிறாய்? சொல்லாமல் விசும்பினால் நான் என்ன செய்யமுடியும்? உன் தேம்பல் என்ஹ்ருதயத்தைப் பிளக்கிறது. விவரத்தைச் சொல்லு" என்று முகத்தை நிமிர்த்தி அவள் சேலைத் தலைப்பை எடுத்துக் கண்களைத் துடைத்தான்.

"நான்............நான்............" என்றாள் மேலே வார்த்தை வெளிவராமல் விசும்பல் வந்துவிட்டது.



"சொல்லு சித்ரா. என்னிடங்கூடவா தயக்கம்?" அவள் முகவாய்க்கட்டையைப் பிடித்து நிமிர்த்தினன்.

"நமது காதலின் கனி" என்ருள் அவனை உற்றுநோக்கியவாறு.

"அம்மா! இதற்குத்தானு இந்த அழுகை?"

"ஆமாம்; உங்களுக்கு எதுவும் வெகு அலக்ஷ்யம். என்மானம் போய்விடுமே. எனக்கு யார் கதி?"

"ஏன் நானிருக்கிறேன்; எதற்காகப்பயம்?"

"அப்படியானுல் இந்த எட்டுநாளிற்குள்ளாக என்னை உலகம் அறிய உரிமையாக்கிக்கொண்டு விடுங்கள்."

"எவ்வளவு நாள்?"

"அதை நான் ஒரு தடவை சொல்ல வேண்டுமா? பதினைந்து நாள் ஸ்வர்க்க போகமாக இருந்தது நரக வேதனையாக முடிந்தது."

சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தான். ஒருநீண்ட மூச்சுக்குப்பின் "சித்ரா! விதியின் விசித்திரச்செயல் மனிதனை மூடனுக்கி விடுகிறது. கோவிலை வேருடன் பிடுங்குகிருர்கள், பலனில்லை. நான் ஒரு விதமான ஏற்பாடு செய்ய நினைத்தேன். அதற்கு இந்த விஷயம் தடங்கல். வைகாசியில் மிகவும் விமரிசையாகக் கல்யாணம், நான் ஏகபுத்திரனல்லவா? அதனுல் அப்படி. ஆனுல் பிறரைக் கேலி செய்துவிட்டு நானே உதாரணமானுல் எவ்வளவு கேவலம்? ஒரு யோசனை சொல்லுகிறேன் கேட்கிருயா?"

"உம்,"

"மருந்து கொடுக்கிறேன் சாப்பிட்டு விடுகிருயா?"

"என்ன?" என்ருள் பதறியவளாக.

"இந்த டயம் சுலபம்"

"ஐயோ நான் மாட்டேன்."

"ஏன்? இதிலென்ன தப்பு? இக்காலத்தில் இதைப்பற்றிப் பிரசாரம் வேறு நடக்கிறது. குடும்பத் தலைவியரான எத்தனை பெயர்கள் கேட்டுச் செய்கிருர்கள். இந்த ஒரு குற்றம்தான் நம்மைப் பாதிக்கும். வெண்ணெய்திரளும்சமயம் தாழிஉடைவது போல்இதுவேறுசாக்காக ஏற்படக்கூடாது. என் கண்ணல்லவா? உனக்குக் கெடுதலைச் சொல்லுவேனு? நானே டாக்டர். அதனுல் பிறர் அறிய வேண்டாம். வேண்டிய ஏற்பாட்டை நானே செய்து விடுவேன். எங்கே 'சரி' என்று சொல்லு பார்க்கலாம்!" என்று இறுக அணைத்துக் கொண்டான்.

ஆர்வங்கலந்த அன்புமொழிக்கு மறுப்பு ஏது? அன்பின் அணைப்பில் ஏதோ பளுக் குறைந்தது போன்ற உணர்ச்சியினுல் யாவற்றையும் மறந்து விட்டாள்.

மருந்து சாப்பிட்டு இரண்டு நாள் சென்றன. யாதொரு மாறுதலுமில்லை. மறுபடியும் சாப்பிடும்படி கொண்டுவந்து கொடுத்தான்.

"ஐயோ! வேண்டாம். மன்னித்து விடுங்கள். தேகத்தை ஹிம்ஸிக்கிறதே தவிர வேறென்றுமில்லை."

"எதிர்காலத்தை உத்தேசித்துச் சற்றுப் பொறுத்துக்கொள். இந்தத் தடவை வீண் போகாது."

"அன்பில் ஊறின முதற்கனியை ஏன் தள்ள வேண்டும்? தங்களது பிரதி பிம்பமாகத் தோன்றுவது எனக்கு எவ்வளவு இன்பத்தைக் கொடுக்கும். தயவுசெய்து விட்டு விடுங்கள்"

"இப்பாக்யம் கிடைக்காமல் போகாது. சமய சந்தர்ப்பம் அப்படி நேர்ந்திருக்கிறது" என்று பல விதமான ஆறுதல் மொழியினுடன் அன்பின் அணைப்பில் அவன் கையினுலேயே வாயில் ஊற்றி விட்டான்.

ஈசன் அருளையும், விதியின் விளையாட்டையும் யாரால் அறிய முடியும்?

மறு நாள் அவன் புறப்பட வேண்டியது அவசியம். வழக்கப்படி பளிங்கு மண்டபம் வந்தார்கள்:

"சித்ரா! இன்று என் லக்ஷ்யம்கூடி விடும். மிக்க சிரமப்பட்டு, டாக்டர் ஜீவநாத்திடம் தந்திரமாகப் பேச்சுக் கொடுத்து, தயார் செய்து வந்திருக்கிறேன்; வாயைத்திற" என்று சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்த சித்ராவின் பக்கம் நகர்ந்தான்.

"கண்ணே மூக்கே என்று அணைக்க வரவேண்டாம். நான் பகல் முழுவதும் சிந்தனைசெய்து ஒரு முடிவான தீர்மானத் துடன் தான் இவ்விடம் வந்திருக்கிறேன். அது எந்தத் தேவாமிர்தமானுலும் சரி. நான் கண்டிப்பாகச் சாப்பிடமாட்டேன்" என்ருள்.

எதிர்பாராத இந்தச்சொற்கள் அவனைத் திகைக்கச் செய்தன. "சித்ரா! நீயா இப்படிப் பேசுகிறாய்? அல்லது உன்னுள் ஆள் புகுந்து பேசுகிறதா?" என்றான்.

"ஆளிருப்பதினால்தான் இந்தத் தர்க்கம் ஏற்பட்டது."

"இப்பொழுதே நமக்குத் தர்க்கம் உண்டாக்கும் ஆள் கூடவே கூடாது. பின்னால் நம்மையே பிரித்து விட்டாலும் விடலாம். என் கண்ணல்லவா? இந்த முறை தவறாது. உனதும் எனதுமான கௌரவத்தைக் காப்பாற்றவே சொல்லுகிறேன்"

"இதிலென்ன கௌரவம்? கல்யாணம் பிரபலமாகச் செய்ய வேண்டாம், சாதாரணமாக ஒரு கோவிலில் செய்து கொண்டு விடலாம். பிறகு பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பொழுது கிரேண்டாக எட்டு நாள் கொண்டாடுங்கள். என் மனம் ஒப்பவில்லை"

"சித்ரா! என் மனம் மட்டும் ஒப்பியா சொல்கிறேன்? நிலைமை மாறுபாடாகி விட்டதே" என்று சொல்லும் பொழுதே அவன் குரல் தழுதழுத்தது. அவளை மடி மீது சாய்த்துக்கொண்டு குடங்கையினால் தலையைத் தாங்கிக் கொண்டான்.

"அவன் இஷ்டப்படிதான் நடந்து விடுவோமா?" என்ற சிந்தனை க்ஷணநேரம் நின்றது. எதிர்ப்புறச்சுவரில், அழகிய யுவதி, ஆறுமாதக் குழந்தையை முகத்துடன் சேர்த்து முத்தமிடும் காட்சி ஜீவகளை ததும்பத் தீட்டப்பட்டிருந்தது அவள் கண்ணில் தென்பட்டது. தாயுள்ளம் கனிந்தது. கிளாஸை வாயருகில் கொண்டுவந்தாள். ஓர்மினிட் வாயில் விழுந்துவிடும். சித்திரத் தோற்றம் அவளுக்குத் தைரியத்தைக் கொடுத்தது. மருந்து வாயில் விழும் சமயம் கிளாஸைத் தட்டி விட்டாள். 'டணார்' என்ற சப்தத்துடன் நாலுபுறமும் கிளாஸ் சிதறிற்று. அதன் நெடி இருவர் மூக்கையும் துளைத்தது.

"சித்ரா! இது என்ன செய்கை?" என்றான் பதட்டத்துடன்.

"நல்ல செய்கை" என்று எழுந்து உட்கார்ந்தாள்.

"ஆனால் நீ என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறாய்?;'

"நான் என்ன செய்ய முடியும்? நாளைக் காலை தங்கள் தாயாரிடம் விஷயத்தைச் சொல்லி விரைவில் உரிமையை நிலைநாட்டுங்கள். அல்லது நாளை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்."

"சித்ரா, இது காரியத்தில் சுலபமாக நடக்கக்கூடியதா? எல்லாம் அறிந்த நீ இப்படிக் கேட்கலாமா? உன்னை அழைத்துச் செல்ல என்ன காரணம் சொல்லுவது? சாத்வீக முறை நிச்சயம் நடைபெற முடியாது. அவர்கள் விரோதத்துடன்தான் முடியும். நீ அது சரி என்று சொன்னால் அப்படியே செய்கிறேன். எதிர்ப்பு அதிகமானால், நீ மெடிகல் காலேஜில் சேர்ந்த பின்பு அவ்விடமே ரிஜிஸ்டர் செய்து விடலாமென்பது எனது உத்தேசம். நீ இந்த நிலைமையுடனிருந்தால் அதுவரை மறைக்க முடியாது, சிந்தித்துப்பார்"

"மறைக்க வேண்டாமே"

"சித்ரா! நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேனென்பதும், நீ என்னை எவ்வளவு நேசிக்கிறாய் என்பதும் நமது மனம் அறியும். என் காதலைவிட அது உனக்கு அவ்வளவு பெரிதா? தாய்மை ஸ்தானம் காதலையும் ஸ்வீகரித்து விடுமா?" என்று நீண்ட மூச்சுவிட்டான்.

"காதலை ஸ்வீகரிக்கும் தன்மை காதலனுக்கே உரியது. 'இளமை, முதுமை, வறுமை' என்ற காரணம் ஒன்றும் அதை மாற்றமுடியாது. இந்தமாதிரி மாறுபாடான நிலைமை ஏற்படும் பொழுது தாய்மை ஸ்தானத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டி இயற்கை செய்து விடுகிறது. இதனிமித்தம் தாங்கள் என்னை வெறுத்து ஒதுக்கினாலும், நான்விலகி நடந்தாலும் ஹ்ருதயத்தில் காதலக்கினி புகைந்து கொண்டேயிருக்கும். உருகியே பிராணன் போகும். தங்களை வெறுப்பது என்பது மட்டும் முடியாது. காதலின் உரிமைக்கே போராடுகிறேன்."

"சித்ரா! ஏன் இந்த அர்த்தமற்ற விவாதம்? இது போனால் போகிறது. இன்னொரு டோஸ் வைத்திருக்கிறேன். கொண்டு வருகிறேன். யாவும் ஒழுங்காக நடைபெறும்."

"முடியாது. நீங்கள் நாளையே சென்று விடுவீர்கள். அவஸ்தையும் அவமானமும் அடைபவள் நான்"

"பரீக்ஷை எப்படியாவது போகட்டும். நாளை நான் பிரயாணத்தை நிறுத்திவிடுகிறேன், நீ நல்ல நிலைமைக்கு வந்தபின்பே நான் செல்லுகிறேன். மற்றவிஷயங்கள்

உன்னையும் என்னையும் தவிர ஒருவரும் அறிய முடியாது''

''நீங்கள் என்ன சொன்னாலும் சரி. என்மனம் இடந்தரவில்லை. நான்மாட்டேன்''

''இதென்ன பிடிவாதம் சித்ரா?''

''தாங்கள் செய்வது எந்த வாதம்?''

''நாசமாய்ப்போன வாதம். கடைசியாக்க கேட்கிறேன், வேண்டிக்கொள்ளுகிறேன், கெஞ்சி மன்றாடுகிறேன், என்மீது இரக்கங்காட்டு. என்னைத் தலை குனியும்படி செய்யாதே.''

''நானும் கடைசியாக வேண்டிக்கொள்ளுகிறேன், கெஞ்சி மன்றாடுகிறேன், காலைப் பிடித்துக்கொள்ளுகிறேன். இந்த நான்கு நாளும் பட்ட அவஸ்தை சொல்லவும் முடியாமல் வெல்லவும் முடியாமல் நான் பட்டகஷ்டம், தயவு செய்து என்னைச் சித்திரவதை செய்ய வேண்டாம். வேறு வழி தோன்றாவிட்டால் தங்கள் கையினால் விஷபானம் கொடுத்து விடுங்கள். உங்கள் மடிமீது, உங்கள் முகபிம்பத்தைப் பார்த்தவண்ணம் என் கஷ்டம், தங்கள் கஷ்டம், உங்கள் அம்மாவின் கௌரவம், எல்லாவற்றிற்கும் முடிவு காண்பித்து விடுகிறேன்.''

''உன்னைச்சித்ரவதை செய்யாது மார்பியா இஞ்செக்ஷன் செய்து விடுகிறேன். உன்னைக்கொன்று நானும் சாவதில் யாருக்கு என்ன லாபம்? இந்த ஒரு தடவை மட்டும் நீ என்னிஷ்டப்படி நடந்துதானாக வேண்டும்.''

சற்றுநேர மௌனத்தில் ''சரி யென்று சொல்லி விடுவோமா?'' என்ற சிறிய சிந்தனைச் சுடர் தோன்றினது. அதே சமயம், யுவதியும் குழந்தையுமான சித்ரம் கண்ணில் தென்படவே மனம் உறுதி கொண்டது. ''இதனால் என்ன நேர்ந்தாலுமே சரி, நான் சாப்பிட முடியாது'' என்றாள் கண்டிப்பான குரலில்.

பொறுமை எல்லையைத் தாண்டிவிட்டது. ''என்ன பிடிவாதம்? பெண்புத்தி என்பதைக் காட்டுகிறதே'' என்று நினைக்கும் பொழுது ஆண்மையின் ஹ்ருதயத்தில் கோபத்தின் ஜ்வாலை வீசத் தொடங்கியது. ''இந்த ஒரு விஷயத்தில் என்னுடன் ஒத்துழைக்க மாட்டாயா?'' என்று அவள் கையை அழுத்திப் பிடித்தவாறு கேட்டான்.

''பெண்கள் சுதந்திரம், விட்டுக் கொடுப்பது என்பதெல்லாம் வாய்ப் பேச்சில்தானா?'' என்றாள்.

''சித்ரா! உன் சுதந்திரம் காக்கப் படவே நான் இவ்வளவு மன்றாடினேன். வீண் பிடிவாதம் செய்கிறாய். தாய்மை ஸ்தானம் வேண்டுமா, என் காதல் வேண்டுமா?'' என்றான் கடுமையான குரலில்,

''இதென்ன கேள்வி? இரண்டும்தான் வேண்டும்''

''இந்த நிலைமையில் நீ ஒன்றைத்தான் பெற முடியும்.''

விவாதம் ஏற்பட்டதும் விவகாரம்தான் முன்னின்றது. காதல் பிணைப்பு யாவும் மறைந்தன.

''ஏன்?''

''அப்படித்தான்!''

''ஆண்மையின் செருக்கினாலா?''

''பெண்மைக்கு இவ்வளவு பிடிவாதமானால் ஆண்மைக்குச் செருக்கிருப்பது வியப்பல்லவே? என்னால் கூடியமட்டும் சொன்னேன், கேட்கவில்லை. உன்னிஷ்டப்படி நீ நடந்துகொள். என் மனப்படி நான் நடந்து கொள்ளுகிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நான் கிராதகனல்ல. உன்னைக் கஷ்டப்பட வைக்கமாட்டேன். நீ என்ன செய்தாலும், சொன்னாலும் என் மனமார உன்னை வெறுக்க முடியாது. ஆனால், காதல்! அதை நசுக்கவேண்டியவனாகிறேன். இன்னும் எச்சரிக்கிறேன். சமூகத்தின் முன் தலைகுனிய வேண்டியவள் நீ. நான் தப்பிவிடமுடியும், தெரிந்ததா?'' என்றான்.

இச்சொற்கள் அவள் ஹிருதயத்திலே அம்பெனத் தைத்தன. அடிபட்ட பெண் புலி போல் அவள் கையை உதறிவிட்டு எழுந்து நின்றாள். ''ஆஹா! என்ன படித்தாலென்ன? பிரசங்கமாரி பொழிந்தாலென்ன? சுயநலம்; அது மட்டும் போகவில்லை; இயற்கைக்கு வசப்படுவது இருபாலாரும்தான். ஆனால் ஸ்ருஷ்டி விநோதம், பெண்ணையே காட்டிக் கொடுத்துவிடுகிறது. ஆண் இனம் சுகத்தை மட்டும் பங்கு போடுகிறது. பெண் குற்றவாளியாகக் கருதப்படுகிறாள். பிரபூ! தங்களை மனிதவர்க்கத்தாருடன் சேர்க்காமல் தேவனாக எண்ணி மகிழ்ந்தேன். ஆனால் ஆண் குலத்தின் அகம்பாவம் தங்களை விடவில்லை. சரி, உங்களிஷ்டப்படி நீங்கள் நடக்கலாம். என்னிஷ்டப்படி நான் நடக்கிறேன். நான் சமூகத்திற்குப் பயப்படப்போவதில்லை. எதிர்த்தே போராடுவேன். பரந்த உலகத்தில் நானும் என் சேயும் பிழைக்க முடியாமல் போகாது. மேடையேறிப் பிரசங்கம் செய்து மக்களை ஏமாற்றும் சூழ்ச்சிதானா? இந்த ஒருவிஷயத்தில் தைரியமாக நடக்க முடியாதா? பெண், சமூகத்திற்குப் பயந்து

தான் ஆகவேண்டும் என்ற துணிவில்தானே இப்படிப் பேசுகிறீர்கள்? சமூகத்தின்முன் என்குற்றத்தைத் தயங்காமல் ஒத்துக்கொள்ளுகிறேன். இதனால் என்ன வந்தாலும் அனுபவிக்கத்தயார். ஆனால் எனக்கு இவ்வித தைரியங் கொடுப்பதற்கு நீங்களே காரணகர்த்தா. அதற்காக மிக்க வந்தனம் செலுத்துகிறேன். எனது பெண்மையின் சக்தியினால், ஆண்மையையும், சமூகத்தையும் வெற்றி கொள்ளப் பார்க்கிறேன். பிரபு, நமது காதல் இவ்வளவு விபத்திற்கு வருமென்று எதிர்பார்க்கவில்லை. காலம், விதி, யாரைவிடுகிறது? நமஸ்காரம் சென்றுவருகிறேன்'' என்று விர்ரெனத் திரும்பி நடந்தாள்.

அவன் மனம் துணுக்குற்றது. சித்ரா இப்படிப் பேசுவாளென்றும், போவாளென்றும் எதிர்பார்க்கவில்லை. அவளைக் கூப்பிட வாயெடுத்தான். வார்த்தை வெளிவரவில்லை. ''சரி போகட்டும் சற்று விட்டுப் பிடிப்போம்.'' என்று எண்ணியவனாக இரண்டு கைகளையும் கோத்து, தலைக்கடியில் வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்தவாறு ''தான் அன்று நடந்துகொண்டது சரியா தப்பா'' என்று ஆராயும்பொழுது, தவறு தன்மீதில்தான் என்று தோன்றினது. அதுவரை இருவரும் ஒரு முறைகூட அதிர்ந்து பேசியது கிடையாது. இன்று இப்படி நேர்ந்து விட்டதே. கொடிபோல் தன்னைச் சுற்றிக்கொண்டு அவள் பேசும் காதல் மொழிகளை நினைக்கும்பொழுது, ஓடிச்சென்று அவளைக்கட்டி அணைத்து, உன்னிஷ்டப்படியே நடக்கிறேன்' என்று சொல்லி விடலாமா என்று நினைத்தான். மறுகணம் தன்னுடன் இவ்வளவு பழகியும் ''ஆண்மையின் செருக்கு'' என்று அவள் சொன்னதற்கு மனம் சற்று வேதனையை அடைந்தது. சற்று நேரம் சிந்தனைக்கடலில் எண்ண அலைகள் எழுப்பிய வண்ணம் படுத்திருந்துவிட்டு, எழுந்து நின்றான். கண்ணாடித் துண்டுகள் நிலவொளியில் மின்னுவது அவனைப் பார்த்துக் கண்சிமிட்டிக் கேலி செய்வதுபோல் தோன்றினது. விதியே என்று யாவற்றையும் பொறுக்கி எறிந்துவிட்டு உள்ளே நடந்தான். வரும்பொழுது சித்ராவின் அறைச் சன்னல் பக்கம் வந்ததும் எட்டிப்பார்த்தான். விளக்கு எரிந்தது. கட்டிலில் இரு கைகளையும் கோத்து உச்சந்தலையில் வைத்த வண்ணம், அண்ணாந்து பார்த்தபடி படுத்திருந்தாள். கண்ணீர் அருவிபோல் ஓடியது. அவளும் தன்னைப்போல் வருந்துகிறாள் என்று எண்ணினான். கணநேரச்சிந்தனை, அறைக்குள் நுழைவோமா என்று. ஆனால் ஏதோ ஒன்று தடுக்கப் படுக்கையில் சென்று படுத்தான். இருவரையும் நித்ராதேவி அணைக்க மறுத்துவிட்டாள்.

மறுநாள் சாப்பாட்டு வேளை தவிர மற்றச் சமயம் வீட்டிலேயே தங்கவில்லை பிரபாகரன். சித்ராவுக்கு இரவு முழுதும் அழுதழுது தலைவலியும், உடம்பில் அலுப்பும், மனதில் வேதனைப்புயலும் சேர்ந்துகொண்டதினால் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே முடியவில்லை. ஸீதாலக்ஷ்மி வந்து பார்த்துவிட்டு, டாக்டரை அழைப்பதாகச் சொன்னாள்.

வேண்டாம், சொல்லி அனுப்பி மருந்து மாத்திரம் வாங்கிவந்தால் போதுமென்றாள் சித்ரா. படுக்கையில் படுத்தபடி இனி செய்யவேண்டியது எதுவென்பதைப், பகல் முழுதும் சிந்தனை செய்து பார்த்தும் ஒரு முடிவும் காணமுடியவில்லை: அவன் வெறுத்துவிட்டால் தான் எவ்விதமும் வாழ முடியாது என்ற முடிவிற்குத்தான் வரவேண்டியிருந்தது. அவன் காதல் மாசற்றது. எப்படியும் தன்னைப்பார்க்க வருவான் என்று எதிர்பார்த்தாள்.

அவள் பெண்களின் திலகம். விரும்புவது அவள் ஆச்சர்யமல்ல. ஏதோ இரவு இருவரும் தாறுமாறாக வார்த்தையாடி விட்டோம் நிச்சயம் நம்மிடம் வருவாள். ஏன் நாம் தான் போய்ப் பார்ப்போமா என்று சிந்தனை ஓடலாயிற்று. இருந்தாலும் இந்த விஷயத்தில் பெண்களே சிரத்தை காட்டுவார்கள் என்று கேள்வி. இவள் மட்டும் ஏன்? அப்பா! ஸ்திரீகளின் மனதை ஒரு விதமாகவும் நிர்ணயம் செய்ய முடியாது போலும், என்ற சிந்தனையிலிருக்கும் பொழுது மருந்துபாட்டிலுடன் வேலைக்காரன் அவ்விடம் வந்தான்.

''யாருக்கடா மருந்து?'' என்றான்.

''சின்னம்மாவுக்குத் தலைவலி என்று வாங்கிவரச் சொன்னாங்க; டாக்டர் கொடுத்ததை உங்களிடம் காண்பித்து விட்டுப் பிறகு அவர்களிடம் கொடுக்கச் சொன்னாங்க பெரியம்மா'' என்றான்.

கையில்வாங்கி மூடியைத்திறந்து முகர்ந்து பார்த்துவிட்டு, ''சாப்பிடலாம் என்று சொல்லு'' என அவன் கையில் கொடுத்தான். உடனே காண மனம் துடித்தது. இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டால் என்று நினைக்கும் பொழுது, புறப்படும் சமயம் பார்க்கலாமென்ற முடிவிற்கு வந்தான்.

(தொடரும்.)







சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்

வசீகரமான சருமம் ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு மிகவும் முக்கியமானது. நீங்களும் உங்களுடைய கட்டழகை மதித்தால் உங்களுக்கும் அது அவசியமே. இந்தியாவில் முன்னணியிலுள்ள சினிமா நட்சத்திரங்களின் அருமையான மேனியை காப்பாற்றும் இனிய பாதுகாப்பு முறையை ஏன் உங்கள் சருமத்திற்கு அளிக்கக்கூடாது? இந்த சுலபமான அழகு படுத்தும் முறையை நீங்களே 30 நாட்கள் கையாளுங்கள் — லக்ஸ் டாய்லட் சோப்பின் வெண்மையான சுகந்த நுரையை பிரியப்படுவீர்கள். அது சருமத்தை குளுமையாகவும், மழமழப்பாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுகிறது.

LTS. 153-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

# பாசமும் மோசமும்

சுவை

வளப்பகுடி கிராமத்தின் பெருமைக்கு அதன் வளப்பம் மட்டும் காரணம் அன்று; கிராமத்தின் மத்தியில் அமைந்திருந்த பிரசித்திபெற்ற காளி கோயிலும் தான். மேலும் கிராமத்தில் கட்சிகள், பிரதி கட்சிகள், அதனால் ஏற்படும் சண்டைகள் முதலியன எதுவும் கிடையாது. கிராமவாசிகள் எல்லோரும் 'கையில் ஏந்தி வாயில் போட்டுக்கொள்ளும்' வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது கடன் சுமை இல்லாமல், உழைத்து ஊதியம் பெற்று உயிர் வாழ்பவர்கள்.

கிராமத்தின் பெருமைக்கே முக்கிய காரணமான காளி கோயிலில் வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் கூட்டம் 'ஜே, ஜே' யென்றிருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் கோவிலின் மகிமையையும், காளியின் சக்தியையும். வருஷந்தோறும் தை மாதத்தில்தான் காளி கோயில் உற்சவம் அதிவிமரிசையாக நடைபெறும். உற்சவத்தின் விசேஷ அம்சங்கள்: ஆடுகள், கோழிகள் பலி, மருளாளி குட்டி குடித்தல் முதலியனவாம். ஆண்டு தோறும் அம்மாதத்தில் காளியின் காலடியில் உயிர் இழக்கும் வாயில்லா ஜீவன்கள் கணக்கிலடங்கா.

வளப்பகுடியில் மருளாளி மருதையாப் பிள்ளையை அறியாதவர்களே கிடையாது. ஊரிலேயே நல்ல 'செயல்' உள்ள மனிதன். அதனால் ஒரு கௌரவம் அவனுக்கு. தலைமுறை தலைமுறையாக மருளாளியின் உரிமைகள் அவன் குடும்பம் ஒன்றிற்கே ஏக போகமாக இருந்து வந்தது வேறு அவனுக்கு ஒரு தனிப்பட்ட கௌரவத்தைக் கொடுத்தது. மருளாளியின் வார்த்தையை மீறுபவர்கள் அந்த வட்டாரத்திலேயே கிடையாது. படமெடுத்த பாம்பு கூட மருளாளியின் வாக்கிற்குப் பயந்து அடங்கிப் போய்விடுமாம்.

மருதையாப்பிள்ளையின் தோற்றமே பார்ப்பதற்குப் பயமாயிருக்கும். ஆறடி உயரம். அதற்கேற்ற பருமன். நல்ல கட்டு வாய்ந்த தேகம். முறுக்கி விடப்பட்டிருக்கும் கறுத்த மீசை. நெற்றியின் நடுவிலே ஒரு ரூபாய் அகலத்திற்கு ஒரு சந்தனப் பொட்டு, புருவங்களுக்கிடையில் கொஞ்சம் குங்குமம். இடது கையின் மேல் புஜத்தில் நல்ல இரத்தச் சிவப்புநிறக்கயிறு கொண்டு கட்டப்பட்டிருக்கும் ஒரு தாயத்து. கையில் ஒரு கம்பை எடுத்துக் கொண்டு நின்றால் எதிராளிகள் எமனைக் கண்டதுபோல் அஞ்சுவார்கள்.

இப்படிப்பட்ட மருதையாப் பிள்ளைக்கு ஏதோ ஒரு ஆண் குழந்தை பிறவி முடமாய்ப் பிறந்தது. பிறந்த ஓரே குழந்தையும் பிறவி முடம் என்பதை அறிந்த மருதையாப்பிள்ளை மனமொடிந்து போய் விட்டான். அவன் மனைவி செல்லாயியோ அந்த ஏக்கத்திலேயே எலும்புந் தோலுமாகிக்கொண்டு வந்தாள். ஊரார்எல்லாம் "நத்தை வயித்திலே முத்துப் பிறந்தாப் போல, இவருக்குன்னு எங்கிருந்துதான் இந்தப்பிள்ளை பொறந்திச்சோ" என்று ஏங்கினர். குழந்தையைப் பார்க்க வந்தவர்கள், "மருளாளிக்குன்னு மாயமா இந்தப் புள்ளையைக் கொடுத்த காளியாயி தான் கண் தொறந்து பார்க்கணும்! என்று மறை முகமாக வேண்டிக் கொண்டனர்.

பிறவி முடமாகப் பிறந்ததற்காகப் பெற்ற குழந்தையைப் புறக்கணித்து விடமுடியுமா? அது ஆண்டவன் வைத்தகுறை; நாமாக அதற்கு ஒரு குறையும் வைக்க வேண்டாம் என்று கருதி, குழந்தைக்கு ஒரு குறையும் வைக்காமல் வளர்த்து வந்தனர், இருவரும். இக் குழந்தையினால் 'குட்டி குடிக்கும் குலத்தொழில் முடி

வடைந்தாலும்', மருதை தன் வமிசம் விளங்க வேண்டும் என்பதையே பெரிதும் விரும்பினான்.

வருஷம் ஒன்று கழிந்தது. வயதிற்கேற்ற வளர்ச்சியைக் குழந்தை பெற்று இருந்த போதிலும், படுக்கவைத்தால் படுக்க வைத்தபடியே கிடக்கும். இதைப் பார்க்கும் போதெல்லாம் செல்லாயியின் பெற்ற வயிறு பற்றி எரியும். உள்ளம் வேதனையால் துடிக்கும். தான் 'வயிறு திறந்த வேளை' அப்படி என்று எண்ணி, தனக்குத் தானே சமாதானம் அடைந்து விடுவாள்.

இதற்கிடையில் சிலர் ஏதேனும் வைத்தியம் செய்து பார்த்தால், ஒருவேளை 'முடம்' சரியாகப்போய் விடலாம் என்று யோசனை கூறினர். அதற்கிணங்க, குழந்தைக்கு வைத்தியமும் செய்து தங்களாலியன்றதைப் பார்க்க விரும்பினர். மருதையும், செல்லாயியும் ஊரில் கை கால் சுளுக்கு, எலும்பு முறிவு, மூட்டுப்பிசகு முதலியவற்றிற்கு வைத்தியம் செய்வதில் பெயர்போன பிச்சையப்பனிடம் குழந்தையைக் காட்டினர். அவன் குழந்தையைச் சோதித்துவிட்டு, "பொறவி மொடம் பாருங்க; குணமாகக் கொஞ்சம் நாள் புடிக்கும். அவசரப்பட்டா ஒண்ணும் ஆவாதுங்க" என்று தொழில் முறையில் எச்சரித்துவிட்டு, ஒரு புட்டி மருந்து எண்ணெயைக் கொடுத்து, காலையிலும் மாலையிலும் கை கால் மூட்டுக்களில் தடவி, வெந்நீர் விடச் சொன்னான்.

வைத்தியன் பிச்சபையப்பன் கூறியபடியே குழந்தைக்குக் காலையிலும் மாலையிலும் நாள் தவறாமல் எண்ணெய்ப்பூச்சும், வெந்நீர்க் குளிப்பும் நடந்தன. மாசம் ஆறாகியும் அணுவளவேனும் குணம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மருதை பிச்சையப்பனிடம் சென்று, 'என்னுங்க, புள்ளை அப்படியே தான் போட்டது போட்டபடியே கிடக்கு. மாசம் ஆறுச்சு. ஒண்ணும் குணப்படலீங்களே.' என்று அதிருப்திகலந்த குரலில் கூறினான். அதற்குப் பிச்சை, 'நான் தான் அப்பவே சொன்னேனுங்களே, அவசரப்பட்டா ஒண்ணும் நடக்காதுன்னு. மாசம் ஆறுச்சுங்கிறீங்க. ஆனால் குளந்தைக்கு பொறவி மொடமுங்கறதை மறந்துட்டீங்க. பொறவி மொடத்தைப் போக்கடிக்கிறதுக்கு வருசக்கணக்கானாலும் ஆவுங்க. இதுக்கே இப்படிச்சொல்றீங்களே.' என்று இளித்துக்கொண்டே பதில் சொன்னான். மருதைக்கு மௌனம் சாதிப்பதைத்தவிர வேறுவழியில்லை.

வீட்டிற்கு வந்து தன்மனைவியிடம் பிச்சையின் வைத்தியத்தில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்தான். அவளோ "இன்னும் ஆறு மாசந்தான் பார்ப்போமே. மொடமா இருந்து மூணுவயசுகளிச்சு நடக்கற குளந்தைங்ககூட உண்டு. அதுபோல இதுவும் நடக்குதோ என்னமோ, யார் கண்டா. கொஞ்சம் அவசரப்படாமே பொறுத்துத்தான் பார்க்கறது" என்று சொல்லித் தன் இஷ்டத்தைவெளிக்காட்டிக் கொண்டாள். மருதைக்கு மனைவியின் இஷ்டத்தை மீறிப்போக மனமில்லை. பேசாமல் இருந்துவிட்டான்.

*　*　*

ஒரு நாள் காலையில், செல்லாயி வழக்கம் போல் கிண்ணத்தில் மருந்தெண்ணெயை எடுத்துக்கொண்டு, குழந்தையின் உடம்பின் மீது தடவிக்கொண்டிருந்தாள். அப்பொழுது கொல்லைப்புறத்திலிருந்து வெகு வேகமாகத் துள்ளிக் குதித்தோடிவந்த இரண்டுமாத ஆட்டுக்குட்டி அவள் கையிலிருந்த எண்ணெய்க் கிண்ணத்தைத் தாண்டும் வேகத்தில் தட்டிவிட்டு ஓடியது. இதனால் ஆட்டுக்குட்டியை அவள் சற்றே கடிந்து கொண்டாள். ஆயினும் ஓடும் ஆட்டுக்குட்டியைக் கண்ட அவளுக்கு உடனே பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. "காளியம்மா, இந்த ஆட்டுக்குட்டியைப்போல என் மவனும் கால் முளைச்சு, துள்ளிக் குதிச்சு நல்லா விளையாடட்டும், ஆட்டுக்குட்டியை உனக்குப் 'பூசை' போடறேன். அதோடே மவனுக்கு காளிமுத்துன்னு பெயர் வச்சு, வாய் விளங்கக் கூப்பிடறேன்" என்று வேண்டிக் கொண்டாள்.

அவள் வேண்டுதலின் பலனாகவோ அல்லது வைத்தியனின் மருந்து எண்ணெயின் பலனாகவோ குழந்தை மள மளவென்று குணமடைய ஆரம்பித்தது. ஆறு மாதகாலத்திற்குள் குழந்தை நடக்கவும், உட்காரவும், 'குடுகுடு' என்று ஓடவும் செய்தது. செல்லாயிக்குச் சந்தோஷம் தாங்க வில்லை. எல்லாம் காளியம்மனின் கருணையினால் தான் என்று எண்ணியெண்ணிக் களிப்படைந்தாள். காளிமுத்துவின் விஷமங்களினால் வீடே கலகலவென்றிருந்தது. மருதையும் மனைவியின் வேண்டுதலினால் தான் இவ்வளவும் என்று எண்ணி இரட்டிப்புச் சந்தோஷமடைந்தான். 'காளியம்மா கண்தொறந்து பார்த்துட்டா. இனிமே கவலையில்லை' என்று அடிக்கடி எல்லாரிடமும் கூறிவந்தான். ஆனால் வைத்தியனுக்கோ இவர்கள் இருவரையும்

விட அதிகமான சந்தோஷம் என்று கூறத் தேவையில்லை. 'எல்லாம் நம்ம மருந்து எண்ணெயின் மகிமை' என்று மார்தட்டிப் பெருமை யடித்துக்கொண்டான். மருளாயியின் மகனது பிறவி முடத்தைப் போக்கடித்த பெருமையின் பலனாக அவனுக்கு வரும்படி ஏராளமாக வந்தது. அதுமட்டுமா? 'பிச்சையப்பனா? பொறவி வியாதியைக்கூடப் போக்கடிக்கிற மவராசா வாச்சே,' என்று எல்லாரும் வாயாரப் புகழ்ந்தனர். புகழும், பொருளும் பிச்சையப்பனின் வைத்தியத்தொழிலை மேன் மேலும் விருத்தியடையச் செய்தன.

காளிமுத்து ஓடியாடி விளையாட ஆரம்பித்தது முதல் அந்த ஆட்டுக்குட்டியே அவனது விளையாட்டுத் தோழன் என்று சொல்லலாம். அவனது விளையாட்டுக்களில் பெரும் பகுதி ஆட்டுக்குட்டியைத் துரத்துவது, அதைப்பிடிக்க ஓடுவது, அதைக் கட்டி இழுத்துக்கொண்டு செல்வது இவைகள்தாம். என்ன காரணத்தினாலோ அந்த ஆட்டுக்குட்டியும் அவன் இழுத்த இழுப்பிற்கெல்லாம் இசைந்தது. கொஞ்ச நாட்களில் உண்ணும் பொழுதும், உறங்கும் பொழுதுங்கூட ஆட்டுக்குட்டியுடன் இருக்க விரும்பினான். அவன் விருப்பத்தின் பலனாக ஆட்டுக்குட்டியும் அதன் தாயும் கொல்லையிலிருந்து வீட்டிற்குள் புகும்படி ஆகிவிட்டது. காளிமுத்துவைக் கணநேரங்கூட தனியே பார்க்கமுடியாது.

இரு ஜீவன்களுக்கிடையில் பிரிக்கமுடியாத ஒரு பாசம் ஏற்பட்டுவிட்டது. அந்த வருஷம் தை பிறந்தது. செல்லாயியும் தன் வேண்டுதலை நிறைவேற்ற முதல் வெள்ளிக்கிழமையைத் தேர்ந்தெடுத்தாள். வெள்ளிக்கிழமையும் வந்தது. விடியற்காலையில் மருதையும் செல்லாயியும் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு, காளிமுத்துவிற்கு மங்கள ஸ்நானம் செய்வித்தனர். அப்படியே ஆட்டுக்குட்டியையும் குளிப்பாட்டி, அதற்கு அலங்காரம் செய்வித்தனர். கழுத்தில் பூமாலை, நெற்றியில் குங்குமம் இவற்றோடு காளியம்மன் பூசைக்கு ஆட்டுக்குட்டி தயாராக நின்றது.

சற்றுநேரங்கழித்து எல்லாரும் கோயிலுக்குப் புறப்பட்டனர். புதுவேஷ்டிகட்டிக்கொண்டிருந்தகாளிமுத்து ஆட்டுக்குட்டியை அன்புடன் அணைத்துச்சென்றான். அந்தோ! இன்னம் அரைநாழிப் பொழுதில் குட்டியை


# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

## K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

விட்டு என்றென்றுமே பிரிந்துவிடப் போகிறோம் என்பதை அவன் அறியவில்லை! கொஞ்சநேரத்தில் உயிரை இழந்து உலக வாழ்வை முடித்துக்கொள்ளப் போவதை உணராத பச்சிளங் குட்டியும் குதூகலத்துடன் குதித்தோடியது.

கோயிலையும் அடைந்து விட்டனர். பூர்வாங்க பூசையெல்லாம் இனிது நடந்தன. சற்று நேரத்திற்குள் தீபாராதனை முடிந்த பின் பூசாரி எலுமிச்சம்பழம் நுனியில் சொருகப்பட்டு, கைப்பிடியில் சந்தனம் குங்குமம் இடப்பட்டு, பளபள வென்றிருந்த ஒரு முரட்டு அரிவாளை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். தப்பு தாரை கொம்பு முதலியவை கோரமாக முழங்கின. மருதய்யா ஆட்டுக்குட்டியை ஒரு கயிற்றின் நுனியில் இழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தான். சற்று விலகிச் செல்லாயி காளிமுத்துவைக் கையில் பிடித்துக்கொண்டு நின்றாள்.

அதோ! பூசாரியும் ஆட்டுக்குட்டியை அணுகிவிட்டான். அரிவாளைக் கால்களுக்கிடையில் வைத்துக்கொண்டு, கைகூப்பி 'காளியம்மா, நீதான் துணை' என்று கூறிவிட்டு, அரிவாளை விரைந்தெடுத்து ஓங்கி ஒரு போடு போட்டான்! குட்டியின் உடல்வேறு தலைவேறாகி விட்டன. ஒரே இரத்த வெள்ளம். உடலும் தலையும் ஒரேயடியாகத் துள்ளின. காளிமுத்து இதைக் காணச்சகியாமல் கண்ணை மூடிக்கொண்டு 'ஓ'வென்று அலறினான். அவன் உடல் நடுங்கி, வியர்வையால் நனைந்தது. செல்லாயி அவனை இடுப்பில் தூக்கிக் கொண்டு சமாதானப்படுத்தினாள். அவன் அழ ஆரம்பித்து விட்டான்.

அதன் பின்பு ஆகவேண்டியவைகள் அதிவிரைவில் நடந்தேறின. துள்ளும் உடலில் ஒருவன் மட மட வென்று ஒரு குடம் தண்ணீரை ஊற்றினான். உடல் ஓய்ந்தது. காதைப் பிடித்து, தலையை எடுத்துக்கொண்டு பூசாரி கோயிலுக்குள் போய்விட்டான். மருதையா உடலைத் தோளில் போட்டுக்கொண்டு வீடு திரும்பினான். கதறியழும் காளிமுத்துவை வீணில் சமாதானம் செய்து செல்லாயியும் மருதய்யாவுடன் வீடு சேர்ந்தாள்.

காளிமுத்துமட்டும் அழுகையை நிறுத்தவேயில்லை.

சாப்பாடெல்லாம் முடிந்த பின்பு, செல்லாயி மீண்டும் காளிமுத்துவைச் சமாதானப்படுத்த எண்ணி 'எங்கண்ணுல்லே ஏம்பா இப்படி அழுதுக்கிட்டே இருக்கே, வாப்பா கண்ணு!' என்று கூறி அவனை வாரித்தூக்கி மடிமீது வைத்துக் கொண்டாள். உடனே செல்லாயி திடுக்கிட்டாள். காரணம் காளிமுத்துவின் உடம்பு நெருப்பாகக் கொதித்தது குழந்தைக்கு நல்ல சுரம் என்பதை அப்பொழுதுதான் அவள் அறிந்தாள். உடனே அவனைப் படுக்கவைத்து விட்டு, மருதையிடம் சமாசாரத்தைத் தெரிவித்தாள்.

மருதை ஓடோடியும் சென்று வைத்தியனை அழைத்து வந்து காண்பித்தான். அவனும் குழந்தையைப் பார்த்துவிட்டு, 'சாதாரண சுரந்தானுங்க. இந்த சூரணத்தை நாலுவேளை தேனிலே குளைச்சுக் குடுங்க. எல்லாஞ் சரியாய்ப்போயிடும்' என்று சொல்லி சூரணப் பொட்டலங்களைக் கொடுத்துவிட்டுப போய்விட்டான்.

நாள் பத்தாகியும் சுரம் மட்டும் தணியவே இல்லை. பதினொரும் நாள் காளிமுத்துவிற்கு வழக்கத்தைவிட சுரம் அதிகமாக அடித்தது. சுரத்தின் வேகத்தில் காளிமுத்து நினைவு தவறிப் பிதற்ற ஆரம்பித்தான். அவன் பிதற்றலெல்லாம், "எ......ன் ......எ......ன்......ஆ......ட்......டு......க்...... கு......ட்......டி......யை......காண .........ம். அ......தை......க்......கொ......ண்......டா... உம்......உம்........."என்பதுதான். தேம்பித் தேம்பி அழுகை. அவ்வப்பொழுது முன்போலப் பிதற்றல்.

செல்லாயி ஒன்றுந் தோன்றாமல் கையைப் பிசைந்துகொண்டு நின்றாள். அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. மருதையோ குழந்தையின் நிலையைக் கண்டு மலைத்து விட்டான். கை கால்கள் ஓடவில்லை அவனுக்கு.

நாள் மூன்றாகியும் பிதற்றல் ஓயவில்லை. குழந்தையைப் பார்க்கவந்த கிழவி ஒருத்தி, "ஏண்டா! மருதை, குளந்தை கண்ணு மின்னே ஒரு ஆட்டுக் குட்டியனுச்சும் கொண்டாந்து கட்டினு என்ன? அது ஆட்டுக்குட்டி வேணுமின்னுதானே அழுவுது. அதைச் செஞ்சா என்ன உனக்கு?" என்று சொல்லிவிட்டுப் போனாள். மருதையும் ஒரு ஆட்டுக்குட்டியை அவன் படுக்கைக்குப் பக்கத்தில் கொண்டு வந்து கட்டி வைத்தான்.

எதிர்பார்த்ததற்கு நேர் எதிரிடையான பலன்தான் கிட்டியது. பிதற்றலோடு பிடிவாதமும் சேர்ந்து கொண்டுவிட்டது. "இந்த ஆட்டுக்குட்டி வேணும், போ! அந்த ஆட்டுக்குட்டிதான் வேணும் போ!" என்று உரக்கக் கத்த ஆரம்பித்து விட்டான்

காளிமுத்து. 'உடல் இருக்கும் நிலையில் உரக்கப் பிடிவாதத்தோடு கத்த ஆரம்பித்து விட்டானே. இவன் கதி என்ன ஆகுமோ' என்று மருதை அஞ்சினன். ஆட்டுக்குட்டியை உடனே அப்புறப்படுத்தினன். அப்பொழுதும் பலனில்லே. ஓயாத பிதற்றல். இடை யிடையே தேம்பித் தேம்பி அழுகை.

நேர் பதினைந்தாம் நாள். அதாவது மூன்ருவது தை வெள்ளிக்கிழமை. காலை நேரம். "அந்த ஆட்டுக்குட்டி வேணும்" என்ற கடைசிச் சொற்களோடு, காளிமுத்துவின் உயிர் பிரிந்தது. செல்லாயியும் மருதையும் பட்ட துக்கம் கணக்கில்லை; "காளியம்மா, கண்ணைக் கொடுத்துவிட்டு, அதைப் பறிச்சுக்கிட்டயே" என்று செல்லாயி கதறினுள். மருதையோ, "ஏம்மா! இந்த ஏழையை இப்படிச் சோதனை செய்யறே!" என்று முறையிட்டான் காளியம்மனிடம். இருவர் உள்ளமும் துக்கத்தினுல் வெம்பியது. காளிமுத்துவை நினைத்தமாத்திரத்தில் இருவர் கண்களிலும் 'பொல, பொல' வென்று கண்ணீர் வந்து விடும்.

* * *

ஒவ்வொரு வருஷமும் கடைசி தை வெள்ளிக்கிழமைதான் மருளாளி குட்டி குடிப்பது வழக்கம். அந்த வருஷம் மருதையாவினுல் குட்டி குடிக்க முடியாமற்போய்விட்டது. காரணம் காளிமுத்துவின் மரணம்தான் என்பது கூருமலே விளங்கும். அதற்குப் பதிலாக வேறு ஒரு ஊரிலிருந்து மருளாளி ஒருவன் வரவழைக்கப்பட்டான். எல்லாம் நன்ருகவே நடந்தேறின அந்த வருஷம்.

கடைசி தை வெள்ளிக்கிழமையும் வந்தது. காளிமுத்து இல்லாத காரணத்தினுல் வெறிச்சென்று இருந்த வீட்டில் மருதய்யாவுக்கு இருக்கவே பிடிக்கவில்லை. கோயிலுக்குச்சென்று திருவிழாவில் கலந்து கொள்ளலாம் என்ருலோ 'சாவுத்தீண்டல்'. எனவே துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு, சாலைவழியே ஒரு நோக்கமும் இன்றி நடந்து சென்ருன். ஊறெல்லைக் கருகில் ஒரு கூட்டம் கூடியிருந்தது. "என்ன கூட்டம்" என்று ஆவலுடன் சென்று பார்த்தான்.

அக்கூட்டம் 'தென்னிந்திய ஜீவகாருண்ய சபை' யாரால் கூட்டப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு நெடு நேரம் பிடிக்கவில்லை. கூட்டத்தின் நடவடிக்கைகளைக் கண்கொட்டாமல் பார்த்து வந்தான். கூட்டத்தின் நடுவே ஒருமனிதன் நின்று கொண்டு, குரல் பெருக்கி (மெகபோன்) மூலம், "சகோதரர்களே! கடவுளுக்கு உயிர்ப்பலியிடுதல் பாவம்; அதிலும் வாயில்லாச் சீவன்களைப் பலி யிடுவது மகா பாவம். எந்தத் தெய்வமும் ஆட்டை எனக்குப் பலிகொடு, கோழியை எனக்குப் பலி கொடு என்று கேட்பதில்லையே. அப்படி இருக்க நாம் ஏன் 'பலி'யிடவேண்டும்? உயிர்ப்பலி இல்லாத பூசையைக் கடவுள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளுவார்; தேங்காய், பழம் வைத்துப் பூசை செய்து தெய்வத்தைத் திருப்தி செய்யலாம். இன்னும் தெய்வத்தின் பெயரால் தருமம் செய்யலாம். ஏழை எளியவர்களுக்கு அன்னமிடலாம். உடுக்கக் கொடுக்கலாம்; இன்னும் எவ்வளவோ உன்னத வழிகளில் கடவுள் பூசையைச் சிறப்பிக்கலாம்.

"இந்த வழியை யெல்லாம்விட்டு கேவலம் நாம் விலங்குகள்போல் வாயில்லா ஜீவன்களைத் தெய்வத்தின் முன்பே கொன்று குவிக்கிருேம். இது நியாயமாகுமா? நீங்களே சொல்லுங்கள். ஆண்டவன் படைப்பின் ஒரு அம்சந்தானே அவைகளும். அதை அழிக்க நமக்கேது உரிமை? பகுத்தறிவு என்ற ஆருவதுஅறிவு படைத்த நமக்கு இதுதாஞ லட்சணம்? மனிதத் தன்மை என்பது மற்ற உயிர்களை அன்பாக நடத்துதலே; அழிப்பது அல்ல. இதை நன்கு அறியுங்கள்.

"நமக்கு ஒரு சிறிய முள்ளினுல் ஹிம்ஸை ஏற்பட்டு விட்டால் என்ன பாடு படுகிருேம்? துடிக்கிருேம், துள்ளுகிருேம், முள்ளைத் தூற்றுகிருேம். அதைப்போல, பலி யிடப்படும் பொழுது, அந்த ஜீவன்களின் நிலையைச் சற்றேனும் எண்ணிப் பாருங்கள். எப்பேர்ப்பட்ட காரியம் செய்கிருேம் என்பது உங்களுக்கே விளங்கும். இன்னும் கேளுங்கள்; இளங்குட்டியைப் பலிகொடுக்கிறீர்களே? இது நியாயமா? நம் வீட்டில் ஒரு குழந்தை இறந்து விட்டால், நாம் எவ்வளவு துக்கப்படுகிருேம்? வருஷக்கணக்கிலும் துக்கம் கொண்டாடும் பெற்றதாய்களை நாம் பார்த்ததில்லையா? அப்படியிருக்க ஆண்டுதோறும் தன் குட்டிகளில் பாதிக்கு மேற்பட்டதைப் பலிக்காகப் பறிகொடுத்து விடும் ஒரு தாய் ஆட்டின் நிலையை எண்ணிப் பாருங்கள். வாயில்லாமல் ஆண்டவன் அதைப் படைத்துவிட்ட குற்றத்துக்கு நாம் கொடுக்கும் தண்டனையா இது? சீ! மனிதனின் மடமையை என்னவென்று சொல்வது? பக்தியின் பெயரால் பாவம்

செய்வது, பகுத்தறிவு படைத்த மனிதனின் செய்கையாகுமா? ஒருநாளும் இல்லை.

"முடிவாகச் சொல்கிறேன், கேளுங்கள். ஏதோ ஒன்றின் மீதுள்ள பாசத்தால்தான் இன்னொரு உயிரை மோசம் செய்கிறீர்கள், இந்த மோசம் உங்களை இலேசில் விடாது. என்றேனும் ஒருநாள் கண்டிப்பாகத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளும். இதை நன்கு கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள். தன்பெயரால் செய்யப்படும் குற்றத்திற்குத் தெய்வம் தகுந்த தண்டனை கொடுக்கும். இதில் சந்தேகம் வேண்டாம்" என்று உணர்ச்சி ததும்பப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான்.

இப்பிரசங்கம் மருதையாவின் மனதை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. கேட்ட விஷயமெல்லாம் 'அப்பட்டமான உண்மைகள்,' என்பதை அவன் அறிந்துகொண்டான். 'ஏதோ ஒன்றின்மீதுள்ள பாசத்தால் தான் இன்னொரு உயிரை மோசம் செய்கிறீர்கள், இந்த மோசம் உங்களை இலேசில் விடாது, என்றேனும் ஒரு நாள் கண்டிப்பாகத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும்' என்று அவன் கூறியது தன்னைச் சுட்டிக்காட்டிச் சொன்னது போல இருந்தது, மருதையாவுக்கு.

கூட்டம் முடிந்து மருதையா வீடுதிரும்பினான். அவன்மனம் ஏதோ விவரிக்க முடியாத நிலையில் இருந்து கொண்டு தத்தளித்தது. பிரசங்கி கடைசியாகச் சொன்ன விஷயம் மட்டும் அவன் காதுகளில் அடிக்கடி ஒலித்துக்கொண்டேயிருந்ததின் பலனாக அவனுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. தனக்குத்தானே, 'காளிமுத்து ஏன் செத்துப்போனான்னு இப்போல்லத் தெரியுது எனக்கு. அவன் மேலே வச்சிருந்த பாசத்தினாலே அந்த ஆட்டுக்குட்டி உசிரை மோசம் செஞ்சேன் நான். 'அந்த மோசம்' என்னையே மோசம் செஞ்சிடுச்சு. ஆட்டுக் குட்டிக்கும் அந்தப் பயலுக்கும் இருந்த பாசம் அவன் செத்துப்போறதுக்குக் கொஞ்ச நாளைக்கு முன்னாலே தானே எனக்குத் தெரிஞ்சிச்சு. அது தெரியாமே அந்தப் பாசத்தை, நான் துண்டிச்சுப்பிட்டேன். தெய்வம் என்னைச்சரியா தண்டிச்சுப் பிடிச்சு' என்று சொல்லிக்கொண்டான். அவன் உடம்பெல்லாம் புல்லரித்தது.

மருதையா புது மனிதனாகிவிட்டான், அப்பொழுது முதல்.

எப்படியோ பொழுதைக் கழித்துவிட்டு, இரவு படுக்கைக்குச் சென்றான். செல்லாயியோ காளிமுத்துவை நினைத்துக் கதறிக் கொண்டிருந்தாள். அதெல்லாம் அவன் காதுகளில் விழவே இல்லை. ஏக காலத்தில் கணக்கற்ற ஆடுகள் அவன் முன்னால் வந்து நின்றுகொண்டு, தங்கள் குட்டிகளைப் பிரிந்த துக்கம் தாளாமல் 'அம்மே, அம்மே,' என்று அலறின. மருதையா கண்களை இறுக மூடிக்கொண்டான். அப்பொழுதும் அதே காட்சிதான். குப்புறப் படுத்துக் கொண்டான்; முகத்தைமூடிக்கொண்டான்; புரண்டு படுத்துப் பார்த்தான். அப்பொழுதும் அதே காட்சிதான். 'செல்லாயி, செல்லாயி வெளக்கை இங்கிட்டு கொண்டா', என்று கத்தினான். செல்லாயி விளக்கைக் கொண்டு வந்ததும்தான் எல்லாம் தன் மனப் பிரமையினால் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது அவனால்.

சட்டென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, 'குட்டி குடிக்கிற தொளிலை இன்னியோடே ஒளிச்சுத் தலைமுளுகிப்பிட்டேன். அதனாலே எங்குடியே முளுகிப் போனாலும் அக்கரையில்லை', என்று சபதம் செய்தான்.

'என்ன இப்படி ஒளறுரிங்க'

'ஒளறல்லே, நெசம்மாத்தான். நீ போய் வேலையைப் பாரு.'

'அட, சமாசாரத்தை என்னதான்னு சொல்லுங்க.'

'எல்லாம் விடிஞ்சு சொல்றேன். விளக்கை அங்கிட்டுக் கொண்டுபோ, உறங்கணும்'.

செல்லாயி ஒன்றும் புரியாமல் விளக்கை எடுத்துச் சென்றுவிட்டாள். மருதையாவின் பேச்சு அவளுக்கு ஒரு விளங்காத புதிராகவே இருந்தது.

* * *

அடுத்த வருஷம் தை மாதம் ஊரெல்லைக்கருகே ஒரு கூட்டம். தென்னிந்திய ஜீவகாருண்ய சபையாரால் கூட்டப்பட்டது என்று கூறவும் வேண்டுமா? (பழைய மருளாளி), ஜீவகாருண்ய சபையின் புது அங்கத்தினன் மருதையாப் பிள்ளை உணர்ச்சி ததும்ப உயிர்ப்பலியிட வேண்டாம் என்று எல்லாருக்கும் உபதேசம் செய்து கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் செல்லாயி மூங்கில் கழியொன்றில் கட்டப்பட்டிருந்த அட்டை விளம்பரமொன்றைப் பிடித்துக் கொண்டு நின்றாள். விளம்பர அட்டையில், 'தென்னிந்திய ஜீவகாருண்யசபை. வளப்பகுடி கிளை,' என்று தெளிவாக எழுதப் பட்டிருந்தது.

அவ்விருவரின் முயற்சியினால் ஐந்நூறு ஆட்டுக்குட்டிகளுக்கு மேல் உயிர்தப்பின அவ்வருஷம்.

# "தனியொருவனுக்குணவில்லையெனில்"

வே. சாரநாதன்

தனியொருவனுக்கு, யாரேனு மொருவனுக்கு, உணவு இல்லை என்ற நிலை நேர்ந்தால்,—"ஜகத்தினை யழித்திடுவோம்" என்றார் தமிழ் நாட்டுக்கவி. ஜகத்தையே எதிரியாகக் கருதுவோம், ஓர் ஏழைக்கு உணவு,—பணம், நிலம், அணி, செல்வாக்கு அல்ல — உணவு, இல்லை யென்று சொல்வது யார்? உலகத்தை யழிக்கும் கலகத்தை யுண்டாக்குவோம்; அதுவே தகுதி.

"நெஞ்சகத்தின் ஈரமுடைமை" என்றால் இதுவே. கவியின் நெஞ்சம், காருணிகர் நெஞ்சம் இதுவே. ஆனால் என் மட்டில், "தயாசதகம்" என்ற அற்புத ஸ்தோத்திரத்தைப் படித்தவாறே பிச்சைக்காரர்களை விரட்டும் வழக்கமுண்டு. "இந்த ஏழைகள் நம்மோடு எப்போதுமிருக்கிறார்கள், நான் உங்களோடு எப்போதுமா யிருக்கப்போகிறேன். என்னைக் கவனியுங்கள்" என்று ஏசுநாதரே சொல்லி விட்டார்.

"உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
அதனால்,
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே"
(புறநானூறு)

என்று ஏழைகளைப் பணக்காரர்கள் கையிலொப்புவிப்பது புராதனர்களின் பழக்கமாகும்.

"எல்லோருக்கு முணவுண்டு; எல்லோருக்கும் வேலை வேண்டும்; வேலை செய்ய மறுத்தவனுக்குணவு கிடையாது; வேலை செய்யாமல் தின்கிறவன் திருடன். மற்றவர் கையைப் பார்த்து வாழவேண்டுவதில்லை. நீயே வேலையைத் தேடிக்கொள்; உணவையும் உற்பத்தி செய்துகொள்; இந்நிலையில் தனி மனிதன் அரசனாவான்; அவன் சுதந்திரத்தைக் காப்பது சாத்வீக வீரம்; ஆத்ம சுதந்திரம்" என்கிறார் மகாத்மா காந்தி.

பூரண லௌகிகக்கட்சி மற்றொன்றிருக்கிறது. தனி மனிதன் ஒரு நாட்டின் குடிகளிலொருவன். பல்லாயிரக்கணக்கான தனி மனிதர்கள் சேர்ந்த தொகுதி ஒரு நாட்டின் குடிகள்; நாடு அவர்களுக்குச் சொந்தம். ஆகையால் நாட்டின் பொருள்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் சம பாகமாகப் பகுத்து விடப்படாமற் போனாலும், நியாயமாகப் போதிய அளவில் பகுத்து விடப்பட வேண்டும். பகுத்து விடுவது அரசாங்கத்தின் கடமை. ஜனநாயக அரசியலின் மூலமாகவோ ஜனசத்தியே பிறப்பித்த சர்வாதிகாரியினியக்கத்தாலோ, தனிமனிதன் ஒவ்வொருவனுக்கும் நியாயமாகப் போதிய செல்வங்கள் தினசரி வாழ்க்கையில் அளிப்பது கூடும் என்று, இங்கிலாந்தும், செக்கோஸ்லவாகியாவும், ஜெர்மனியும் அவற்றின் உன்னதமான சரித்திர நிலையில், உலகிற்கே நிரூபித்திருக்கின்றன.

சம பாகமாக நாட்டின் பொருள்களைத் தனி மனிதன் ஒவ்வொருவனுக்கும் பகுத்துக் கொடுக்கவேண்டு மென்று நவீன ருஷ்யாவின்பொதுவுடைமையாட்சிக்காரர் பாடுபட்டு வந்தாலும், தனி மனிதனுக்கு ஏனையோருக்குக் குன்றாதபடி பொரு

னுடைமை யுண்டுபண்ண முடியவில்லை. வருமானங்களில் மனிதருக்குள் தராதரம் இன்றும் ருஷ்யாவில் நிலைபெற்றிருக்கிறது. எல்லோருக்கும் சம வருமானம் தேவை யில்லை; ஆனால் எல்லோருக்கும் நித்யமான, அவசியமான பொருள்கள், வசதிகள், இன்பங்கள், வலிமைபயக்கும் சாதனங்கள், கல்வி கேள்விகள் முதலியன அரசாங்கமே தேடிக் கொடுக்க வேண்டும்; சமவளவில் தனி மனிதனுக்குத் தேடிக் கொடுக்கவேண்டும். ஜகத்தினை யழித்தே இப் புதிய ருஷ்ய அரசியலை ஏற்படுத்திய பிறகு, மானிடருக்கின்றியமையாத செல்வப் பொருள்களைத் தனி மனிதனுக்குச் சித்தமாய்க் கிடைக்கும் வண்ணம், ருஷ்யா தேசத்தினர் அருஞ் செயல்களடங்கிய இயக்கங்களைக் கையாண்டு வருகிறார்கள். அரசாங்கமே எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்தும், வியாபாரம் நடத்தியும், தனி மனிதன் ஒவ்வொருவனுக்கும் சமவளவில் வேலைத்திட்டம் போட்டும், ஊதியங்களைக் கவனித்தும், இன்னும் எல்லா வண்ணமும் குடியரசு போக்கியத்தைப் பரிபாலித்தும் இந்தியனைப் போலன்றித் தனி மனிதன் பட்டினிப் பேயின் சிறையாகா வண்ணம், ஆட்சி புரிந்து வருகிறது.

ஆனால் சுயேச்சை குன்றிப் போகலாம்; "சும்மா விருப்பதே சுகம்" என்றிருப்பார் வதைக்கப்படலாம்; அதிகாரிகளின் ஆதிக்கமோங்கலாம். ஆனால் ஒவ்வொரு தனி மனிதன் எங்கேயாவது ஓரிடத்தில் அதிகாரியாவான்; மற்றவரைக் கட்டுப்பாடு செய்யு முரிமையைப் பெறுவான். என் சுதந்திரம் போகலாம்; மற்றவர் சுதந்திரத்தைப் பறிக்கலாமல்லவா? இதுவும் மனிதனுக்கு உவப்பாயிருக்கும்.

சுதந்திரத்தை ஒரு சிறிது பறி கொடுத்தாலொழிய நிர்ணயமான, கட்டாயமான சமபாகப் பொருளாதாரம் தனி மனிதனுக்குக் கிடைக்காது. சுதந்திரத்தை அரசருக்குப் பறி கொடுப்பது இப்பொழுது உலகில் அநேகமாய் நின்றுவிட்டது. ஆனால் செல்வச்செருக்கினரடங்கிய ஓர் கட்சியின் ஆளுகைக்குத் தனி மனிதன் சுதந்திரத்தைப் பறி கொடுப்பது மாபெரும் ஜனநாயக நாடுகளாகிய, இங்கிலாந்திலும், அமெரிக்கா




பாக்யங்களுள்

சிறந்ததும் பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக் கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க் கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால், கூந்தலையோ விதவிதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர் கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கருத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

விலும் சகஜமாயிருக்கிறது. ருஷ்யாவிலோ தனி மனிதனுக்குச் சுதந்திர நிலேவேயில்லே. ஆனல் வாழ்க்கைச் செல்வங்களுக்குரிமை; உணவுக்குரிமை; உழைப்பிற்குரிமை, நாட்டிற்குரிமை, ஜன சக்திவேகத்திற்குரிமை, இவையெல்லாம் அந்நாட்டில் நிலேபெற்றிருக்கின்றன. நாகரிகப்பண்பு என்பது தனிமனிதச் சுதந்திரத்திலேயே காணலாமென்ருலும், உணவும், உடுக்கையும், இருக்கையும், நவீன அறிவின் செழிப்பும், மனித மாட்சியும், தனிமனிதச் சுதந்திரத்தை யிழந்த சாதியார்கள் அனுபவித்திருக்கிருர்கள் என்பதற்கு ஜெர்மனி ஓர் அத்தாட்சியாகும்; ருஷ்யாவும் அத்தாட்சியாகும்.

நம்மிந்தியாவானது இத்தேசங்களே ஒருவாறு அனுசரிக்குமோ என்ற பயம் தனிமனிதச் சுதந்திரதாகமுள்ள அறிவாளிகளுக்குச் சில வருடங்களாக உண்டாயிருந்தது. காந்தி, நேரு போன்ற தலேவர்கள் தனிமனிதச் சுதந்திர வாஞ்சையை வளர்ப்பவர்களாக விருந்தும், பிற்காலத்தில்வரும் தேச மாலுமிகள் சர்வாதிகாரத் துறைமுகத்திற்கே கப்பலேயோட்டி வைப்பார்கள் என்று தோன்றுகிறது. வெகு சில நாட்களுக்கு முன், காந்திஜீயே கூறியதாவது: "தனி மனிதன் தனியாயிருந்தால் முடியாது; சமூகத்திற்கு யக்ஞ்ய பலியாகத் தயாராயிருக்கவேண்டும். கடலிலிருந்து ஒரு சிறு நீர்த்துளி தனிப்பட்டால் ஒரு நன்மையும் பிறப்பிக்காமல் நசித்துவிடும்; சமுத்திரத்திலடங்கிய வொரு பாகமாயிருந்தால் அதற்கும் பெருங்கப்பல் படையைத் தாங்கும் புகழ் சேர்ந்து விடுகிறது."

தனி மனிதன் அடிமையானுலும் வலிமையுள்ள அடிமையாயிருக்க வேண்டும், ருஷ்யனேப் போல், ஜெர்மனியனேப் போல். இது ஒரு தனிக் கல்வியின் பரிணமம் என்றே கூறலாம். ஆனலிதை எதிர்ப்பதற்குத் தனிமனிதச்சுதந்திரத்தைப் பேணியவர்கள் தங்களுயிரையும் தியாகம் செய்வதற்கு முன் வருவார்கள். (ஒருவன் "தனிக்காட்டு ராசா"வாயிருந்தால் அவனுக்குத்தன்னுயிர் வெல்லமாயிருந்தாலுமிருக்கும்) ஆனல் அடிமையை அவன் விருப்பத்திற்கு முரணுகவே விடுவிக்க முயலும் ஜனசக்தியொன்றுமிருக்கிறதல்லவா? வருங்காலத்தில் இச்சக்தியானது தோல்வியுறுமா? பௌதிக ஆராய்ச்சியால் தனி மனிதனின் உணவு சூரியரச்மியைப்போல், காற்றைப் போல், போதியவளவு எளிதாய்க் கிடைக்குமானல், சுதந்திரசக்தியே முன்னேறுவதாகும். அரசாட்சி என்பதே யழியும். மனித சாதி பிறக்கும் பொழுது சுயேச்சையுண்டு; மனிதசாதி யிறந்து விடாமற் போனல் மறுபடியும் அறிவினலேயே இப்பூரண சுயேச்சை நிலேயைக் கைப்பற்றியே தீரும்.

"எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறி யக்காற்றில் விரைவோடு நீந்துவை
மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வானெலி யென்னு மதுவின் சுவையுண்டு"

என்ற கவியின் தீர்க்கதரிசனம் பலிக்கும். இந்நிலேமையை மானிடர் அடையும் மட்டும் தனிமனிதன் சமூகத்திற்குத் தொண்டு செய்யும் அடிமையாகவும், அரசாங்கம் தனிமனிதனுக்குத் தாரகமாகவுமேயிருக்க வேண்டும்.

---


## காவேரி ஏஜண்டுகள்:

பூனு
N. S. குல்கார்னி
307. சோம்வள்பேட்
பூனு—2

டில்லி
K. P. அனந்தன்
19-E மிண்டோரோடு வெஸ்ட்
நியூ டெல்ஹி

## பொன்மலேக்கு ஏஜண்ட் தேவை

# திலோத்தமையின் சமூகசேவை

★

ரா. வேங்கடாசலம்

நான் எம். ஏ. பாஸ் செய்தவுடனே பெரியஇடத்துக் கனவான்கள் எங்கள்வீட்டிற்குத்தேடிவரலானார்கள். எங்கள் குடும்பத்துப் பூர்விக ஆஸ்தியும், ரொக்கப் பணமும் ஓரளவிற்குச் சுமாராக இருந்ததால் என் மதிப்பு கல்யாணச் சந்தையில் உச்ச நிலையை யடைந்தது. ஏதோ படிப்பில்தான் உயர்ந்தேனே தவிர, உலக வழக்கத்திற்குப் பொருத்தம் இல்லாதவனாக, என்னைப் பெற்றோர்கள் எவ்விதம் வளர்த்தார்களோ அதன் பிரகாரமே சுபாவியாக இருந்தேன். என் மனது இலக்கியச் சுவையில்தான் சதா லயித்திருந்ததே தவிர, சமூகச் சீர்திருத்தம், அரசியல், பந்தய விளையாட்டு முதலியவைகளில் சிறிதும் ஈடுபடவில்லை.

எனது தகப்பனார் சீர்திருத்தவாதி; தாயாரோ பழமை விரும்பி. எனவே சதிபதிகளுக்குள் வீட்டு விவகாரங்கள் எதிலும் ஒருமனப்பட்ட அபிப்பிராயமே கிடையாது. எந்த அற்ப விஷயங்களிலும் கூட இருவரும் கலவரம் செய்து, திருவுளச் சீட்டுப்போட்டுக் கிடைக்கும் தீர்ப்பிற்குத்தான் கட்டுப்படுவார்கள்.

எனக்குக் கல்யாணப் பேச்சு நடக்கும் சமயங்களில் எங்கள் வீட்டில் எவ்வித ரகளை ஏற்பட்டிருக்கும் என்பதை ஊகித்துப் பாருங்கள். ஐயாயிரம் ரூபாய் வரதட்சிணையுடன், பி. ஏ. பாஸ் செய்த பெண்ணைத் தருகிறேன் என்று பிங்களநேச முதலியார் என்ற தனவந்தர் பேச்சுக் கொடுத்த உடனே, என் தகப்பனார் அதிசீக்கிரம் விவாகத்தை முடித்துவிட வேண்டும் என்று எண்ணினார்; ஆனால் சுத்த நாட்டுப்புறமான தாயார் தனக்கு அடங்கி நடக்கக்கூடிய ஆங்கிலமே கற்றறியாத அழகிய பெண்ணை எனக்கு மனைவியாக்கப் பார்த்தாள். இருவருக்கும் தர்க்கம் வலுத்து அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டனவேயொழிய ஒருவராவது எனது அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பவில்லை. முடிவில் தகப்பனார் கட்சியே வெற்றி பெற்றது.

பெண்ணின் தகப்பனார் அவள் விருப்பத்திற்கு மாறாக ஏராளமான பொருட்செலவில் பந்தல், வாண வேடிக்கை, உயர்ந்த தாசியின் சதிர், நல்ல மேளம் ஆகியவற்றுடன்கூடிய பட்டணப் பிரவேசம் முதலியவைகளுக்காகப் பணத்தை வாரிவிட்டார். ஆனால் முகூர்த்த தினத்தில் நடந்த ரகளையைப் பார்த்த பொழுது இன்னும் ஏழுஜன்மங்கள் பிரமசாரியாகவே இருந்துவிடுவது நல்லது என்ற எண்ணம் உதித்தது.

பி. ஏ. பாஸ் செய்த திலோத்தமை தனது கழுத்தில் தாலிச்சரடு சுற்றப்படுவதை ஒரு பெரும் கேவலமாக நினைத்து விட்டதே அன்றைய அமர்க்களத்திற்குக் காரணம். கவர்ச்சியற்ற ஆவுடை நாச்சி என்ற பெயரை காலேஜ் வகுப்பில் காலடி வைத்த நாளிலேயே திலோத்தமை என்று மாற்றிக் கொண்ட நவீன நாகரிக மோகினி, "ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானம்" என்ற கொள்கை உள்ள சீர்திருத்தக்காரி, தாலியை அடிமைச் சின்னமாக மதித்து, அணிந்து கொள்ள மறுத்ததை, ஓர் அபசகுனமாக எண்ணி என் தாயார் ஓர் மூலையில் உட்கார்ந்து கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள். கடைசியில் மாலை மாற்றும் வைபவத்துடன்தான் கல்யாண முகூர்த்தம் நிறைவேறிற்று.

பெயருக்கு ஏற்றவாறு அவள் திலோத்தமைதான். அவளுடைய கறுத்துச் சுருண்டு நீண்ட கூந்தல், வில் போன்ற நெற்றி, ஆளை விழுங்கும் கண்கள், மூங்கில் தண்டு போன்று நீண்டு வளர்ந்த கைகள் — அப்பா — சொக்கியே போய் விட்டேன்.

அவள் பலவிஷயங்களில் புதுமையாகவும், ஒரு விஷயத்தில் மாறுதலாகவும் இருந்ததைக் கண்டு நான் ஆச்சர்யம் அடைந்தேன்.

ஒருநாள் அவள் சொன்னாள் : "புருஷோத்தமரே—(இது என்ன, புருஷன் பெயரையே சொல்லிக் கூப்பிட்டாளா என்று

நீங்கள் சந்தேகப்பட வேண்டாம் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்கிறேன்)— நீங்கள் பெயருக்கு ஏற்றவாறு சிறந்தவர் தான் என்றாள்."

எம். ஏ. பாஸ் செய்த உடனே சென்னை சர்வகலா சாலையார் கொடுத்த பட்டத்தைக் கவர்னரின் கைப்பட பெற்றுக்கொண்ட அந்த வேளையில்கூட யாதொரு பரபரப்பும் உண்டாகவில்லை. ஆனால், ஒரு மனைவியின் வாய்மொழியாகக் கிடைத்த இந்தப் 'பாராட்டுதல்' என் நெஞ்சிலே ஒரு புயல் காற்றையே எழுப்பி வைத்து விட்டது.

'ஏன் என்னைப் பார்த்து இவ்விதம் சொல்கிறாய்,' என்றேன்.

'பாராட்டாமல் எவ்விதம் இருக்க முடியும்? கைகளில் தங்கக்காப்புகள், காதுகளில் கம்மல்கள், கழுத்தில் தங்கச் சங்கிலிகள், மூக்குத்தி முதலியனவும் அணிந்து அழகு செய்துகொள்ளாத, ஒரு இளமனைவியைப் பார்த்து, கலியாணமாகி இன்று வரையும், என்றாவது, ஏன் என்று கேட்டீர்களா?' என்றாள்.

'அதனால் என்ன? நீ உன்னை அழகிய நகைகளால் அழகு செய்து கொள்ளா விட்டால் போகிறது. என்னைப்பார்! வலதுகையில் தங்கச்சங்கிலி, இடது கையில் தங்கக் கெடியாரம், காதுகளில் வைரக்கடுக்கன்கள், கைவிரல்களில் தங்க மோதிரங்கள்,' என்று எனது அலங்காரத்தை வர்ணிக்கத் தொடங்கினேன். குறும்புத்தனமாகப் பேசுவதில் நான் நல்ல மனோதர்மம் உடையவனாக இருந்தேன்.

என் பேச்சைக் கேட்டவுடன் 'ச்ச்ச்' என்று காதுகளைப் பொத்திக் கொண்டாள். மேலும் பேசலானாள்: "உங்கள் உடலில் அலங்காரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் உணர்ச்சியில் விறுவிறுப்பு இல்லை. இது எனக்குப் பிடிக்கவில்லை," என்றாள்.

"ஓ, கோ! அப்படியானால் எது பிடிக்கிறது?" என்றேன்.

"பாருங்கள்! நமது நாட்டில் கோடிக் கணக்கான ஏழைகள் ஒரு வேளைச் சாப்பாட்டிற்கும் வழியின்றி, உடுக்கக் கந்தைத் துணியும் இன்றிக் கஷ்டப்படும்



பொழுது படித்தவர்கள் பார்த்துக் கொண்டு கல்லுருவம் போலச் சும்மாவிருப்பதா? அவர்களது நிலைமையை உயர்த்த வேண்டாமா? தேசத்தின் விடுதலைக்குப் பாடுபடவேண்டாமா? இந்த அலங்காரங்கள் வேண்டாம். புனிதமான கதர் கட்டுங்கள்'' என்று என் எதிரில் என் ஒருவனுக்காக ஆவேசப் பிரசங்கம் ஒன்றைச்செய்து முடித்தாள்.

எனது மனதிற்குள் என்ன உணர்ச்சி உண்டென்பது அவளுக்குத் தெரியாது. ஆனால் எனக்கு உள்ளூரத் தேசபக்தி உண்டென்பதற்குப் போதுமான சாக்ஷியங்களை அறிந்திருந்தாள். ஆனால் அவள் சம்பந்தப்பட்ட கட்சியின் சின்னத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனதினால் என்தேச பக்தியை நான்கு பேர்களின் முன்னிலையில் ஒப்புக்கொள்ள மறுத்து விட்டாள்.

அடிக்கடி அவள் காங்கிரஸ் கொடியின் கீழ் நின்று ஆக்ரோஷமான பிரசங்கங்கள் புரியலானாள். அவளுடைய தேச ஆவேசக் காரியங்களில் நான் தலையிட விரும்பவில்லை. சில நாட்களில் பத்திரிகைகளில் ஒரு பரபரப்புக் காணப்பட்டது. 'தமிழ் நாட்டின் ஜான்ஸிபாய் தோன்றி விட்டாள்,' தமிழ்ப் பெண்டிர் குழாத்தின் வீராங்கனை கிளம்பிவிட்டாள். இனி வெள்ளைக்காரர்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு கப்பல் ஏறிவிட வேண்டியது தான்' என்று முழங்கின.

நான் சுபாவத்தில் 'புத்தகப் புழுத்தான்,' ஆங்கிலத்திலும், தமிழிலும் புதிதாக வெளிவரும் கதை, கவிதை நூல்களைக் கட்டாயம் வாங்கிப் படித்துத் தீர்த்து விடுவது என் வழக்கம். இதை என் மீது பொறாமைப்படும் சத்துருக்களும் கூட மறுக்க மாட்டார்கள்.

எங்கள் ஜில்லாவில் என் மனைவியின் தேசபக்தி காட்டுத்தீப் போல் பரவிவிட்டது. பலவிடங்களிலிருந்தும் பிரசங்கங்கள் புரியவேண்டும் என்ற அழைப்புக் கடிதங்கள் மட்டும் தபால்காரன் பையில் பாதிக்குமேல் நிரம்பின. இலக்கியக் கூட்டங்களில்கூடத்தலைமை வகிக்க அழைக்கப் பட்டாள்; ஆனதினால் எனது உதவி அவளுக்கு அவசியமாகி விட்டது.

ஆனால் கதர்கட்டாத, தேசபக்தியில்லாத கணவனுடன் எவ்வாறு வெளிக்கிளம்புவது என்ற கவலை அவளை வாட்டத் தொடங்கிற்று.

அவள் சொன்னாள்: ''கதர் கட்டாத உங்களுடன் வெளிக்கிளம்பவே அவமானமாக இருக்கிறது. தயவுசெய்து எனக்காகவாவது கதர் கட்டுங்கள்'' என்று வற்புறுத்தலானாள்.

ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் சின்னமாக விளங்கும் ஆடைகளை அணிய நான் விரும்பவில்லை; ஆனதினால் என் தீர்மானத்தில் உறுதியாகவேயிருந்தேன்.

திலோத்தமையின் தேசபக்தி காட்டாற்று வெள்ளம் போன்றது. அது அமோக வேகமுடன் பெருகுகின்றதேதவிர, அமைதி, ஆழம், உறுதி ஆகிய அம்சங்கள் இல்லை. உணர்ச்சி அதிகமாக இருப்பவர்கள், சரியான மனப்பக்குவம் இல்லாமல் தியாகஞ் செய்ய முற்படும்பொழுது பயனற்ற தோல்வியையடைந்து விடுகிறார்கள். யாரிடத்தில் கௌரதையும், புகழும் அடைந்து மேன்மை பெற்றார்களோ, அவர்களது முன்னிலையிலேயே நொறுங்கி அவலமாகி விடுகிறார்கள். திலோத்தமையும் இவ்வாறு ஆகிவிடுவாள் என்று நான் எண்ணியதேயில்லை.

படிப்படியாகத் திலோத்தமையின் தேசபக்தி 'கால் மார்க்ஸ்,' கொள்கையில் திரும்பிற்று. நாட்டில் ஆறில் ஒரு பங்கினராயிருக்கும் 'ஹரிஜனங்களை,' முன்னேற்ற வேண்டும் என்றும், பஞ்சாலைகளில் வெகு நேரம் பாடுபட்டுச் சோற்றுக்கின்றித் தவிக்கும் தொழிலாளிகளின் வாழ்க்கை நிலை உயர்த்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கலானாள். அவள் கண்முன்பு ஏகாதிபத்ய வாதிகளும், முதலாளிவர்க்கத்தினரும், ராட்சச அம்சமாகக், காட்சி கொடுத்தனர்.

'மனிதர்கள் யாவரும் சரிநிகர் சமானம், ஏற்றத்தாழ்வு கவனிப்பது பாவம், அனேகம் மனிதர்களை, சொற்பக்கூலி கொடுத்து உழைக்கச் செய்து, ஏராளமான பொருள் ஈட்டிக் கொழுக்கும் முதலாளி, 'சமூக அரக்கன்' என்று பிரசாரஞ் செய்து வந்தாள். தான் இறந்து போவதற்கு முன்பு ஒரு தடவையாகிலும் மாஸ்கோ சென்று வந்தால் தனதுஜன்மமே சாபல்யமாகி விடும் என்று தீர்மானித்து விட்டாள் என்று கூடச் சொல்வேன். கஷ்டப்படும் ஏழைகட்கு உதவி செய்வதே உயர்ந்த சேவை என்பது திலோத்தமையின் முடிவு.

உண்மையில் ஜாதிபேதம் பார்ப்பதில் எனக்கு நம்பிக்கைகிடையாது. ஆதித் திராவிடர்களுடன் உட்கார்ந்து சமபந்தி போஜனம் செய்வதிலோ, அவர்களுக்கு

ஆலயப்பிரவேச உரிமை வழங்குவதிலோ நான் வெறுப்புக் கொள்பவன் அல்ல. ஆனால் என் மனைவி என்னை ஜாதி ஆசாரம் கவனிக்கும் 'வைதிகனாகவே.' மதித்து, என் எதிரிலேயே வசைபாட ஆரம்பித்தாள். நான் என் சுபாவப்படி பதில் கூறவில்லை.

ஒருநாள் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. அன்றைய தினம் காலையில், தூங்கி எழுந்திருக்கும்பொழுது என்ன அபசகுனத்தைக் கண்டாளோ தெரியாது. என்னிடம் தனது சமூக சேவை சம்பந்தமான பேச்சை யெடுப்பதற்குத் தகுதியற்ற வளாகத் தாழ்மை யடைந்துவிட்டாள்.

நான் அன்றைத் தினம் எனது 'ஆஸ்டின்' காரை ஒட்டிக்கொண்டு, திலோத்தமையுடன் கிளப்பிற்கு விரைந்துகொண்டிருந்தேன். அப்பொழுது எங்கள் தெருவில் நகரசுத்தி செய்யும் கீழ்ச் சாதியான தோட்டி ஒருவன் தன் குடும்பத்தாருடன் ஒரு அம்மன் கோவிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் சமயம். நன்றாகக் குளித்துச் சுத்தம் செய்து நெற்றியில் திருநீறும், குங்குமப் பொட்டும், மார்பில் சந்தனப் பூச்சுமாகக் காட்சி கொடுத்தான். அவன் மனைவி அழும் குழந்தையுடன் பின்னால் வந்தாள். அப்பொழுது ஒரு குடிகார ஜட்கா வண்டிக்காரன் கண்மூடித்தனமாக வண்டி ஓட்டிக்கொண்டு வந்தான். வண்டி தோட்டியின் மீது மோதிவிட்டது. ஜன நெருக்கம் கூடிவிட்டது. வண்டிக்காரன் சற்றுக்கூட நிற்காமல், போலீஸ்காரன் வருகைக்குப் பயந்து வேகமாக அகன்று விட்டான். தோட்டி பிரக்ஞையற்றுக் கிடக்கிறான். அவன் மனைவி கண்ணீர் உகுத்துக் கதறுகிறாள்.

கீழே விழுந்தவன் உள்ளூர் தோட்டியான காரணத்தினால், யாவரும் அவனை அறிவார்கள்; ஆதலால் சுற்றி நின்ற மேல்ஜாதியார்கள் எவரும் உதவி செய்யத் துணியவில்லை. 'ஐயோ! பாவம்' என்று மட்டும் சொல்லிக்கொண்டார்கள்,

இந்த நேரத்தில் எனது கார் அக்கூட்டத்தின் அருகே நெருங்கிற்று. ஒரு மனிதன் படுகாயங்களுடன் ஆதரவற்று அவஸ்தைப் படுகிறான். அவன் மனைவி பக்கத்தில் அழுது துடிக்கிறாள்.

அந்தக் காட்சி மிகவும் பரிதாபமாக இருந்தது. உடனே காரை விட்டு இறங்கி அவனிடம் நெருங்கினேன். சட்டென்று அவனைத் தூக்கி, காரினுள் படுக்க வைத்தேன். என் மனைவிக்கு, நாடறிந்த ஏழைபங்காளிக்கு, இச்செய்கை பிடிக்கவில்லை.

'என்ன இது, தோட்டியை நமது காரில் ஏற்றுகிறீர்களே? கொஞ்சங்கூட சுசிருசி இல்லையே!' என்றாள்.

'அவன் குளித்துச் சுத்தமாகத் தானே இருக்கிறான்,' என்றேன்.

'இருந்தாலும் அவன் தோட்டி. கீழே தள்ளி ஏதாவது வாடகை வண்டியமர்த்தி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சேருங்கள்', என்றாள்.

'உன் செய்கை நன்றாயிருக்கிறது! அதற்குள் அவன்செத்துப் போய்விட்டால்?,' என்றேன்.

'அதனால் உங்களுக்கு என்ன நஷ்டம்?' என்றாள்.

'அதெல்லாம் முடியாது, நான் அவனுக்கு உதவியே செய்வேன்'

'அப்படியானால், நான் காரைவிட்டு இறங்கிப் போகிறேன். ஒரு தோட்டியுடன் காரில் இருக்கமுடியாது,' என்றாள்.

'சரி, போ! என்று சொல்லிவிட்டுத் தோட்டியை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தேன். அவன் செலவிற்கும் எனது இரு மோதிரங்களைக் கழற்றி அவன் மனைவியின் கையில் கொடுத்தேன்.

அன்றைய தினத்திலிருந்து, இன்று வரையில் ('அந்த ஏழைபங்காளி)—என் மனைவிதான்,—தன் சமூக சேவையைப் பற்றி என்னிடம் வாயே திறப்பதில்லை.

# போத சத்துவம்

கௌரி

மகத சாம்ராஜ்யத்தில் வெற்றிக் கொடியை நாட்டிய வீர அசோக சக்ரவர்த்தியைச் சுமந்து கொண்டு காற்றைப்போலப் பறந்து சென்றுகொண்டிருந்தது "பாடலீபுத்திரம்" என்ற புரவி. வெண்ணிறம் படர்ந்த உடலிலே கறுப்பு நெற்றிச் சுட்டியுடன் அப்புரவி வாயிலே நுரை ததும்ப, வெகுதூரத்திலிருந்து வருகின்றது என்பது விளங்கியது. பாடலிபுத்திரத்தைக் கடந்து எல்லைப் புறத்துக் கிராமத்தின் வழியே வந்து கொண்டிருந்தது. அரசன் வேட்டையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த சமயம், நல்ல வெயில் காய்ந்து கொண்டிருந்தது. அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே வந்து கொண்டிருந்த அரசன் புரவியைச் சற்று நிறுத்தினான். அவன் வந்த வழியிலே வெகு தூரம் வரையிலும் மண்ணும் தும்பும் ஆகாயத்தை அளாவிக்கொண்டிருந்தன. பின்னால் குதிரை வருவதும் வராததும் தெரியவில்லை. சுற்று முற்றிலும் பார்த்தான். சிறிது தூரத்தில் இரண்டு மூன்று குடிசைகள் காணப்பட்டன. தாகமும் அதிகமாக இருந்தது. குதிரையினின்று இறங்கி அதைத் தட்டிக் கொடுத்தான். ஓரமாகப் படர்ந்திருந்த புல்லின் மேல் சற்று நிழலாற எண்ணிச் சாய்ந்து கொண்டான்.

குளிர்ந்த காற்று அடிக்கடி அலைமோதுவதுபோல் வீசியதால் தண்ணீர் எவ்விடத்திலோ அருகிலேயே இருக்கவேண்டும் என்று நினைத்தான் சக்ரவர்த்தி. ஒரு புறம் மரங்கள் அடர்ந்த சோலை ஒன்று தென்பட்டது. அசோகனுக்கு எழுந்து போகலாம் என்று தோன்றினாலும் களைப்பு அதிகமாக இருந்தது. அடிக்கடி தான் வந்த வழியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இவ்வளவு நேரமாயிற்று, அவர்களை அனுப்பி விட்டுவா என்றால் இவ்வளவு நேரமா? ஒருவேளை நான்வந்த வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லையோ அவனால்?" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். அரசன்படும் கவலையை அறிந்ததுபோல் மேய்ந்து கொண்டிருந்த "பாடலி"கூட வழியைப் பார்த்தது. "ஆகாயத்திற்கும் பூமிக்குமாய் எழும்பிக் கிடக்கும் புழுதியைப் பார்த்துக் கூடவா தெரிந்து கொள்ளமாட்டான்?" என்று எண்ணியவாறு அரசன் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

கணப்பொழுதுக்குள் அவ்விடத்தை நோக்கி யாரோ வருவது தென்பட்டது. அரசன் உற்று நோக்கினான். இளம் நங்கை ஒருத்தி கையில் மூங்கில்தட்டு ஒன்றுடன் வருவது தெரிந்தது. அரசன் படுத்திருப்பதைப் பார்த்து அவளும் தயங்கவில்லை. அவள்நடை வேகமாயும் ஆண்பிள்ளைக்கு ஒத்த கம்பீரத்துடனும் இருந்தது. காற்றில் அலையும் கரும் கூந்தலுடன் அழகிய அவளுடையமுகம் கூர்மையான அவளுடைய புத்தியை நன்கு எடுத்துக் காட்டியது. தனிமையான அப்பிரதேசத்தில் சஞ்சரிக்கக்கூடிய ஆண்மை அவளிடம் குடிகொண்டிருந்தாலும் அருகில் நெருங்கியதும் பெண்மையின் பூரணப் பொலிவு அவளிடம் பொங்கி எழுந்தது! ஒருகணம் அரசனை உற்றுப் பார்த்தாள். போர்த்திருந்த மெல்லிய ஆடையைச் சரிப்படுத்திக்கொண்டு முன் நடந்தாள்.

வருபவள் ஒரு பெண் என்று அறிந்ததும் அரசன் எழுந்து உட்கார்ந்தான். தன்னைப் பார்த்ததும் அவள் அவ்விடமே நின்றுவிடுவாள் என்று நினைத்தான். ஆனால் அவள் விரைந்து வருவதைக்கண்டதும் பெண்ணைப் போல் நாணமடைந்தான் அசோக சக்ரவர்த்தி! ஆடையில் படிந்த தூசியைத் தட்டிக்கொண்டு "பாடலீயை" நெருங்கி நின்றான்.

கையில் இருந்த மூங்கில்தட்டைக் கீழே வைத்து விட்டு "வந்தனம் அரசே" என்றாள் அப்பெண். குவியும் தாமரைபோல் அவளுடைய சிவந்த இளங்கரங்கள் குவிந்தன.

அசோக மன்னன் சற்றுநேரம் மௌனமாய் இருந்தான். ராஜாதிராஜன்! மகத தேசத்துச் சக்ரவர்த்தி! இவ்வளவு தைர்யமாய்! சகஜமாய் யார் பேசுவார்கள் அவனுடன்? யாருக்கு உண்டு இவ்வளவு துணிச்சல்? மன்னனே சற்றுத் திகைத்து விட்டான். அதுவும் ஒரு பெண் பிள்ளையைக் கண்டு அச்சம்கொண்டான். அரசன் என்ற முறையில் வந்தனமளிக்கவும் பிடிக்கவில்லை.

"என் நண்பனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன், அதோ வருகிறான் போல் இருக்கிறது" என்று வழியைப் பார்த்தான் அரசன்.

அவள் விடுவதாக இல்லை. "ஆமாம், நீர் மகத மன்னன் அசோக சக்ரவர்த்தி தானே?" என்றாள். மன்னனுக்கு உடல் சிலிர்த்தது.

"என்ன முரட்டுத் தைர்யம்? இந்தக் காட்டு ஜனங்களுக்கே இவ்வளவுதான். எள்ளளவும் நாகரிகம் கிடையாது." என்று எண்ணிக் கொண்டு,

"நீயார்? இந்தக் காட்டில் வசிப்பவளா?" என்றான்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? யாராய் இருந்தால் என்ன? களைத்து இருக்கிறீர்கள் என்று தோன்றுகிறதே! கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொள்ளுகிறீர்களா? அதோ எங்கள் வீடு இருக்கிறது" என்று அச்சோலையைக் காட்டினாள் அவள்.

"வேண்டாம், தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர்தான் வேண்டும். இவ்விடம் எங்கேயாவது அருகில் இருந்தால் நானே சென்று அருந்தி வருகிறேன். நீங்கள் சிரமப்பட வேண்டாம்" என்றான் மன்னன்.

"அசோக சக்ரவர்த்தி தாமே தண்ணீர் எடுத்து அருந்துவாரோ" என்றாள் அப்பெண் குறும்பாக.

அசோகனுக்கு என்ன கூறுவதென்று தோன்றவில்லை.

"சக்ரவர்த்தி என்றால் கொம்பு முளைத்திருக்குமா என்ன?" என்றான்.

'அசோக சக்ரவர்த்தியல்லவா?"

அரசன் சிரித்தான்.

தட்டில் வைத்திருந்த பழுத்த கொய்யாப்பழங்களில் இரண்டை எடுத்து அரசனிடம் நீட்டினாள் அவள்,

"எங்கள் மரத்து அருமையான இனிய கனிகள், உண்டுபாருங்கள். புத்தபிரான் கூட உண்டு களித்த பழங்கள். கீர்த்தி வாய்ந்த அசோகரல்லவா?" என்றாள் அவள் மறுபடியும்.

"புத்தபிரானா?" என்றான் அரசன் ஆச்சரியத்துடன்.

"ஏன் அவ்வளவு ஆச்சரியம்? புத்தபிரான் எங்களைப் போன்றவர்கள் வீட்டிற்கு வரமாட்டார் என்று பார்க்கிறீர்களா? அவர் கொடுத்துப்போன ஞாபகச் சின்னம்கூட எங்களிடத்தில் இருக்கிறது. உங்களைப்போல் அவர் ஒன்றும் பராமுகமாய் இருக்க மாட்டார். வாருங்கள் என்னுடன். கனிகளையும் உண்டு தாகத்தைத் தீர்த்துக்கொண்டு சிறிது நேரம் எங்கள் சோலையில் களைப்பாறி வரலாம்" என்றாள் அப்பெண்.

அரசனின் உள்ளம் குழம்பியது. படைக்கும், போருக்கும் அஞ்சாத நெஞ்சம் சற்றே கலங்கி நின்றது. புத்தபிரானாவது! இவர்கள் வீட்டிற்கு வந்தார் என்றால்! இதன் மர்மத்தை அசோகனால் எவ்விதத்திலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள்விட மாட்டாள்போல் இருக்கிறது. சோலை என்றால் என்ன வென்று கண்டுகொள்வது? செல்லுவதா? மறுத்து விடுவதா? என்று அரசனால் தீர்மானத்திற்கு வரமுடியவில்லை. "பாடலீ"யை என்ன செய்வது? என்று எண்ணியவாறே அதன் பக்கம் திரும்பினான்.

அதற்குள், "ஏன் உங்கள் குதிரையைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களா? கவலைப்பட வேண்டாம்; நான் அழைத்து வந்து விடுகிறேன்; இதுதானா பிரமாத யோசனை?" என்று கூறிக்கொண்டே "பாடலீ"யை ஒரு தட்டுத்தட்டி அழைத்துக் கொண்டாள்.

"உம்......வாருங்கள் போகலாம். இன்னமுமா யோசனை?" என்று முன்னால் நடந்தாள்.

இதென்ன விபரீதம்! அரசனால் தட்ட முடியவில்லை. இச்சமயத்தில் "சாருகேசி" வந்துவிடமாட்டானா?" என்று பார்த்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும்

ஒருவரையும் காணவில்லை. மௌனமாய் அப்பெண்ணுடன் நடந்தான்.

'குளு, குளு' வென்று இன்னிசை நிறைந்த கீதங்களுடன் கொடிகளடர்ந்த மரங்கள் அசைந்து கொண்டிருந்தன. நடுவிலே சிறிய லதா கிரகம் ஒன்று தென்பட்டது. அதன் அருகில் "பாடலீயை" விட்டு விட்டு, "இதோ பாருங்கள், இதுதான் நான் கூறியது; அவருடைய ஞாபகார்த்தமாக என் பாட்டி இதைக் கட்டி வைத்தாள்" என்றாள் அப்பெண் மின்னொளி பறக்கும் கண்களுடன். ஆகா! அவளுடைய முகத்தில்தான் என்ன களை! அரசன் ஒரு கணம் அப்படியே அயர்ந்துவிட்டான். அவள் மளமள வென்று முன்னால் நடந்தாள், லதா கிரகத்தில் புகுந்து. வண்டு மொய்த்திடும் பல நிறப் பூக்களுடன் அடர்ந்து படர்ந்த அவ்விடத்தைக்கண்டு "அரண்மனையில்கூட இவ்வளவு அழகாய் இல்லையே!" என்று அம்மனோஹரக் காட்சியைச் சிறிது பருகிக் கொண்டிருந்தான் அரசன்.

கொஞ்சம் முன்னால் நடந்த அப்பெண்மணி "ஏன்? உங்கள் உத்தியான வனத்தைப்போல் இல்லையே என்று பார்க்கிறீர்களா?" என்றாள் நான்கடி திரும்பிவந்து.

"அரண்மனை உத்தியான வனத்திற்கு இப்பூங்காவின் அழகு சிறிதும் இல்லையே என்றுதான் பார்க்கிறேன்" என்றான் அசோகன்.

"ஏழைகளின் பூங்கா" என்று பரிகாசமாய்ச் சிரித்துக்கொண்டே முன் நடந்தாள் அவள்.

பூங்காவிற்குப் பிறகு பாதை ஒன்று சென்றது. இரு புறங்களிலும் கிளி கொஞ்சும் சோலையும் பழங்களடர்ந்த விருக்ஷங்களும் மனதைப் பரவசப்படுத்தின. இப்பாதை இரண்டு மூன்றாகப் பிரியும் இடத்தில் ஓர் ஆசிரமம் தென்பட்டது. அதன் உள் நுழையும்பொழுதே 'பாட்டீ, நம் வீட்டிற்கு அசோக சக்ரவர்த்தி வந்திருக்கிறார்" என்று சத்தம் போட்டாள் அப்பெண்.

இக் குரலைக் கேட்டதும் உள்ளிருந்து ஒரு கிழவி வெளியே வந்தாள். சுமார் நூறு வயதுகூட மதிக்கலாம். தும்பைப் பூவை ஒத்த அவள் கேசத்தையும் சுருங்கிக் குறுகிய தேகத்தையும் பார்க்கும்பொழுது சபரியை வர்ணிக்கும் ஞாபகம் வந்தது. அரசனைக் கண்ட அவள் "வந்தனம் மகிபனே, உங்கள் வரவினால் நாங்கள் புனிதமடைந்தோம். தயவுசெய்து உட்கார வேண்டும்." என்றாள்.

தரையில் மான் தோலினால் அமைக்கப்பெற்ற திண்டில் அமர்ந்தனன் அசோகன்.

ஆசிரமமென்றால் உண்மையில் அது தபஸ்விகள் வசிக்குமிடம் என்றே தோன்றியது.

மத்தியில் அழகிய சிலை ஒன்று வைத்திருந்தது.

ராஜ லக்ஷணங்கள் சகலமும் அடங்கிய அதைப் பார்த்துக் கொண்டிருந்தான் அசோகன்.

"அதுதான் என் அருமை மகன் செதுக்கிய சிலை. மகான் புத்தருடையது. அவனுடைய வேலை அபாரமானது" என்று கிழவி முடிப்பதற்குள் ஒரு கலயத்தில் நல்ல மணம் வீசும் மோர் நீரும், மறுபடியும் கனிந்த கொய்யாப் பழங்கள் ஓர் தட்டிலும் எடுத்துவந்து வைத்தாள் அச்சிறுமி. "அதற்குள் இவள் என்பேத்தி. இருக்க வேண்டியவர்கள் உலகத்தை வெறுத்துவிட்டார்கள். நான் இருக்கிறேன் இன்னம்" என்றாள் கிழவி. துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

அரசன் பேச்சை மாற்றினான்.

"இச் சிலையைப் பார்த்தால் ஸித்தார்த்தர் என்று எப்படி நினைக்க முடியும்?" என்றான்.

"அம்மகான் கபில வாஸ்துவை விட்டுக் கிளம்பிப் போகும் சமயம் ஓர் இரவு எங்களுடன் வந்து தங்கினார். அருமையான உபதேச மொழிகளையும் அமுதாய்ப் பொழிந்து கழுத்தில் அணிந்திருந்த முத்து ஹாரத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டுப் போனார்.

'பிரபாவதி! அம்மாலையைச் சக்ரவர்த்திக்குக் கொண்டுவந்து காண்பி" என்றாள் கிழவி.

மின்னல்போல் மறைந்து மாலையை எடுத்துவந்து அசோகன் கையில் கொடுத்தாள் பிரபா.

ஹாரத்தை வாங்கிப் பார்த்துக்கொண்டிருந்தான் மகத மன்னன்.

"புனிதமான மாலை. கண்ணில் ஒற்றிக் கொள்ளுங்கள்" என்றாள் கிழவி.

மன்னன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்? புத்தபிரானுடைய உடலில் தோய்ந்த ஹாரத்தை ஸ்பரிசம்

செய்த மாத்திரத்தில் ஜன்ம சாபல்யம் என்று தோன்றவில்லையா?'' என்றாள் கிழவி மறுபடி.

''புத்தரை உலகம் போற்றினாலும் அவர் தம் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்பது தான் என் உத்தேசம்'' என்றான் அசோகன். ''யார்? அசோக சக்ரவர்த்தியா இப்படிப் பேசுவது?'' என்றாள் கிழவி ஆச்சரியத்துடன்.

''ஆம், மகதமன்னன் அசோகன் தான், என் மனதில் உள்ளதை இன்று வெளியிடுகிறேன். நாட்டையும் பிரஜைகளையும் பாதுகாப்பதைவிட, கண்மூடி மௌனியாகி விடுவது பெரியதர்மமாகிவிடுமா? இதனால் பிரஜைகளின் பசியும் பிணியும் தீர்ந்து விடுமா?'' என்றான் அசோகன் கம்பீரமாய்.

''ஆனால் துறவு பிரயோஜன மற்றது. வேஷம் என்பதா உங்கள் கருத்து?''

''சந்தேகமில்லாமல். இல்லாவிட்டால் இப்படி எல்லாவற்றையும் விட்டு விட்டு, ஆண்டி வேஷம் பூண்டு, கூட்டம் கூட்டமாகத் திரிவார்களா? கவலையற்ற ஜீவனம்!''

''அசோக மன்னரே, நீர் இவ்விதம் பேசுவது சரியல்ல. இது பெரியவர்களைப் பழிப்பதேயாகும். பூமியில் பிறந்தவர் எவரும் அவருடைய கடமைகளைச் சரிவரப் பார்க்கிறோம் என்று நினைத்துக்கொண்டு இருப்பார்களே ஒழியக் கடமை தவறியவர் என்று நினைக்கமாட்டார். ஆனால் மனிதனிடத்தில் எதாவது ஒரு குறை இல்லாமல் இருக்காது. குற்றம் செய்யாமலும் இருக்க முடியாது. தர்மங்கள் பல உள்ளன. இவைகளில் மனிதனுடைய வாழ்க்கையையே உயர்த்தி, சாந்தியை நிலை நாட்டுவதுதான் பெரிய தர்மம். புத்தபிரான் அதைக் கைப்பிடித்தவர்''

''நீங்கள் கூறுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. மனிதன் தன்னுடைய ஒவ்வொரு கடமையையும் சரிவரப்பார்ப்பானுல் ஒரு பிழையும் செய்யமுடியாது. நெறி தவறாமல் நடக்கவேண்டியதுதான் மனிதனுடைய கடமை. அரசனாகச் சிங்காசனத்தில் இருந்தால் உலகத்திற்கு நன்மை செய்ய முடியாதென்பதா உங்கள் கருத்து?''

''ஸித்தார்த்தரைப்போல எல்லோராலும் துறவு பூண்டுவிட முடியாது அரசே. மனிதன் பச்சாத்தாபப்பட்டு ஞானத்தைப் பெறுகிறானே யல்லது மற்றச் சமயங்களில் அதைப்பற்றிச் சிந்திப்பதுகூடக் கிடையாது. போகட்டும். எட்டாத ஒரு விஷயத்தைப்பற்றி ஏன் பேசவேண்டும்? தாகசாந்தி செய்துகொண்டு இப்பழங்களை அருந்துங்கள்'' என்றாள் கிழவி சாவதானமாக.

இதைக் கேட்டவுடன் அசோகனின் கணகள் சிவந்தன. ''யாரிடத்தில் பேசுகிறோம் என்பது ஞாபகமிருக்கட்டும்! உங்களுக்கே மிகுந்த துணிவு! நான் போக வேண்டும்'' என்று எழுந்தான்.

பிரபாவதி சற்றுத் தள்ளிநின்றாள்—நீர் மோரை எடுத்து அரசனிடம் வணக்கத்துடன் அளித்தாள் கிழவி.

''வேண்டாம்'' என்றான் அரசன்.

''இரத்த வெறி கொண்ட போர்வீரர்களிடமும் பகைவரிடமும் காண்பிக்க வேண்டிய கண்களை ஏழைகளிடம் காண்பித்து என்ன பயன் அரசே? அவைகளால் இக் கிழவியை என்ன செய்யக்கூடும்? போய்வாரும். புத்தபகவான் உங்களைக் காப்பாராக'' என்றாள் கிழவி மறுபடியும்.

ஆவேசத்துடன் கிளம்பினான் அரசன். இவ்வளவு நேரம் பாடலீயைப் பற்றி அவனுக்கு மறந்தே போய் விட்டது. ''என்ன செய்கின்றதோ, சாருகேசியும் வரவில்லையே!'' என்று கவலையுடன் வெளியே வந்தான். அரசனுக்குமுன் பிரபாவதி ''பாடலீ'' யிடம் நின்று கொண்டிருந்தாள்.

அசோகன் அவளைத் திரும்பிப் பார்க்காமலே ''பாடலீ''யின் மேல் பாய்ந்தான்.

''இது பிரசாதம், தட்டாதீர்கள்'' என்று அசோகனிடம் இரண்டு கொய்யாப்பழங்களை நீட்டினாள் பிரபாவதி. அரசன் அவளை முறைத்துப் பார்த்தான். கெஞ்சியவாறு நின்றவளிடமிருந்து உதாசீனமாய்ப் போகவும் மனமில்லை. கையில் பழங்களுடன் காற்றுப் போல் கிளம்பினான். ''பாடலீ'' பாடலீபுரத்தை நோக்கிப் பறந்தது.

நகரை அடைந்து அரண்மனையில் இளைப்பாறினான் அசோகன்.

சாருகேசி தான் திரும்புகையில் நேரமாய்விட்டதாலும் அரசன் ஊருக்குத் திரும்பி இருப்பான் என்று நினைத்துக் கொண்டதாலும் நேரே வந்து விட்டதாகக் கூறினான். நடந்த சங்கதியைப் பற்றி இருவரும் வெகுநேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தனர்.

''அரசே, உண்மையில் இக்கொய்யாப் பழங்கள் எவ்வளவு ருசியாக இருக்கின்றன பார்த்தீர்களா? அவர்கள் இதை அளிப்பதில் அவர்களுக்கு தனிப் பெருமை

இருக்கத்தான் செய்யும்" என்றான் சாருகேசி.

"ஆம் சாரு. இதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால் அக்கிழவிக்கு இவ்வளவு வாய்த் துடுக்கு உதவாது. அரசனை அவள் துரும்பாய் நினைத்துக் கொண்டிருக்கிறாள். புத்தர் துறவு ஒன்றுதான் அவளுக்கு உயர்ந்ததாகப் படுகிறது. இச்சிங்காசனத்தில் இருந்து கொண்டே, அப்புகழையும் அடைந்து தொண்டு செய்து பிரஜைகளின் இஷ்ட தெய்வமாக விளங்கிக் காட்டப்போகிறான் இந்த அசோகன். எந்தப் பச்சாத்தாபத் தி என்னை அணுகும் பார்க்கலாம்!"

"சாரு, இனி நம் நாட்டில் இந்த ஆண்டி பண்டாரங்களை தலைஎடுக்க விடாமல் செய்ய வேண்டும். இதுதான் என் முடிவு. என்ன சொல்கிறாய்?" என்றான் அரசன்.

"அசோகமன்னன் மனம் வைத்தால் நடக்காதது ஒன்று உண்டா?" என்றான் சாரு.

அரசனின் ஆக்ஞை மகத சாம்ராஜ்யம் முழுவதும் பறந்து சென்றது. பழைய கட்டிடங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டன. எங்குப் பார்த்தாலும் சத்திரம் சாவடிகள், குளங்கள், பள்ளிக்கூடங்கள், மாடமாளிகை கோபுரங்கள், லீலா விலாசங்கள், எல்லாம் எழுந்தன. ஏழைகளே இருக்கக் கூடாதென்று அன்னதானம் முதல் ஸ்வர்ண தானம் வரையில் வாரிவிட்டான் அசோகன். எங்கே பார்த்தாலும் களிப்பு. மக்களின் ஆரவாரம். அசோக சக்ரவர்த்திக்கு ஜே! என்ற முழக்கம். நாட்கள் கணக்கிலே மகத சாம்ராஜ்யம் இந்திர லோகம்போல் விளங்குகிறது. எவ்விடம் நோக்கினும் பிரஸன்ன முகமும் வாழ்த்தும் தவிர அரசன் கண்ணிலோ செவிகளிலோ வேறு இல்லை.

"அசோகனுடைய மகிமை இப்பொழுது தெரிகிறதா உலகத்திற்கு?" என்றான் அசோகன்.

"அற்புதம் அரசே" என்றான் சாரு.

மாதங்கள் ஓடின. வருஷங்கள் உருண்டன. அசோக சக்ரவர்த்தியின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் தலை வணங்கினார்கள் எல்லோரும்.

எங்கும் பெயர். எங்கும் புகழ். எப்பொழுதும் துதி மாலை. எப்பொழுதும் செவிகளில் இனிய நாதம். அல்லும் பகலும் விநோதக் காட்சிகள். ஆனந்தக் கடல் சூழ நாட்டிய கீதங்கள். பட்டமகிஷிகளின் கிளிபோன்ற மொழிகள்! ஆனால்......என்னவென்று கூற முடியவில்லை, அசோகனால்.

பசு மரத்தின் ஆணிபோல் பதிந்த அக்கிழவியின் வார்த்தைகளை உள்ளத்திலிருந்து பிடுங்கி எடுக்க முடியவில்லை. அடக்கி அடக்கிப் பார்த்தான். பட்டமகிஷிகளிடம் இருந்து பார்த்தான், சாருவுடன் பேசிப் பார்த்தான், வித்வத் சபை கூட்டினான். நாட்டிய கீதங்களை அனுபவித்தான். இல்லை, அவன் மனம் கேட்கவில்லை. கிழவியின் முகம் அவன்முன் வந்து நின்றது.

ஒருநாள் அதிகாலை. இன்னும் அரண்மனையில் ஒருவரும் எழுந்திருக்கவில்லை. அரசன் தானே சென்று "பாடலீயை" லாயத்திலிருந்து வெளியே கொண்டு வந்தான். கதிரவனின் பொற்கிரணங்கள் கண்களைக் குத்தும் முன்னமேயே கிழவி இருந்த சோலையை அடைந்தான்.

ஒரு தடவை வெகு நேரம் வரையில் இருந்து பழக்கமாகிவிட்டதால் பாடலீ விட்டவுடன் உலாவப் போய்விட்டது.

கிழவி புத்தபிரானை வணங்கிக்கொண்டிருந்தாள். வணங்கி எழுந்து எதிரில் அசோகனைப் பார்த்ததும் சிறிது பிரமித்தவள்போல் நின்றாள். ஒரு கணத்திற்குள் தன்னைச் சமாளித்துக்கொண்டு "வந்தனம் அரசே? நல்வாழ்த்துக் கூறுகின்றேன். இப்படி அமரவேண்டும்" என்று ஆசனத்தைக் காட்டினாள்.

"எல்லோரும் க்ஷேமம் தானே?" என்றான் அரசன்.

"புத்தபிரான் அருளால் க்ஷேமம்தான். வெகு நாட்களாக உங்கள் திருத் தரிசனமே கிடைக்கவில்லையே? என்றாள் கிழவி.

"அப்படி ஒன்றும் நினைத்துவிடவேண்டாம். நகரில் ஆகவேண்டிய சில வேலைகளை முன்னிட்டு அலுவல் மிகவும் அதிகமாக இருந்தது. வேறு ஒன்றுமில்லை." என்றான் அரசன் சிரித்துக்கொண்டே.

"ஹூம்...என்று அலக்ஷியமாய் முணகிக் கொண்டாள் கிழவி.

கோவில் கட்டலாம், கோபுரம் கட்டலாம், சகலவிதமான சௌகரியங்களையும் செய்யலாம், ஜலப் பிரளயமாகப் பொன்னையும் பணத்தையும் வாரி இறைக்கலாம். இவைகளினால் என்ன நன்மை ஏற்பட்டு விடப் போகிறதென்று நினைத்தீர் அரசே?

இரத்தவெறி பிடித்து, சாம்ராஜ்ய வெறி பிடித்து, எவ்வளவோ தேசங்களை ஸ்தாபிதம் செய்திருக்கிறார்கள். இராவணன் கூடத்தான் அரசுபுரிந்தான். ஹிரண்யனும் அரசு புரிந்தான். சரித்திரங்களில் அவர்களைப்பற்றி எழுதுகிறார்கள். ஒவ்வொரு தேசத்தைப் பற்றிய சரித்திரம் வேண்டுமென்ற முறையில் எந்த அரசனைப்பற்றியும் எழுத்து அமைந்துவிடுகிறது. ஆனால் நம் ராஜாதி ராஜனான அசோக சக்ரவர்த்தியின் பெயர் சாதாரணமான எழுத்துக்களால் அல்ல! பொன் எழுத்துக்களால்! என்றும் எவரும் போற்றும்படியான முறையில் பதியவேண்டுமென்ற ஒரே ஆசைதான் எனக்கு. உண்மையில் அவ்விதம் பதியத் தாங்கள் அதற்குத் தகுதியான பெயர் ஒன்றைப் பெறவில்லை, அசோகரே!'' என்று கிழவி முன்னால் கூறுவதற்குள் அரசனுடைய உடல் துடித்துவிட்டது.

''என்னது? அப்படி ஒன்றும் செய்யவில்லையா? எல்லாவற்றையும் பார்த்துக் கேட்டுவிட்டா இப்படிப் பேசுகிறீர்கள்? கலிங்கத்தையும் மகதத்தையும் வந்து பார்த்தீர்களா?'' என்றான் ஆத்திரத்துடன்.

கிழவி நிதானமாகப் பதில் அளித்தாள்.

''பதறுகிறீர்கள் மன்னரே? சூராதி சூரர்களைச் சாய்த்து, மன்னாதி மன்னர் முடிகளை வாங்கிச் சக்ரவர்த்தி என்று பட்டம் பெற்ற நீர், இன்னும் மெய்ஞ்ஞானத்தை உணரவில்லை. சிபிச் சக்ரவர்த்தி உடலையே கழித்துத் தானமாகக் கொடுத்தான்; ராமபிரான் ஒரு ஏழையின் வார்த்தைக்காகத் தம் அருமைச் சீதாதேவியைக் கடும் கானகத்தில் விட்டுவரச்சொல்லி, அபாண்டத்தை நிவர்த்தித்துக்கொண்டார். மகாராஜ ஹரிச்சந்திரன் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு, சுடுகாட்டில் சுங்கம் வசூல் செய்யும் காவற்காரனாக நின்றான். இவ்விதம் ஒவ்வொரு மகானும் உண்மையை உணர்ந்து மண்ணுலகிலேயே தேவர்களாக விளங்கினார்கள். அவ்விதமான ஒரு தொண்டு நீர் புரிந்தது யாது? கண்மூடித்தனமான உத்தரவுகளை அளித்துக்கொண்டு இரத்தத்தைச் சிந்திச் சாம்ராஜ்ய வெறிபிடித்து அலைகின்றீர்! மாடமாளிகை, கூட கோபுரங்கள் கட்டிக் கொடுத்தாலும் ஏழைகளின் குடிசைகளை அழிக்க உமக்கு அதிகாரம் உண்டா? அல்லது உம்முடைய மாளிகையினால் அந்த ஏழை களிப்படைந்துவிடப் போகிறான் என்று நினைத்துவிட்டீரா, அசோக மன்னரே?

''ஒரு ஏழையின் முன்னோர்கள் பூஜித்து வந்த ஓர் இடத்தை இடிக்க உத்தரவுதான் எவ்விதம் மன்னரே உங்களால் கொடுக்க முடியும்?'' என்று ஆத்திரத்துடன் பேசினாள் கிழவி. பேசும் பொழுது அவளுடைய உதடுகள் துடித்தன. கண்ணில் ஜ்வாலை வீசியது. அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''ஜாக்கிரதை! என்னை அவமானப்படுத்துவது என்ற முறையிலேயே பேசி வருகிறீர்கள் நீங்கள், அப்படிஎன்ன குற்றத்தைக்கண்டு பிடித்து விட்டீர்கள். நீங்கள் வீணாக என் கோபத்திற்கு ஆளாகாதீர்கள்'' என்றான் அரசன் கோபத்துடன்.

''ஹூம்......கோபமா? என்னை என்ன செய்ய முடியும் உங்கள் அதிகாரமும் கோபமும்? உண்மை இன்று வெளியாகும். போய் வாரும் அரசே! நியாயமா? தர்மமா? கடமையா? என்ன இருக்கிறது உங்கள் அரசாட்சியில்!'' என்று கிழவி முடிப்பதற்குள்,

''உஷார். இனிவிளையாடினால் அபாயம்'' என்றான் அசோகன். கோபத்தால் அவன் மீசை துடித்தது. கிழவியை உடனே கைது செய்துவிட வேண்டுமென்ற ஆத்திரம் பொங்கியது. காற்றைப்போல் நகரை அடைந்தான்.

உ[illegible]கசியிடம் நடந்ததைச் சொல்லிக் கொ[illegible]டிருந்தான், அடிக்கடி நீண்ட பெருமூச்சுகள் விட்டுக்கொண்டே.

''அரசே! பொறுக்கலாம். இரவு என்ன நடக்கிறதென்று பார்ப்போம்! பொழுது புலர்ந்தால் நம் யோசனை நிறைவேறிவிடுகிறது'' என்றான் சாரு. வெகுநேரம் வரையில் இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் சகல சௌகரியங்களுடன் கூடி இருந்தும் அரசன் மனம் நிலைகொள்ளவில்லை. கிழவியின் ஒவ்வொரு வார்த்தையையும் நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. ''அப்படி ஒரு துணிவா!'', என்று பல்லைக் கடித்துக் கொண்டான்.

பிரதமை. எங்கும் ஒரே இருள் மயம். நடுநிசி. நகரமே நித்திராதேவியின் ஆட்சியில் இருந்தது. ஆங்காங்கு எங்கேயோ ஒரு வெளிச்சம் தென்பட்டதே தவிர வேறு எவ்விடத்திலும் வெளிச்சம் இல்லை. அசோகனால் மஞ்சத்தில் படுக்க முடியவில்லை. வெளித்தாழ்வாரத்திற்கு வந்து ஊரைப் பார்த்தான். சில்லென்ற காற்று

முகத்தில் வீசியதும் உள்ளத்தி லிருந்த கொதிப்புச் சற்றுத் தணிந்தது. அவ்விடத்தி லேயே சற்று நின்றான்.

"அசோகா!"

"எங்கிருந்து இக்குரல்? இந்நேரத்தில்?" இங்குமங்கும் பார்த்தான் அரசன். ஒன்றையும் காணாது, "பிரமையா என்ன?" என்று அவ்விடத்திலேயே நின்றான். மறுபடியும் "அசோகா" என்று இன்னும் சற்று அருகில் கேட்டது அதே குரல்.

"யார்" என்றான் மெதுவாக.

"நான்தான் இப்படி வா!" என்றது அக்குரல் மறுபடியும்.

"யாரது இந்நேரத்தில்?"

"நான்தான். வா இப்படி" என்றது அவரை மறுபடி அக்குரல்.

உற்று உற்றுப் பார்த்தான் அரசன், அவனுக்குச் சிறிது தூரத்தில் நன்றாய் மூடிப் போர்த்திக்கொண்ட உருவம் ஒன்று தென்பட்டது. "யாரது? இந்த நிசியில்?" என்றான் அசோகன்.

"யார் என்று கேட்க வேண்டியது உன் வேலையல்ல. வா என்னுடன்" என்றது அவ்வுருவம்.

"உன் அதிகாரத்திற்கெல்லாம் நான் கட்டுப்பட முடியாது; விஷயமென்ன?" என்று கேட்டான் அரசன்.

"அதெல்லாம் ஒன்றும் கூற எனக்கு அவகாசமில்லை. என்னுடன் வருகிறாயா? இல்லையா?" என்றது அவ்வுருவம் அதிகாரத்துடன்.

"முடியாது! பிறகு" என்றான் அரசன்.

"முடியாவிட்டால் பிறகு வேண்டியதை அனுபவிக்கிறாய். யோசித்துக்கூறு" என்று புறப்பட்டது அவ்வுருவம்.

அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பல யோசனைகளுடன் அவ்வுருவத்தைப் பின் தொடர்ந்தான்.

பல வீதிகளைக் கடந்து எவ்விடத்திற்கோ அழைத்துச் சென்றது அவ்வுருவம் அரசனை. ஒரு வீட்டுத்திண்ணையில் கிழவி ஒருத்தி படுத்திருந்தாள். அரசனுடன் வந்த உருவம் அவளை எழுப்பி "ஏன் கிழவி சௌக்கியமா?" என்றது. இதைக்கேட்ட அந்தக் கிழவி "ஓவென்று" அழுதாள்.

"அம்மா உன்னைக்கண்டு எவ்வளவோ நாளாயிற்று. என்னவென்று சொல்லுவேன். அசோக சக்ரவர்த்தியின் ஆட்சியில் ஒரு குறைவும் இருக்காது என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். இதோபார். அநியாயத்தை என்னவென்று சொல்லுவேன். பாக்கியமும், பணமும், பதவியும் வந்தால் மகன்கூடத் தாயை மறந்துவிடுகிறான். பணத்தைப் பூட்டிப் பூட்டிவைக்கிறான். பசி காதை அடைக்கிறது. இதை அரசனுக்குச் சொல்லுவார் யார்?" என்று முறை இட்டாள்.

"கவலைப்படாதேயம்மா. உங்கள் அரசனுக்கு ஒருவர் சொல்ல வேண்டுமா? எல்லாம் தாமே தெரிந்துகொண்டு வேண்டியது செய்வார்" என்றது அரசனுடன் வந்த உருவம். மறுபடி இன்னும் முன்னே நடந்தது. ஓர் சிறிய அழகிய மாளிகையில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. காவலாளர் அசந்து கிடந்தனர். அவ்வுருவம் அரசனைக் கூடவரும்படி ஜாடைகாட்டி விட்டு மெத்தைப்படிகளில் ஏறியது. அரசன் நான்கடி பின்னாலேயே நின்றான்.

மெத்தையில் சிறிய அரண்மனைக் கூடம் போல் அழகாகச் சிங்காரம் செய்திருந்தது. மகமல்தைத்த உயர்ந்த பஞ்சணைகளுடன் மெத்தையும் மஞ்சங்களும் இருந்தன. உள்ளே யாரோ இருவர் ஒரு விஷயத்தைப் பற்றி விவாதம் செய்வது புரிந்ததும் புரியாததுமாய்க் கேட்டது. போர்வை போர்த்திய உருவம் சாளரத்தின் வழியாக எட்டிப் பார்த்தது. அரசனைச் சமீபத்தில் வரும்படி ஜாடைசெய்தது.

மெதுவாக "உள்ளே கவனி. சத்தம் போட்டால் ஆபத்து" என்றது. அவ்வுருவம் சிறிது நகர்ந்ததும் சாளரத்தினின்று எட்டிப் பார்த்தான் அரசன்.

"யார் உள்ளே! அவனால் நம்ப முடியவில்லை. என்ன இது!" என்றான். பக்கத்தில் நின்ற உருவம் "பதறாதே. இன்னம் பார்" என்று அவன் வாயைப் பொத்தியது.

அஞ்சா நெஞ்சம் படைத்த அசோகனுடைய கை கால்கள் வெலவெலத்துப் போயின.

"வேண்டாம் தாயே, மகத தேசாதிபதியாகிய சாக்ஷாத் அசோக மன்னனின் பட்டமகிஷியாக இருக்கும் வரை உங்கள் பாக்கியமே பாக்கியம். ஐம்புலன்களையும் அடக்கி ஆண்டியாய்த் திரியும் என்னிடம் ஏன் இந்த வாதம்? நான் உங்கள் குழந்தை. என்னை ஆசீர்வதித்து அருளவேண்டும்'

என்று வேண்டினான் இளவரசன் உட்கார்ந்தபடி கை கூப்பிக்கொண்டு.

பட்டமகிஷி கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அரசனின் உள்ளத்தில் ஈட்டிபோல் பாய்ந்தது. ஒரே பாய்ச்சலாகக் கதவை உடைக்கச் சென்றான்.

மறுபடி அவ்வுருவம் அசோகனை அடக்கியது. "பதறாதே வா இப்படி" என்று ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றது.

"என்ன சொல்லுகிறாய்" என்றது.

"இப்பொழுதே எல்லோரையும் த்வம்சம் செய்து விடுகிறேன்" என்று ஆவேசம் கொண்டு குதித்தான் அரசன்.

அவ்வுருவம் தன் மேல் போர்வையை எடுத்தது. அசோகன் ஸ்தம்பித்து நின்றான். அவன் எதிரில் காட்டில் சந்தித்த கிழவி நின்றாள்.

"அசோகா, நீ இன்னும் அறியாதவன். உன் கூட்டுக்குள்ளேயே இவ்விதம் இருக்கும்பொழுது நீ என்ன செய்து, என்ன பயன்? இவர்களை வதம் செய்வதால் உனக்கு நன்மை என்ன வரப்போகின்றது? ஒன்றுமில்லை. இதோ, பார். இந்த மாளிகை எழுப்பி இருக்கும் இடம் எங்கள் மூதாதையர் கட்டிய பழைய வீடு இருந்த இடம். அரசன் ஆஞ்ஞை. அரசிக்குப் போக விலாசமாக மாற்றிவிட்டது. அசோகனுடைய தருமமும் நீதியும் இதுதானா? குழந்தைக்கும் தாய்க்கும் இவ்விபரீதமா? இளவரசனின் நெறி ஒன்று இல்லாவிட்டால் உன் கதி அதோகதிதான்! அசோகா! ஏழைகளுக்குத் துரோகம் செய்தாலும் சூழ்ச்சிகள் செய்தாலும் அவை யாரிடம் பலிக்கும் என்று நினைக்கிறாய்? மகததேசத்து இளவரசனைக் கட்டுப்படுத்திப் பேயனுக்க உன்பட்டமகிஷிகள் ஆயிரம்பேர் வந்தாலும் இயலாதே! புத்ததேவனின் பூர்ண அருள் அவனுக்கு இருக்கும் பொழுது அவனுக்கு என்ன குறை? அசோகா [illegible] பார்த்துக்கொள் அசோக[illegible] பெருமையை! நான் போகிறேன்" என்று கிளம்பினாள் கிழவி.

"அம்மணி, நீங்கள்தான் என் குரு. இன்று தான் என் அகக்கண் திறந்தது. இதோ என் சாம்ராஜ்யம் சகலத்தையும் இளவரசனின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்." என்று கிழவியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டான் அசோகன்.

"குழந்தாய்! நீ எண்ணுவது தவறு. இளவரசன் இதை எல்லாம் வெறுத்தவன். சிங்காசனத்தில் உட்காருவதை அவன் பாக்கியமாகக் கருதுபவனன்று அசோகா! இதுதான் உன் பரீக்ஷை. நான் சென்று வருகிறேன்" என்று திரும்பிக்கூடப் பாராமல் சென்றுவிட்டாள் கிழவி.

அஞ்சாநெஞ்சம் படைத்த அசோகன் உடல்குன்றிப் பேசவகையற்று நின்றான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் [illegible] சாம்ராஜ்யமே இரண்டு பட்டது. மு[illegible] மறுத்து மகததேசத்து இளவரசன் [illegible] பிக்ஷுக்களுடன் நாட்டைவிட்டு வெளி[illegible] விட்டான்.

"ஓ, கோ,! ஓ, கோ!" என்று அலறியது நாடு. முடியைச்சுமையாகச் சுமந்துகொண்டு கண்ணும் கண்ணீருமாய்த் திக்கற்று நின்றான் அசோக சக்ரவர்த்தி! அச்சிறு மாளிகை மண்ணோடு மண்ணாய் அன்றே மாய்ந்தது.

புத்த பிக்ஷுக்களுடன் "போதசத்துவ நாற்றை" அவ்விடத்தில் நடுவதைப் பார்த்து ஜனங்கள் ஆரவாரம் செய்தனர். ஆனந்த பாஷ்பத்துடன் நின்ற கிழவியின் காலில் விழுந்து வணங்கினான் அசோக சக்ரவர்த்தி.!

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
198080
சென்னை-600 008

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# DDT யினுல்




## மிகச் சிறந்த பலன் கிடைக்க வழி

**1** நியோஸிட் பவுடரை உபயோகியுங்கள். பூச்சிகளை ஒழிக்கும் DDT தயாரிப்புகளை முதன் முதலில் உபயோகத்திற்குக் கொண்டு வந்தவரான ஜே. ஆர். கேய்கி என்பவரளித்துள்ள தயாரிப்பு முறைப்படி நியோஸிட் 10-சதவிகிதம் DDT சேர்த்துத் தயாரிக்கப்பட்டதாகும். எல்லாப் பிரபல கடைகளிலும் இது பவுடர் ஒத்தி சகிதம் 2-அவுன்ஸ் டப்பிகளிலும், ½-பவுண்டு டின்களிலும், 1-பவுண்டு தூவு டின்களிலும் கிடைக்கும். ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய ஸ்தாபனங்களுக்கு 28-பவுண்டு டின்களிலும் கிடைக்கும்.

**2** நியோஸிட்டை, பூச்சிகள் நடமாடுமிடங்களிலெல்லாம், குறிப்பாக சமையலறை உக்கிராண அறைகளில் இலேசாகத் தூவுங்கள். பட்டும் படாமல் பலதடவை தூவுவதைவிட எல்லா அறைகளிலும் நன்ருக ஒருதடவை தூவினுல் நல்ல பலன் கிடைக்கும். ஒவ்வொரு அறையிலும் சரியானபடி இதைத் தூவி அப்படியே சில தினங்களாவது போட்டு வைத்திருந்தால் கரப்பன் பூச்சி, ஈக்கள், எறும்புகள், கொசுக்கள், விளக்குப் பூச்சிகள், வெள்ளைப் பாச்சாக்கள் முதலியவை எல்லாம் கட்டாயம் ஒழிந்து விடும். அவசியமானுல் மீண்டும் பிரயோகிக்கவும்.

# நியோஸிட்டை

## சரியானபடி உபயோகியுங்கள்!

கேய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிமிடெட்
Geigy
நெவில் ஹவுஸ்
நிக்கல் ரோடு, பம்பாய்

D.J.K. 5813 TM

விநியோகஸ்தர்கள்-மைசூர் ஸ்டேட் & ஸீடெட் டிஸ்டிரிக்ட்களுக்கு
M/s முஹம்மது ரஹீம் கலீலி, ௯௯-B உஸ்மான்கான் ரோடு, பெங்களூர் ஸிடி.

தென்னிந்தியாவிற்கு
M/s அடிஸன் & கோ லிமிடெட், மவுண்ட் ரோடு, மதராஸ்



— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு

— அகமகிழ்கிறாள் —

இம் மகிழ்ச்சியை நீங்களும்

- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

# கோகுல் கூந்தல் தைலம்

## சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

**T. S. R. & CO.** PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.